# பல்லவர் ஆட்சி

★

ஆசிரியர் :
புலவர் சொ முருகேசனர்

★

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்
79, பிரகாசம் சாலை, சென்னை-1.
1979

சொக்கலிங்கம் முருகேசனர் (1914)

© 1979 THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,

கிளைகள் :

திருநெல்வேலி-6 மதுரை-1 கோயமுத்தூர்-1
கும்பகோணம்-1 திருச்சிராப்பள்ளி-2

கழக வெளியீடு : கசுஅஎ

முதற்பதிப்பு : மார்ச்சு 1979

V2117,D.F1
N 79

PALLAVAR AATCHI

அப்பர் அச்சகம், சென்னை - 600 001. (பு-2)

# பதிப்புரை

சங்ககாலத்தில் சேர சோழ பாண்டியர் என்னும் மூவேந்தர்க்கு மட்டுமே உரியதாயிருந்த தமிழகம் இடைக்காலத்தில் களப்பிரர், பல்லவர் முதலிய பிற மன்னர்களாலும் ஆளப்பெறும் நிலையடைந்தது.

பல்லவர்கள் கி. பி. மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தொண்டை மண்டலத்தில் இருந்த களப்பிரர்களோடு போரிட்டு அவர்களைத் தெற்கு நோக்கிச் செல்லுமாறு செய்தனர். பாலாறு வரையிலும் வென்று கைக்கொண்ட பல்லவர்கள் காஞ்சிமாநகரைத் தலைநகராகக்கொண்டு சிறப்பாக ஆண்டனர். அவர்கட்கு மாமல்லபுரமே கடற்கரைப் பட்டினமாக இருந்தது.

பின்னர் சிவஸ்கந்தவர்மன் என்ற பல்லவ மன்னன் களப்பிரரை வென்று தென்பெண்ணையாறு வரை பல்லவ நாட்டை விரிவாக்கினான்.

கி. பி. ஆறாம் நூற்றாண்டின் கடைப்பகுதியில் சிம்மவிஷ்ணு என்னும் பல்லவ மன்னன் களப்பிரரை வென்று சோணாட்டையும் கைப்பற்றினான்.

கி. பி. ஏழாம் நூற்றாண்டில் அரசுபுரிந்த மகேந்திரவர்மனும், அவன் மகன் நரசிம்மவர்மனும் பல்லவ மரபில் மிக்க சிறப்புடன் விளங்கினார்கள். அவர்கள் காலத்தில்தான் மலைகளைக் குடைந்து மண்டபங்களும் குகைக்கோயில்களும் அமைக்கும் வேலைகள் மிகுதியாக நடைபெற்றன. கற்சிற்பங்களால் பெருமை பெற்று விளங்கும் மாமல்லபுரம் பல்லவ மன்னர்களின் சிறப்பை விளக்கிக்கொண்டிருக்கின்றன.

பல்லவர்களுடைய காலத்தில் தோன்றிய கல்வெட்டுக்களும், செப்புப் பட்டயங்களும், நூல்களும் அவர்களின் வரலாறுகளை அறிய உதவுகின்றன.

பல்லவர் வரலாற்றினை விளக்கி, ஆங்கிலத்தில் பல கட்டுரைகள் வெளிவந்தன. பின்னர் வரலாற்றுப் பேராசிரியர் திரு. பி. டி. சீனிவாச ஐயங்கார் அவர்களும், டாக்டர் மா. இராசமாணிக்கனார் முதலியவர்களும் நூல்களும் ஆராய்ச்சிக் கட்டுரைகளும் எழுதினார்கள். இவற்றை அடிப்படையாகக்கொண்டு இந் நூல் எழுதப்பெற்றுள்ளது.

நூலகத் தலைவர்களும், பள்ளிகளில் ஆசிரியர்களும் உள்ள இந்நூல் மாணவர்களிடையிலும் தமிழ்மக்களிடத்திலும் நன்கு பரவுதற்கு வேண்டிய உதவிகள் செய்யுமாறு வேண்டுகிறோம்.

**சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.**

# உள்ளுறை

பக்கம்


| | | |
|---|---|---|
| 1. | பல்லவர்க்கு முற்பட்ட தமிழகம் | 1 |
| 2. | பல்லவரைப் பற்றிய சான்றுகள் | 9 |
| 3. | பல்லவர் யாவர்? | 19 |
| 4. | களப்பிரர் யாவர்? | 29 |
| 5. | முதற்காலப் பல்லவர் (கி. பி. 250 - 340) | 34 |
| 6. | இடைக்காலப் பல்லவர் (கி. பி. 340 - 575) | 35 |
| 7. | பிற்காலப் பல்லவர் (கி. பி. 575 - 900) | 36 |
| 8. | சிம்மவிஷ்ணு (கி. பி. 575 - 615) | 40 |
| 9. | மகேந்திரவர்மன் (கி. பி. 615 - 630) | 43 |
| 10. | நரசிம்மவர்மன் (கி. பி. 630 - 668) | 51 |
| 11. | பரமேசுவரவர்மன் (கி. பி. 670 - 685) | 61 |
| 12. | இராசசிம்மன் (கி. பி. 666 - 705) | 67 |
| 13. | புதிய பல்லவர் மரபு | 72 |
| 14. | இரண்டாம் நந்திவர்மன் (கி. பி. 710 - 775) | 76 |
| 15. | தந்திவர்மன் (கி. பி. 775 - 825) | 81 |
| 16. | மூன்றும் நந்திவர்மன் (கி. பி. 825 - 850) | 83 |
| 17. | பிற்பட்ட பல்லவர் | 87 |
| 18. | பல்லவர் ஆட்சிமுறை | 90 |
| 19. | கலைக் கழகங்கள் | 97 |
| 20. | சமயநிலை | 101 |
| 21. | இசையும் நடனமும் | 104 |
| 22. | ஓவியங்களும் சிற்பங்களும் | 107 |
| 23. | பல்லவர் காலத்துக் கோயில்கள் | 108 |

# பல்லவர் ஆட்சி

## 1. பல்லவர்க்கு முற்பட்ட தமிழகம்

### தமிழகம்

தமிழகம் தொன்றுதொட்டே சேரநாடு, சோழநாடு, பாண்டிய நாடு என்னும் மூன்று பிரிவுகளாக இருந்து வந்தது. இம் மூன்று நாடுகளையும் சேரர், சோழர், பாண்டியர் என்னும் மூன்று மன்னர் மரபினரும் நெடுங்காலமாக ஆண்டு வந்தனர். இவர் அனைவருமே தமிழை வளர்த்தவர் என்று கூறுதல் பொருந்துமாயினும், பாண்டிய மன்னர்களே தமிழ்ச் சங்கங்களை அமைத்துத் தமிழைப் பாதுகாத்ததோடு, தமிழையும் புலவர்களையும் வளர்த்த பெருமைக் குரியவர்கள் என்று பெருமையோடு கூறப்படுகின்றனர். பாண்டியர் நடத்திய சங்கங்களில் மூன்றாவதாகவும் இறுதி யாகவும் இருந்தது கடைச் சங்கமேயாகும். அக் கடைச் சங்கம் கி. மு. நான்காம் நூற்றாண்டிலிருந்து கி. பி. இரண்டாம் நூற்றாண்டு வரை நடந்ததாகும் என்பது ஆராய்ச்சியாளர் துணிபு. அச் சங்கத்தில் தோன்றியனவாகக் கருதப்படும் நூல் களுள் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்பன சிறப்புடையன. அந் நூல்களை ஆராயும்போது, அக்காலத் தமிழகம் - பல்லவர் ஆட்சி தோன்றிய கி. பி. மூன்றாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட தமிழகம் எவ்வாறு இருந்தது என்பதை நன்கு அறியலாம்.

### பாண்டிய நாடு

பாண்டிய நாடு என்பது மதுரை, இராமநாதபுரம், திருநெல் வேலி மாவட்டங்களும், தென்குமரிப் பகுதியும், கீழ்க்கோடிக்கரை யும் சேர்ந்த நிலப்பரப்பாகும். இதன் தலைநகராக இருந்தது மதுரை. கொற்கை, காயல் என்பன இந் நாட்டின் துறைமுகங்கள்.

கொற்கைத் துறை கடலில் முத்து எடுக்கும் தொழிலில் புகழ் பெற்று விளங்கியது. கி. மு. நான்காம் நூற்றாண்டில் சந்திர குப்தன் என்னும் மன்னனிடத்தில் அமைச்சனாக இருந்த சாணக்கியன் பொருள் நூல் (அர்த்த சாத்திரம்) ஒன்று எழுதியுள்ளான். அந் நூலில் அவன் கொற்கைத் துறையைப்பற்றிய கருத்துக்களைக் கூறியுள்ளான். கடைச்சங்க காலத்தில் பாண்டிய நாட்டையாண்ட மன்னர் பலருள் சிறந்தவர் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனும், சிலப்பதிகாரத்தில் காணப்படும் ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியனுமேயாவர்.

## சோழ நாடு

சோழ நாடு என்பது தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களும் கிழக்குக் கடற்கரைச் சமவெளியும் சேர்ந்த நிலப்பரப்பாகும். இந்த நாட்டைச் சோழ மன்னர் மரபினர் நீண்ட காலமாக ஆண்டு வந்தனர். இந்த நாட்டின் தலைநகரம் திருச்சிராப்பள்ளியை அடுத்த உறையூர் ஆகும். புகார் நகரம் என்னும் காவிரிப் பூம்பட்டினமே கடற்கரை நகரமாக இருந்தது. கடற்கரை நகரமாகிய பூம்புகார் தலைநகரைப்போலவே சிறப்புற்றுச் சில மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் நிலவியது. கி. மு. முதல் இரண்டு நூற்றாண்டுகளிலும் கி. பி. முதல் இரண்டு நூற்றாண்டுகளிலும் காவிரிப்பூம்பட்டினம் சிறந்த துறைமுகப்பட்டினமாக இருந்தது என்பதற்குச் சான்றுகள் பல உள்ளன. பட்டினப்பாலை என்னும் நூல் அந் நகரத்தின் சிறப்புக்களை விளக்கிக் கூறுகிறது. இந் நாட்டிலிருந்து சங்க காலத்தில் பலவகைப் பொருள்கள் அயல் நாடுகளுக்குக் கடல் வழியாக அனுப்பப்பட்டன. கரிகாற் சோழ மன்னன் ஆண்ட காலத்தில் இத் துறைமுகம் உயர்ந்த நிலையில் இருந்தது. அயல்நாட்டு வணிகர் கூட்டங் கூட்டமாக வந்து புகார் நகரில் குடியேறியிருந்தனர். அவர்கள் யவனர் எனப் பழந்தமிழ் நூல்களில் கூறப்பட்டுள்ளனர். சிலப்பதிகாரம் மணிமேகலை என்னும் நூல்கள் எழுதப்பட்ட கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இப் பெருநகரம் சிறந்த வாணிப நிலையமாக விளக்கம் பெற்று இருந்தது. கடைச் சங்ககாலச் சோழ மன்னருள் பெருமை பெற்றவன் கரிகாற் சோழனேயாவன். நெல்வளம் மிக்க சோழ நாடு, 'சோழவளநாடு சோறுடைத்து'

எனப் புலவர்களால் புகழப்பெற்றது. சோழ நாட்டின் பெருமைக்குப் பொன்னியாறு என்னும் காவிரியாறு அடிப்படையாக இருந்தது.

## சேர நாடு

சேரநாடு என்பது கொச்சி, திருவாங்கூர் நாடுகளும் மேல் கடற்கரை வெளியும், மலையாள மாவட்டங்களும் சேர்ந்த நிலப்பரப் பாகும். இதன் தலைநகரமாக இருந்தது வஞ்சிமா நகரமாகும். முசிறி, தொண்டி என்பன சிறந்த துறைமுகப்பட்டினங்களாக இருந்தன. இச் சேர நாட்டிலிருந்து, மிளகும், யானை மருப்பும், தேக்கு, அகில், சந்தனம் முதலிய மரங்களும், மணம் வீசும் ஏலம் முதலியனவும் கடல் வழியாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. சேர மன்னர்களுக்கு வானவர் என்னும் சிறப்புப் பெயரும் உண்டு. நெடுங்காலமாக அம் மன்னர்களே ஆண்டு வந்தனர். இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் என்னும் மன்னனும் அவன் மகன் சேரன் செங்குட்டுவனும் இந்த நாட்டைச் சிறப்போடு ஆண்டார்கள். இஃது இப்பொழுது கேரள நாடு என வழங்கப்படுகிறது.

## தொண்டை நாடு

இதற்குத் 'தொண்டை மண்டலம்' என்னும் பெயரும் உண்டு. மிகப் பழங்காலத்தில் தொண்டைநாடு 'குறும்பர் நிலம்' என்னும் பெயர் பெற்றிருந்தது. குறும்பர் தம் ஆடு மாடுகளை மேய்த்துக்கொண்டு, அங்குக் காலங்கழித்து வந்தனர். அவர்களே தங்கள் நாட்டை 24 கோட்டங்களாக வகுத்தனர்; காவிரிப் பூம்பட்டினத்து வணிகருடன் கடல் வாணிகம் செய்தனர். பிற்காலத்தில் ஆதொண்ட சக்கரவர்த்தி என்பவன் இக் குறும்பரை வென்று அந் நாட்டைக் கவர்ந்து, அப் பகுதிக்குத் தொண்டைமண்டலம் எனப் பெயரிட்டனன் என்று செவிவழிச் செய்தி கூறுகின்றது.

## கரிகால் வளவன்

கரிகாற் சோழன் அந் நாட்டைக் கைப்பற்றினான். பின்னர்த் தொண்டைக் கொடியால் சுற்றப்பட்டுக் கடல்வழி வந்த இளந் திரையன் அந்த நாட்டை ஆண்டான். அவன் நாகர் மகளுக்கும் கரிகாலனுக்கும் பிறந்தவன் எனக் கருதுகின்றனர்.

இரண்டாம் குலோத்துங்க சோழனிடம் உயர் அலுவலராக இருந்தவரும், தொண்டை மண்டல அறிஞருமான சேக்கிழார் பெருமான் வல்லார் வாய்க்கேட்டுணர்ந்த செய்தி யொன்றைக் கூறியுள்ளார். "கரிகாலன் இமயம் நோக்கிச் சென்றபொழுது, வேடன் ஒருவன் எதிர்ப்பட்டுக் காஞ்சி நகரத்தின் வளமையைக் கூறினன் என்றும், அப் பேரரசன் அம் மொழிகேட்டு மகிழ்ந்து, அந் நகரத்தைத் தனதாக்கிக்கொண்டு, குன்று போன்ற மதிலை எழுப்பிப் பலரைக் குடியிருத்தி அந் நகரத்தை மேலும் வளப்படுத்தினன்" என்றும் கூறியுள்ளார்.

முதற் குலோத்துங்க சோழமன்னன் காலத்து நூலும் செயங்கொண்டார் பாடியதுமாகிய கலிங்கத்துப் பரணியும் இச் செய்தியைக் கூறுகின்றது.

சோழ மன்னருள் கரிகாலன் ஈடும் எடுப்பும் அற்ற பெரு மன்னனாக விளங்கினன் என்பதை இலக்கியங்களும், பட்டயங்களும் கூறுகின்றன. பிற்காலத் தெலுங்கு நாட்டுச் சோழரும் தம்மைக் கரிகாலன் மரபினர் என்று கூறிக்கொண்டனர் என்பதிலிருந்து கரிகாலன் பெருமையும் ஆட்சிச் சிறப்பும் புலப்படுகின்றன. அவன் ஆட்சி ஆந்திரநாடு வரை பரவியிருந்தது. அந்தச் சோழ மரபினர், "எங்கள் முன்னவனான கரிகாலன் தான் வெற்றிகொண்ட அரசரைக்கொண்டு காவிரிக்குக் கரையிடுவித்தனன்" என்று பட்டயங்களில் கூறி மகிழ்வாராயினர். "கரிகாலன் போர் வன்மையுடையவன். இமயம் வரை சென்றவன். இமயத்தில் புலிக்கொடி நாட்டியவன். வழியில் இருந்த மன்னர்கள் அளித்த பரிசுப் பொருள்களைப் பெற்று மீண்டவன்" என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது.

எனவே, இதுகாறும் கூறிய செய்திகளால் கரிகாற் சோழன் காலத்தில் தொண்டை மண்டலம் சோழர் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது என்று கொள்ளுதல் தவறாகாது. கரிகாலன் காலம் முதல் பல்லவர் கைப்பற்றும் வரை தொண்டை மண்டலம் சோழர் ஆட்சியிற்றான் இருந்ததென்பதை யாரும் மறுத்திலர். கரிகாலன் காலத்தை அறுதியிட்டுக் காண்போமாயின் அக் காலம் முதல் எத்துணை நூற்றாண்டுகள் தொண்டை மண்டலம் சோழர்

ஆட்சியில் இருந்தது, அப்பொழுது என்ன என்ன நன்மைகளைப் பெற்றது என்பனவற்றை அறியலாம்.

இமயம் வரை வடநாடு சென்ற மன்னர்களுள் குறிப்பிடத் தக்கவர் மூவர். ஒருவன் கரிகால் வளவன், இரண்டாமவன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், மூன்றுமவன் சேரன் செங்குட்டுவன் என்பதைச் சங்க நூல்கள் வாயிலாக அறியலாம். கரிகாலன், செங்குட்டுவன் என்னும் இருவர் கால வரலாறுகளும் கடைச் சங்கத்தையும், தொண்டை மண்டலத்தையும் பொதுவாகத் தமிழக நிலையையும், பல்லவர்க்கு முற்பட்ட இந்திய வரலாற்று நிலையையும் அறியப் பேருதவி புரிவன. ஆதலின், முதலிற் செங்குட்டுவன் காலத்தையறிய முயல்வோம்.

செங்குட்டுவன் பத்தினிக்கு விழா எடுத்தபோது சேரர் தலைநகருக்கு வந்திருந்த அரசருள் 'கடல்சூழ் இலங்கைக் கயவாகு' என்னும் இலங்கை வேந்தனும் ஒருவன் ஆவன் எனச் சிலப்பதிகாரம் கூறுகின்றது. இலங்கையில் இருந்த பத்தினிச் சிலை ஒன்று இப்பொழுது இங்கிலாந்து நாட்டுக் காட்சிச்சாலையில் இருக்கின்றது. கயவாகு மன்னனுடைய காலம் கி. பி. 171—193 என இலங்கைப் பட்டயம் கூறுகின்றது. இதுவே செங்குட்டுவன் வாழ்ந்த காலமாகும்.

கி. பி. 166—196 வரை தமிழகத்துக்கு வடக்கே கங்கையாறு வரை சிறப்புடன் இருந்தவன் ஆந்திர சதகர்ணி அரசன் (யக்ஞஸ்ரீ என்பவன்). இவனையும் இவனைச் சேர்ந்தவரையும் நூற்றுவர் கன்னர் என்று நூல்கள் கூறுகின்றன. சதகர்ணி என்பதன் மொழிபெயர்ப்பு நூற்றுவர் கன்னர் என்பது.

கயவாகுவின் காலம்—கி. பி. 171—193.

யக்ஞஸ்ரீயின் காலம்—கி. பி. 166—196 ஆகும்.

எனவே, கி. பி. 166—193க்கு உட்பட்ட காலத்தில்தான் செங்குட்டுவன் வடநாடு சென்று மீண்டு வந்திருத்தல் வேண்டும்.

## கரிகாலன் காலம்

கரிகாலன் இலங்கைத் தீவை வென்று, ஆயிரக்கணக்கான அடிமை மக்களைத் தமிழ்நாட்டிற் கொண்டுவந்ததாக வரலாறு கூறுகின்றது. இலங்கை வரலாறு கூறும் மகாவம்சம் என்ற நூலில் பின்வரும் குறிப்புக்கள் காணப்படுகின்றன :—

(1) கி. மு. 170 முதல் கி. மு. 100 வரை இலங்கையைத் தமிழரசர் ஆண்டனர்.

(2) கி. மு. 44 கி. மு. 17க்கு இடைப்பட்ட காலத்தில் 15 ஆண்டுகள் தமிழர் இலங்கையை ஆண்டனர்.

(3) கி. பி. 660—1065க்கு உட்பட்ட இடைக் காலத்தில் தமிழர் இலங்கைமீது படையெடுத்தனர், என்பனவே அக் குறிப்புக்களாகும்.

(4) வடநாட்டுப் படையெடுப்புக்கேற்ற முதற்காலம் கி. மு. 232 கி. மு. 184. இலங்கையைத் தமிழர் ஆண்ட முதற்காலம் கி. மு. 170 கி. மு. 100.

(5) வடநாட்டுப் படையெடுப்புக்கேற்ற இரண்டாம் காலம் கி. மு. 148 கி. மு. 27. இலங்கையைத் தமிழர் ஆண்ட காலம் கி. மு. 44 கி. மு. 17க்கு உட்பட்ட 15 ஆண்டுகள்.

இவற்றுள் முன்னதைவிட இரண்டாம் காலமே மிகவும் பொருந்துவதாகும். இக் காலமே கரிகாலன் காலமாகும். இக் காலத்தில் கடல் வாணிபம் உயர்நிலையில் இருந்தது. கரிகாலன் காலத்தில் புகார் நகரம் சிறந்த துறைமுகப் பட்டினமாயிருந்தது என்பது பட்டினப்பாலையால் புலப்படுகிறது.

## புதிய சான்று

இமயம்வரை சென்றுமீண்டவன் சோழமன்னருள் கரிகாலன் ஒருவனேயாவன். அவன் சென்று மீண்டது உண்மையே யென்பதற்குப் புதிய சான்று ஒன்றும் கிடைத்துள்ளது.

சிக்கிம் நாட்டுக்குக் கிழக்கே, அதற்கும் திபெத்துக்கும் உள்ள எல்லையை வரையறுத்து நிற்கும் மலைத் தொடருக்குச்

சோழர் மலைத் தொடர் என்பதும், அதனையடுத்துள்ள கணவாய்க்குச் சோழர் கணவாய் என்பதும் பெயர்களாம். சோழமலைத் தொடர் (Sola Range) என்றும் அதனையடுத்துள்ள சோழர் கணவாய் (Sola Pass) என்றும் கூறப்படுகின்றன. திரு. மு. இராகவ ஐயங்காரவர்கள் இச் செய்தியைப் புதுவதாகக் கண்டு எழுதியுள்ளார்.

''பகைவிலக் கியதுஇப் பயங்கெழு மலையென
இமையவர் உறையும் சிமையப் பிடர்த்தலைக்
கொடுவரி ஒற்றிக் கொள்கையிற்''

பெயர்ந்த கரிகாற் சோழ மன்னன் வரலாறு உண்மையென்பதும், அவன் இருந்த காலம் கி. மு. முதல் நூற்றாண்டின் இடைப்பட்ட காலமேயாதல் வேண்டுமென்பதும் விளங்கும் செய்திகளாம்.

சேரன் செங்குட்டுவன் வடநாடு சென்ற காலம் ஏறக்குறைய கி. பி. 166—193 எனக் கூறலாம.

## காஞ்சியின் வளம்

கி. மு. ஐந்தாம் நூற்றாண்டுக்குமுன்னரே காஞ்சிபுரம் செல்வாக்கும் சிறப்பும்மிக்க நகரமாய் விளங்கியது. கல்வியிற் சிறந்த சான்றோர் பலர் தோன்றவும் வாழவும் இடமாயிருந்த காஞ்சிமாநகர், கரிகாலன் காலத்தில் மேலும் வளமாக்கப் பெற்றது.

கரிகாலன் காஞ்சியின் எல்லை மதில்களை எழுப்பினான். வடவேங்கடம் வரை தொண்டை நாட்டை விரிவாக்கினான். வேளாண்குடிகளைக் கொண்டுவந்து குடியேற்றினான். அவன் காலத்துத் தொண்டைமான் இளந்திரையன் சோழரின் துணையரையனாக இருந்து தொண்டைநாட்டை யாண்டுவந்தான். அவன் காலத்திலும் தொண்டைநாடு வளம் பல பெற்று விளங்கியது.

## மாமல்லபுரம்

தொண்டை நாட்டில் இது சிறந்த கடற்கரைப் பட்டினமாக விளங்கியது. வடக்கிலிருந்து குதிரைகளைக் கொண்டுவந்த நாவாய்கள் கடற்கரையில் தங்கியிருந்தன. மீன்வலைப் பரதவர்

மலிந்த தெருக்களும், காவலர் காத்து நிற்கும் பண்டசாலைகளும் அங்கு இருந்தன. மாடங்களிற் பெண்கள் பந்தடித்தும், மணற் பரப்பில் சுறங்காடியும் பொழுதுபோக்கினர். கடற்கரையில் வானளாவிய மாடங்களில் விளக்குகள் ஒளிவீசிக் கடலில் வந்த நாவாய்களுக்கு வழிகாட்டின.

தொண்டைமான் நால்வகைப் படைகளையும் உடையவனாய் இருந்தான். ஆனால், கி. பி. இரண்டாம் நூற்றாண்டில், அஃதாவது சிலப்பதிகார மணிமேகலை காலத்தில் காஞ்சிபுரத்தைத் தலைநக ராகக்கொண்ட தொண்டைநாடு இளங்கிள்ளி என்பவன் ஆட்சி யில் இருந்தது.

கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் இடையில் சோழர் வலிமை குன்றியதனால், பல்லவர் தலையெடுக்கத் தொடங்கினர். அதனால் மூன்றாம் நூற்றாண்டில் பல்லவர் ஆட்சி தொண்டைநாட்டில் நடைபெற்றது.

# 2. பல்லவரைப் பற்றிய சான்றுகள்

சங்க நூல்களில் பல்லவ மன்னர்களைப் பற்றிய குறிப்புக்கள் இல்லை. சங்க நூல்களின் காலமாகிய கி. பி. இரண்டாம் நூற்றுண்டுக்குப் பிற்பட்ட நூல்களில் பல்லவரைப் பற்றிய குறிப்புக்கள் வருகின்றன பல்லவர்களின் தலைநகரமாகக் காஞ்சிபுரம் விளங்கியது. அவர்கள் காலத்தில் அந் நகரம் சிறப்புற்றிருந்தது.

## (அ) லோகவிபாகம்

இது வடமொழியில் எழுதிய திகம்பர சமண நூலாகும். இதில் (1) பாணராட்டிரத்தில் உள்ள பாடலி என்னும் சிற்றூரில் (பாடலிபுரம் என்னும் திருப்பாதிரிப்புலியூரில்) சர்வநந்தி என்பவர் வாழ்ந்தார். அவர் 'லோகவிபாகம்' என்னும் அந்த நூலைத் திருத்தியமைத்தார் என்ற குறிப்பு உள்ளது.

அங்ஙனம் அந்த நூல் ஒழுங்காக அமைக்கப்பெற்ற காலம் காஞ்சி அரசன் சிம்மவர்மன் பட்டம்பெற்ற இருபத்திரண்டாம் ஆண்டாகும். அஃதாவது, சக ஆண்டு 380. கிறித்துவ ஆண்டு கி. பி. 458. எனவே, சிம்மவர்மன் என்ற பல்லவன் பட்டம்பெற்ற யாண்டு கி. பி. 436 ஆகும்.

## (ஆ) அவந்தி சுந்தரி கதை

இதுவும் வடமொழி நூல். இதன் முகவுரையில் பாரவி என்னும் வடமொழிப் புலவர், விட்ணுவர்த்தனன், துர்விநீதன், சிம்மவிட்ணு பல்லவன் என்னும் மூவரையும் கண்டு பரிசு பெற்றமை கூறப்பட்டுள்ளது. பாரவிக்குப் பரிசு கொடுத்த மூவேந்தரும் ஏறக்குறைய ஒரே காலத்தவர் என்பதில் ஐயமில்லை. துர்விநீதன் கி. பி. 604இல் அரியணையேறினன். விட்ணுவர்த்தனன் கி. பி. 614இல் மன்னன் ஆனன். ஆதலால், சிம்மவிட்ணு பல்லவன் காலமும் அதுவேயென்பதில் ஐயமில்லை.

## (இ) மத்தவிலாசப் பிரகசனம்

இந்த நூல் திருநாவுக்கரசர் என்னும் அப்பர் காலத்தவனாகிய மகேந்திரவர்மன் என்னும் பல்லவ மன்னனால் வரையப் பெற்ற சிறிய நாடக நூல் ஆகும். இந்த நூலில் அக்காலத்து வாழ்ந்த புத்தர், காபாலிகர், சமணர் முதலிய பல சமய மக்களின் பழக்க வழக்கங்கள் கூறப்பட்டுள்ளன. இவன் காலம கி. பி. 615—630 என்பது ஆராய்ச்சியாளர் கருத்து.

## (ஈ) சைவத் திருமுறைகள்

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் முதலிய நாயன்மார்கள் பாடிய தேவாரப் பாடல்களும் மாணிக்கவாசகர் பாடிய திருவாசகம் முதலியனவும் மற்றும் பல நூல்களும் சைவத் திருமுறைகள் என்று வழங்கப்படுவன. அவற்றுள் அப்பர் பாடியருளிய 4, 5, 6ஆம் திருமுறைகள் என்னும் தேவாரப் பாடல்களில் மிகுதியாகவும், சம்பந்தர் பாடியருளிய முதல் மூன்று திருமுறைகளில் ஓரளவு குறைவாகவும் சமணரைப் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன.

கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் முற்பாதியில் இருந்த சுந்தரர் பாடிய தேவாரத்தில்,

"........மண்ணுலகம் காவல்பூண்ட
உரிமையால் பல்லவற்குத் திறைகொடா மன்னவரை மறுக்கஞ்
பெருமையாற் புலியூர்ச் சிற்றம்பலத்தெம் பெருமான்" [செய்யும்

என்னும் குறிப்புக் காணப்படுகின்றது. இதனால், பல்லவர் பேரரசர் என்பதும, அவரது ஆட்சிக்குள் சிற்றரசர் பலர் இருந்தனர் என்பதும், அவர்கள் திறைகொடாமல் இருந்தனர் என்பதும் புலப்படுகினறன.

## (உ) நாலாயிரப் பனுவல்

திருமங்கையாழ்வார் கும்பகோணத்தை அடுத்த நந்திபுரம் (நாதன் கோவில் என இக்காலத்து வழங்கப்படுகின்றது) என்னும் வைணவப் பதியைப்பற்றிப் பாடியுள்ளார். அதன்கண் "கோட்டை

மதில்களையுடையது; காவல் மிகுந்தது" என்ற குறிப்புக்கள் காணப்படுகின்றன. நந்திபுரம் என்ற பெயர் நந்திவர்ம பல்லவன் பெயரால் ஏற்பட்டது.

நந்திவர்ம பல்லவ மல்லன் பெயரால் நடத்தப்பெற்ற போர்களில் 'நென்மலி' என்னும் இடத்துப் போர் ஒன்றாகும். அதனைத் திருமங்கையாழ்வார்,

"நென்மலியில் வெருவச் செருவேல் வலக்கைப்
பிடித்த படைத்திறல் பல்லவர் கோன்"

என்று பாடியுள்ளார். வயிரமேகன் என்னும் இராட்டிரகூட மன்னன் (கி. பி. 725—758) காஞ்சியில் பல்லவ மல்லனோடு இருந்தான் என்று வேறொரு செய்யுளில் இந்த ஆழ்வாரே பாடியுள்ளார். பல்லவர் சாளுக்கியரோடு செய்த போரில் பயன் படுத்திய போர்க் கருவிகளின் பெயர்களையும் இசைக் கருவிகளின் பெயர்களையும் குறிப்பிட்டுள்ளார். எனவே, இவர் நந்திவர்ம பல்லவ மல்லன் காலத்தவர் (கி. பி. 710—775) என்பதில் ஐயமில்லை. இவர் பாடல்களும் பல்லவர் வரலாற்றுக்கு உதவி செய்வன ஆகும்.

## நந்திக்கலம்பகம்

இந்நூல் மூன்றாம் நந்திவர்மன் (கி. பி. 825—850) காலத்தது. இம் மன்னனைப் பற்றியது. இவன் போர்ச் செயல்களையும், நகரங்களையும், பிறவற்றையும் இந்நூல் விளக்கமாகக் குறிக்கின்றது. இவ் வரசன், பல்லவர்கோன், மல்லைவேந்தன், மயிலை காவலன், காவிரி வளநாடன் எனப் பாராட்டப் பெற்றுள்ளான். இவன் தமிழ்ப் புலவர்களை ஆதரித்தவன் என்பது 104, 107 ஆம் செய்யுட்களால் தெரிகின்றது.

## பாரத வெண்பா

இந்நூல் முழுவதும் இன்று கிடைக்கவில்லை. ஒரு பகுதியாகிய சிறிதளவே கிடைத்துள்ளது. அதுவே 'உத்தியோக பருவம்' என்பது. மூன்றும் நந்திவர்மன் தெள்ளாறு என்னும் இடத்தில் பகைவர்களை வென்றான் என்ற செய்தி இந்நூலில் கூறப்பட்டுள்ளது.

பெரிய புராணம்

இந்நூல் கி. பி. 12ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சேக்கிழார் என்னும் பெரும்புலவராற் பாடப்பெற்றது. ஆயினும், இந் நூலின்கண் இடம்பெற்றுள்ள பெரும்பாலான நாயன்மார் காலம் பல்லவர் காலமேயாகும்.

இரண்டாம் குலோத்துங்க சோழனுடைய அமைச்சர் போன்ற உயர் அலுவலராக இருந்தவர் சேக்கிழார். ஆதலால், பல்லவர் பரம்பரை, ஆட்சி முறை முதலிய விவரங்களை நன்கு அறிந்திருத்தல் கூடும். மேலும், அவர் பல்லவரால் ஆளப்பெற்ற தொண்டை மண்டலத்தில் பல்லவபுரத்தை அடுத்த குன்றத் தூரில் பிறந்து வளர்ந்தவர். அவர் பல்லவர் கோயிற் பணி களையும், கல்வெட்டுச் செய்திகளையும் செவிவழிச் செய்திகளையும் நன்கு அறிந்திருத்தல் கூடும். பெரிய புராணத்தில் பல்லவரைப் பற்றிய செய்திகள் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன.

காடவர்கோன் கழற்சிங்கர் என்பவர் அறுபான் மும்மை நாயன்மாருள் ஒருவர். இவர் "கூடலர் முனைகள் சாய வடபுலங் கவர்ந்துகொண்டு" அரசாண்டவர் என்று பெரியபுராணம் கூறுகின்றது. 'தொல்லைப் பல்லவர்' என்றும் அவரைப் பற்றிக் கூறுகின்றது. எனவே, சேக்கிழார் பல்லவருள் இருபிரிவினர் பற்றிய (முன்னைப்பல்லவர், பின்னைப்பல்லவர்) செய்திகளை நன்கறிந் தவர் என்பது தெளிவாகின்றது அன்றோ? ஐயடிகள் காடவர் கோன் நாயனார் வரலாற்றையும் சேக்கிழார் பாடியுள்ளார். இந்த நாயனாரும் பல்லவ மன்னரேயாவார். இவர்,

> "மன்னவரும் பணிசெய்ய வடநூல்தென் தமிழ்முதலாம்
> பன்னுகலை பணிசெய்ய"

நாடாண்ட பேரரசரேயாவார். இவர் சைவப்பதிகளை வணங்கி வெண்பாக்கள் பல பாடிப் பெறற்கரும் பேறுபெற்றவர்.

திருநாவுக்கரசர் காலத்தில் அரசனாயிருந்த குணபரன் என்னும் (கி. பி. 615 - 630) குணதரன் அல்லது முதலாம் மகேந்திரவர்மன் முதலிற் சமணனாயிருந்து, திருநாவுக்கரசருக்குப் பல இன்னல்கள் செய்ததும், பின்னர் சமண சமயத்தைவிட்டுச் சைவனாக

மாறியதும் பெரியபுராணத்துள் கூறப்பட்ட செய்திகளாகும். அவன் மகன் நரசிம்மவர்மன் (கி. பி. 630 - 668) பல்லவ மன்னனாக இருந்தபோது சேனைத்தலைவராக இருந்த பரஞ்சோதியார் என்னும் சிறுத்தொண்டர், சாளுக்கியர்மீது படையெடுத்துச் சென்று அவர்தம் தலைநகரான வாதாபியை வென்றதும், பின்னர் சிறுத் தொண்டர் திருஞானசம்பந்தரின் நண்பரானதும் பெரிய புராணத்துள் கூறப்பட்டுள்ளன.

பூசலார் காலத்துக் காடவர்கோன் என்னும் இராசசிம்மன் (கி. பி. 680 - 710) எடுத்த கற்றளி கைலாச நாதர் கோயில் என இப்பொழுது வழங்கப்படுகிறது. சிவபெருமான் அம் மன்ன னுடைய கனவிற் சென்று கூறினமை முதலிய செய்திகளைச் சேக்கிழார் பூசலார் புராணத்தில் விளக்கிக் கூறியுள்ளார். இறைவன் கனவிற் சென்று கூறியதாகப் பெரியபுராணம் கூறும் செய்திகள், இராசசிம்மன் அசரீரி கேட்டதாகக் கைலாச நாதர் கோயில் கல்வெட்டு ஒன்றில் குறிக்கப்பட்டுள்ளது. எனவே, சேக்கிழார் பெருமான் கல்வெட்டுக்களையும் கருத்திற் கொண்டே புராணம் பாடியுள்ளார் என்பது இங்கு அறியற் பாலதாகும்.

பல்லவர் காலத்தில் அவர்கள் ஆட்சிக்குட்பட்டிருந்தவர்கள் தொண்டை நாட்டினரான நரசிங்க முனையரையர், திருக்கோவலூர் அரசரான மெய்ப்பொருள் நாயனார் முதலியோர் வரலாறுகளும் பெரியபுராணத்தில் உள்ளன. சோழநாடு பல்லவர்க்கு உட்பட்ட போது சோழ மன்னர் தலைமறைந்து முடியிழந்து குறுநில மன்னராகி வாழ்ந்தனர். அந்தத் தாழ்ந்த நிலையிலும் அச் சோழ மன்னருக்குப் படை வீரரும் படைத்தலைவர் பலரும் இருந்தனர். பாண்டிய மன்னர்கள் சிறிது சிறிதாகக் களப்பிரரையும், பின்னர்ப் பல்லவரையும் வென்று பேரரசை நிலைநிறுத்தினர். இந்த விவரங்களும் பெரியபுராணத்தில் கூறப்பட்டுள்ளன.

இதுகாறும் கூறப்பெற்ற வடமொழி நூல்களையும் தென் மொழி நூல்களையும் படிப்பவர், சங்க காலத்திற்குப் பிறகு, வேங்கடத்துக்குத் தெற்கே பல்லவர் என்னும் புதிய மரபினர் ஏறக்குறைய 600 ஆண்டுகள் நிலைத்து நின்று தமிழகத்தை ஆண்டனர் என்பதை அறியலாம்.

## ஊர்களின் பெயர்கள்

சங்க நூல்களிற் காணப்பெருத ஊர்ப் பெயர்கள் பிற்காலத்தில் காணப்படுகின்றன. அவை பல்லவர் மரபை விளக்குவனவாக உள்ளன. பல்லாவகமு (பல்லவபுரம்) பல்லவ நத்தம், நந்திபுரம், பரமேசுவரமங்கலம், மகேந்திரமங்கலம், மகேந்திரவாடி, மாமல்லபுரம், குமாரமார்த்தாண்டபுரம் என்பன பல்லவர் பெயரால் வந்த ஊர்ப் பெயர்கள்.

## குகைக்கோயில்களும் கற்கோயில்களும்

சங்க நூல்களில் குகைக்கோயில்களோ, கற்கோயில்களோ குறிக்கப் பெறவில்லை. பெரியபுராணத்தில் கற்கோயில், குகைக் கோயில்களைப் பற்றிய குறிப்புக்கள் வருகின்றன. மாமல்லபுரம், காஞ்சிபுரம், மகேந்திரவாடி, பல்லவபுரம், தளவானூர், சீயமங்கலம், திருச்சிராப்பள்ளி, சிங்கவரம் கீழ்மாவிலங்கை, திருக்கழுக்குன்றம், மாமண்டூர், வல்லம், மண்டபப்பட்டு, மேலைச்சேரி, சித்தன்னவாசல் முதலிய ஊர்களில் உள்ள குகைக்கோயில்களையும் கற்கோயில்களையும் காண்கின்றோம். இவை பல்லவ மன்னர்களால் அமைக்கப் பெற்றவை என்பதையும் உணர்கின்றோம்.

இதுகாறும் கூறியவற்றால் (1) சங்க காலத்துக்குப் பிறகு தமிழ்நாட்டில் பல்லவர் என்னும் மரபினர் பேரரசர்களாக இருந்தனர் என்பதும், (2) அவர்கள் பல குகைக்கோயில்களையும் கற்கோயில்களையும் அமைத்தனர் என்பதும், (3) சில ஊர்கட்குத் தங்கள் பெயர்களை இட்டு வழங்கினர் என்பதும், (4) அவருள் பலர் சைவராக இருந்தனர் என்பதும் ஒருவாறு உணர்தல் கூடும். பல்லவர் வரலாறு முழுவதும் துருவி ஆராய்தற்குப் போதிய சான்றுகள் இன்னும் பல உள.

## பட்டயங்களும் கல்வெட்டுக்களும்

முற்கால அரசர்கள் கோவில்களுக்கும், பிராமணர்களுக்கும் அறக்கொடைகள் தந்த விவரங்களைச் செப்புப் பட்டயங்களில் எழுதி வைத்தனர். அவற்றில் 'இன்ன அரசன் பட்டமேற்ற இத்தனையாவது யாண்டில்' இந்தத் தானம் அளிக்கப்பெற்றது என்ற செய்தி சிறப்பாகக் குறிக்கப்பெற்றது. சில பட்டயங்களில்

அவ் வேந்தனுடைய முன்னோர் பெயர்களும், அவர்களுடைய விருதுப் பெயர்களும், அவர்கள் செய்த போர்களும், வேறு அறச்செயல்களும் குறிக்கப்பெறுவதும் உண்டு. இப்படிப்பட்ட பட்டயங்கள் அரசர் மரபுக்கு ஏற்றபடியும், நாட்டு முறைமைக்கு ஏற்றபடியும் பல மொழிகளில் எழுதப்பெறுவது வழக்கம். பல்லவர் தமிழகத்திற்கே புதியவராதலின் அவர் பட்டயங்களும், கல்வெட்டுக்களும் முதலில் பிராக்ருத மொழியிலும், வடமொழியிலுமே வரையப்பெற்றன; பிற்காலப் பல்லவர்கள் தமிழ்மொழியில் வரையத் தொடங்கினர். இங்ஙனம் மூன்று மொழிகளிலும் எழுதப்பட்ட பட்டயங்கள் கிடைத்துள்ளன. கி. பி. ஏழாம் நூற்றாண்டு முதல் ஆட்சிபுரிந்த பல்லவர்கள் பல செய்திகளைக் கருங்கற்களில் வெட்டி வைத்துள்ளனர். அவற்றை அவர்கள் அமைத்துள்ள குகைக்கோயில்களிலும், கற்கோயில்களிலும் இப்பொழுதும் கண்டு மகிழலாம். பல்லவர்கள் அமைத்த பட்டயங்களையும் கல்வெட்டுக்களையும்போல, அவர்கள் காலத்து இருந்த பிறநாட்டு மன்னர்களுடைய பட்டயங்களைக்கொண்டும் ஓரளவு பல்லவர் வரலாற்றை அறியலாம். கதம்பர், இரட்டர், சாளுக்கியர், நாகர், கங்கர், பாண்டியர், முத்தரையர் முதலிய அரச மரபினர் அமைத்த பட்டயங்களும், கல்வெட்டுக்களும் உதவி புரிகின்றன.

## பிற நாட்டார் குறிப்புக்கள்

(1) 'இயூன் - சங்' என்னும் சீனநாட்டு வழிப்பயணத்தார் (யாத்திரிகர்) மன்னர் ஹர்ஷனையும், இரண்டாம் புலிகேசியையும் கண்டு பேசியபின் இறுதியில் நம் தமிழ்நாட்டில் உள்ள காஞ்சிபுரத்திற்கும் வந்தார். இங்குச் சில திங்கள் தங்கியிருந்தார். காஞ்சிபுரத்தைப் பற்றியும், தமிழ்மக்களைப் பற்றியும், காஞ்சியில் இருந்த சமயங்கள், கோயில்கள் முதலியனபற்றியும் தமது பயண நூலில் குறித்திருக்கின்றார். அவர் காஞ்சியில் இருந்த காலம் ஏறக்குறைய கி. பி. 640 ஆகும்.

(2) ஏறக்குறைய அதே காலத்தில் இலங்கையை நோக்கிப் பல்லவர் படையெடுப்பு நடந்தது என்பதை இலங்கை வரலாற்று நூலாகிய மகாவம்சம் கூறுகின்றது. ஆதலின், இங்குக் குறிப்பிட்ட இரண்டு நூல்களும் பல்லவர் வரலாற்றை அறியத் துணைபுரிவனவாகும்.

## ஆராய்ச்சியாளர் உழைப்பு

கி. பி. 19ஆம் நூற்றாண்டில் நமது நாட்டில் மேனாட்டு ஆராய்ச்சியாளர் பலர் இருந்தனர். அவர்களுள் சிறந்தவரான சர் வால்டர் எலியட் என்பவரே முதன்முதலில் பல்லவரைப் பற்றி ஆராய்ந்து எழுதினவர். அவர் 'மாமல்லபுரத்திலுள்ள குகைக் கோயில்களை அமைத்தவர் பல்லவரே' என்பதைக் கண்டுபிடித்தார். அதே நேரத்தில் டாக்டர் பர்னெல் என்பவர் அங்கிருந்த கல்வெட்டுக்களை முயன்று படித்துணர்ந்து' 'அவை பல்லவர் அமைத்த கல்வெட்டுக்களே' என்பதை மெய்ப்பித்தார். பின்னர், ஜேம்ஸ் பேர்கூசன் என்பவர் மகாபலிபுரத்திற்குச் சென்று அங்குள்ள சிற்ப வேலைப்பாடுகள் கி. பி. 6, 7ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை என்ற முடிவு செய்தார். அதன்பின்னர் அதே 19ஆம் நூற்றாண்டின் இறுதியில்தான் பல்லவரைப் பற்றிய செப்புப் பட்டயங்களும் கல்வெட்டுக்களும் வெளிவந்தன. அவற்றைக் கண்ட ஆராய்ச்சியாளர் பெரிதும் வியப்படைந்தனர். பல ஆண்டுகள் அவற்றை ஆய்ந்து பின்னர் வெளியிட்டனர். இம் முயற்சியில் முதலிடம் பெற்றவர் டாக்டர் ஃப்ளீட் (Dr Fleet) என்பவரே. இவருடைய முயற்சிக்குப் பின்னர் பல கல்வெட்டுக்களும், மகாபலிபுரம் ஒழிந்த பிற (பல்லவர் கோயில்கள் முதலியன இருக்கின்ற) இடங்களும் ஆராய்ந்து காணப்பட்டன. செப்புப் பட்டயங்களையும், கல்வெட்டுக்களையும் பேரறிஞர் பலர் ஆராய்ந்து விளக்கக் குறிப்புக்களுடன் அச்சிட்டு வெளியிட்டனர். அதற்குப் பின்னர் கிடைத்த புதிய பட்டயங்களும் கல்வெட்டுக் களும் ஆண்டுதோறும் ஆராய்ச்சியாளர் வெளியிடும் தென் இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளன. இவைகளேயன்றி இன்னும் எண்ண முடியாத அளவில் பல பட்டயங்களும், கல்வெட்டுக்களும் இருத்தல் கூடும் என்று அறிஞர் கருதுகின்றனர். அத்தகைய பட்டயங்களும் கல்வெட்டுக் களும், நாளடைவில் வெளிவரும்போது பல்லவர் வரலாறு மேலும் விளக்கம் பெறும் என்பதில் ஐயமில்லை.

## நூலாசிரியர்கள்

டாக்டர் ஃப்ளீட் என்னும் அறிஞருக்குப் பின்பு வெங்கையா என்பவர் 1907இல் பல்லவர் வரலாற்றை ஓரளவு தமிழ் நூல்

உணர்ச்சியுடன் திறமையாக ஆராய்ந்து வெளியிட்டுள்ளார். 1917 இல் துப்ராய் என்னும் பெயர் கொண்ட பிரெஞ்சுப் பேரறிஞர் 'பல்லவர்' என்னும் பெயர் கொண்ட ஆராய்ச்சி நூலை வெளியிட்டார். இவர் அதுகாறும் எவரும் கண்டறியாத பல புதிய கல்வெட்டுக்களையும் பல்லவர் சின்னங்களையும் கண்டு ஆராய்ந்து விளக்கிக் கூறியுள்ளார். இவர் 'பல்லவர் சின்னங்கள்' 'பல்லவர் ஓவியம்' என்னும் பெயர் கொண்ட வெளியீடுகளையும், 'டெக்கானது பண்டைவரலாறு' என்னும் ஆராய்ச்சி நூலையும், 'தென் இந்தியப் படிமக்கலை' என்ற நூலையும் வெளியிட்டுள்ளார். இவர் பல்லவர் வரலாற்று ஆராய்ச்சிக்கும் வெளியீடுகளுக்கும் பெருந்துணை புரிந்தவர் ஆவார்.

சென்னைப்பல்கலைக்கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியராக இருந்த டாக்டர் கிருட்டினசாமி ஐயங்கார் சிறந்தவராவார். இவர் 1923 இல் 'இந்திய வரலாற்று வெளியீடு' என்னும் வெளியீட்டில் 'பல்லவர் தோற்றமும் முற்பட்ட வரலாறும்' என்னும் தலைப்பில் அரிய ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்று வரைந் துள்ளார். கோபிநாதராவ், கே. வி. சுப்பிரமணியஐயர், அரங்கசாமி சரசுவதி முதலியோர் வரைந்த ஆராய்ச்சிக் கட்டுரை களும் பல்லவர் வரலாற்றை விளக்குவனவாகும். பேராசிரியர் பி. டி. சீனிவாசஐயங்கார் தமிழில் 'பல்லவர் சரித்திரம்' வெளியிட் டுள்ளார். 1928 இல் சென்னைப் பல்கலைக் கழகத்தில் வரலாற்றுத் துறையில் ஆராய்ச்சிமாணவராக இருந்த திரு. ஆர். கோபாலன் என்பவர் பண்பட்ட ஆராய்ச்சி முறையில் பல்லவர் வரலாற்றை விளக்கமாக எழுதியுள்ளார். அவருக்குப்பின் பிரெஞ்சுப் பேரறிஞர் ஹீராஸ் பாதிரியார் பல்லவரைப்பற்றி அரிய ஆராய்ச்சி நூல் ஒன்று எழுதியுள்ளார்.

கல்கத்தாப் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளராக இருந்த தினேஷ் சந்திர சர்க்கார் 'சாதவாகனர்க்குப் பின்வந்த அரசர்' என்னும் அரியநூல் ஒன்று எழுதியுள்ளார். அதன்கண் பல்லவரைப்பற்றி இயன்றவரை ஆராய்ந்துள்ளார். டாக்டர் மீனாட்சி என்னும் அம்மையார் பல இடங்கட்கும் நேரே சென்று ஆராய்ந்து 'பல்லவர் கால ஆட்சியும் வாழ்க்கையும்' என்னும் அரிய ஆராய்ச்சி நூலை எழுதி 1938 இல் வெளியிட்டுள்ளார்.

இவ்வம்மையார் அரும்பாடுபட்டுச் செய்துள்ள திறம் வியத்தற் குரியது. பல்லவர் வரலாற்று நூல்களுள் இவருடைய நூல் சிறப்பிடம் பெறத்தக்கதாகும்.

மேற்கூறியவற்றுடன் ஆராய்ச்சி நின்றுவிடமாட்டாது. ஆராய்ச்சி முடிவற்றது. எந்த நேரத்திலும் எந்தப் பழைய இடத்தும் புதிய பொருள் கிடைத்தல் கூடும். இதுவரை வெளிவராத பட்டயமோ, கல்வெட்டோ, வேறு புதை பொருளோ கிடைத்தல் கூடும். ஆராய்ச்சியாளர் கண்ணும் கருத்துமா யிருந்து கண்டுபிடித்து அறிக்கைகளில் வெளியிடுவது நாட்டுக்குச் செய்யும் நல்ல தொண்டாகும்.

# 3. பல்லவர் யாவர்?

பல்லவர்கள் ஏறத்தாழ 700 ஆண்டுகள் தென் இந்தியாவில் நிலைத்திருந்து ஆட்சி புரிந்தவர்கள். ஆயினும், அவர்களைப் பற்றிய பட்டயங்களும் கல்வெட்டுக்களும் கிடைத்திருந்தும் அவர்கள் யாவர்? எங்கிருந்து வந்தவர்? என்னும் வினாக்கட்கு விடையளித்தல் எளிதில் இயலாததாக இருக்கிறது. அவர்களைப் பற்றிக் கிடைத்துள்ள மூலஆதாரவுகளைக் கொண்டு, அவர்கள் பெற்றுவந்த பட்ட முறைகளை முழுவதும் முறைப்படுத்தவும் முடியவில்லை.

## பல திறப்பட்ட கோள்கைகள்

இந்திய வரலாற்று நூலாசிரியரான வின்ஸென்ட் ஸ்மித் என்பவர் தாம் எழுதிய 'பழைய இந்திய வரலாறு' என்னும் நூலின் முதற்பதிப்பில், 'பல்லவர் என்பவர் பஹ்லவர் என்னும் பாரசீக மரபினர்' என்றும், இரண்டாம் பதிப்பில், 'பல்லவர் என்பவர் தென்னிந்தியாவிற்கே உரியவர். அவர் கோதாவரிக்கும் கிருஷ்ணைக்கும் இடைப்பட்ட வேங்கி நாட்டவராக இருக்கலாம்' என்றும், மூன்றாம் பதிப்பில், 'பஹ்லவர் என்னும் சொல்லைப் பல்லவர் என்னும் சொல்லோடு ஒப்பிட்டுப் பார்த்து, அவ் வொப்புமை மட்டுமே கொண்டு, பல்லவர் பாரசீகர் எனக் கூறுதல் தவறு; பல்லவர் என்பவர் தென்னிந்தியரே ஆவர்' என்றும் முடிவு கூறியுள்ளனர்.

மேலும் ரைஸ் என்னும் ஆராய்ச்சியாளர் 'பஹ்லவர் மரபினரே பல்லவர்' என்று முடிவு செய்தனர். பேராசிரியர் துப்ராய் என்பவர் 'கி. பி. 150இல் ருத்ரதாமன் என்னும் ஆந்திரப் பேரரசனுக்கு அமைச்சனாக இருந்த சுவிசாகன் என்பவன் பஹ்லவன். அவன் மரபினரே ஆந்திரப் பேரரசு அழிவுறுங் காலத்தில் அதன் தென்பகுதியைத் தமதாக்கி ஆண்டவராவர். பட்டயங்களிற் காணப்படும் முதற் பல்லவன்

அரசன் அல்லன். ஆந்திரப் பேரரசின் தென்மேற்கு மாகாணங்களை ஆண்டு வந்த சூட்டுநாகர் பெண்ணை மணந்து பட்டம் பெற்றவனே முதற் பல்லவன். அவனே வீரகூர்ச்சவர்மன் என்று பல்லவர் பட்டயங்களிற் கூறப்படுமவன்' என்று வரைந்துள்ளார்.

இவ்வாறு பல்லவர் என்பார் பஹ்லவர் மரபினரே என்று முடிவு கொண்டவர் பலர் உளர். இலங்கையிற் சிறந்த ஆராய்ச்சியாளராக இருந்த இராசநாயகம் என்பவர், இலங்கையை அடுத்துள்ள (காரைத்தீவு என்னும்) மணிபல்லவம் பல்லவர் பிறப்பிடமாகும் என்றும், மணிமேகலையில் கூறப்பட்டுள்ள சோழனை மணந்த பீலிவளை என்பவள் நாகர் மகள் ஆவாள் என்றும், அவர் பெற்ற மைந்தனே திரையால் கடத்தப்பட்டுக் கரை சேர்ந்த முதற் பல்லவன் என்றும், அவன் தொண்டைக் கொடியால் சுற்றப்பட்டிருந்தமையின் தொண்டைமான் என்றும், திரைகளால் தள்ளப்பட்டு வந்தமையால் திரையன் என்று வழங்கப்பெற்று வந்தானென்றும், அவன் மரபினரே தம் தாயகப் பெயரைத் தாங்கி (மணிபல்லவம்) பல்லவர் எனப்பட்டனர் என்றும், பல்லவரின் முதல் அரசன் பெரும்பாணாற்றுப்படையிற் புகழப்பெற்ற தொண்டைமான் இளந்திரையன் ஆவான் என்றும் விளக்கியுள்ளார்.

யாழ்ப்பாணம் யாழ்ப்பாண மக்களால் மணிபுரம் எனப் படுகிறது. அங்கு நாகரும் இருந்தமையால் 'மணிநாகபுரம்' என்னும் பெயர் யாழ்ப்பாணத்துக்கு அமைந்தது. யாழ்ப்பாணம் போத்து எனவும் அழைக்கப்பட்டது. யாழ்ப்பாணத்திலிருந்து போந்தவராதலின் தம்மைப் போத்தர் அல்லது 'பல்லவர்' என்று பல்லவர் கூறிக்கொண்டனர். போத்து, பல்லவம் என்பன ஒரே பொருளுடையன. மணிபல்லவம் என்ற ஒரு தீவின் பெயரும் மணிமேகலையில் குறிக்கப்படுதல் காண்க. இவற்றை நன்கு ஆராயுமிடத்து, 'பல்லவம்' என்னும் சொல் மணிமேகலை காலத்து மக்களுக்கு நன்கு விளங்கியிருத்தல் திண்ணம். பல்லவத்திலிருந்து வந்த அவர்கள் தம்மைப் பல்லவர் என்று கூறிக்கொண்டமை இயல்பாகும். 'வீரகூர்ச்சன் நாகர் மகளை மணந்து அரசு பெற்றான்' என்று பல்லவர் பட்டயம் கூறுவதும், கரிகாலன் நாகர் மகளை மணந்து பெற்ற இளந்திரையன்

தொண்டை மண்டலத்தை ஆண்டான் என்பதும் ஆராய்ச்சிக் குரியன. மேலும், பல்லவர் இன்ன இடத்திலிருந்து தாம் வந்ததாக ஒரு பட்டயத்திலும் கூறிக்கொள்ளவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

ஆராய்ச்சியாளராகிய எலியட் சேவேல் முதலியோர் தொண்டை மண்டலத்துப் பழங்குடியினரான குறும்பர் மரபினரே பிற்காலப் பல்லவர் என்று முடிவு செய்தனர். குறும்பர் ஆடு மாடுகளை மேய்ப்பவர். இதனைக் கருத்திற்கொண்டு, பால் - அவர் (பால் கறப்பவர் - குறும்பர்) என்பதே பல்லவர் எனத் திரிந்திருக் கலாம் என முடிவு செய்தவரும் சிலர் உண்டு.

மணிமேகலையில் கூறப்படும் ஆதொண்டச் சக்கரவர்த்தி 'குறும்பரை வென்று அவர்தம் நிலத்தைத் தனதாக்கித் தன் பெயர் இட்டுத் தொண்ட மண்டலம் என வழங்கினன்' என்பது செவிவழி வரும் செய்தியாகும்.

### பல்லவர் தமிழர் அல்லர்

பல்லவர் தென்னிந்தியரே என்று வின்ஸென்ட் ஸ்மித் என்பவர் தம் நூலின் மூன்றும் பதிப்பில் கூறியுள்ள கருத்தே சிறந்ததாகும். பிராகிருத மொழியில் வெளியிடப்பட்ட பல்லவ பட்டயங்களோ, அல்லது கல்வெட்டுக்களோ, 'பல்லவர் பஹ்லவர் மரபினர்' என்றோ, வேற்று நாட்டவர் என்றோ, திரையர் மரபினர் என்றோ, மணிபல்லவத் தீவினர் என்றோ குறிக்கவில்லை. சங்க காலத்தில் தொண்டை மண்டலத்தை ஆண்ட இளங்கிள்ளி, இளந்திரையன் என்பவர்கட்கும், சிவஸ்கந்தவர்மன், புத்தவர்மன், வீரகூர்ச்சவர்மன் என்பார்க்கும் தொடர்பு ஏதும் இருந்திருத்தல் இயலாது என்பதை அறிஞர் அறிதல் கூடும்.

மேலும், பல்லவர் பட்டயங்கள் அனைத்தும் பிராகிருத மொழியிலும் பெரும்பாலானவை வடமொழியிலும் இருக்கின்றன. பல்லவர் சோழ மரபினர் ஆயின், இளந்திரையன் வழி வந்தவ ராயின் தமிழில் எழுதாது, தமிழ்மக்களிடத்தில் பரவாதனவும், தமிழ்மக்கட்கே புரியாதனவும் ஆகிய வடநாட்டு மொழிகளில் எழுதத் துணிந்திருப்பரோ? பல்லவர் காலத்தில் வடமொழி

தொண்டை மண்டலத்தில் செல்வாக்குப் பெற்றிருந்தது என்பது உண்மை. பாரவி, தண்டி முதலிய வடமொழிப் புலவர்கள் பல்லவர் ஆட்சியில் செல்வாக்குப் பெற்றிருந்தனரேயன்றித் தமிழ்ப் புலவர்கள் கி. பி. எட்டாம் நூற்றாண்டுவரை பல்லவ மன்னர்களின் ஆதரவு பெற்றதாகத் தெரியவில்லை.

இதன் மேலும் பல்லவர் தம்மைப் 'பாரத்வாச கோத்திரத்தார்' என்று பட்டயங்களிலும், கல்வெட்டுக்களிலும் கூறிக்கொள்கின்றனர். தமிழ் அரசர்கள் 'இருடிகள் கோத்திரம்' அறியாதவர்கள். குடிவழி அறிந்தவர்கள். தமிழர்க்கு இருடிகள் கோத்திரம் ஏது ? இன்னபிற காரணங்களால் பல்லவர் தமிழரின் வேறுபட்டவர் என்பதைத் தெளிவுறக் காணலாம்.

## தொண்டை நாடும், சங்க நூல்களும்

வடபெண்ணை யாற்றைத் தென் எல்லையாகவும் சோணை யாற்றை வட எல்லையாகவும் அரபிக்கடலை மேற்கு எல்லையாகவும் கலிங்கத்தையும் வங்க மாகாணத்தையும் கிழக்கு எல்லையாகவும் கொண்ட ஆந்திரப் பெருநாடு கி. மு. 184 முதல் கி. பி. 260 வரை செழிப்புற்று இருந்தது. வடபெண்ணை முதல் தென்பெண்ணை வரையிருந்த நிலப்பரப்பே அக்காலத் தொண்டை மண்டலம் எனப் பட்டது. அஃது அருவாநாடு, அருவா வடதலை நாடு என இரண்டு பிரிவுகளாக இருந்தது. அருவா நாட்டில் காஞ்சிமா நகர் சிறப்புற்றிருந்தது. காஞ்சி முதல் வடபெண்ணை வரை இருந்த பகுதி அருவா வடதலை நாடு எனப்பட்டது. இது குன்றுகளும் காடுகளும் நிறைந்த இடமாகும். காளத்தி முதலிய மலையூர்களைத் தன்னகத்தே பெற்றது. அவ்விடம் இன்றும் 'தொண்டைமான் மாகணி' (மாகாணம்) எனப்படுகின்றது. இரண்டு வெள்ளாறுகட்கு இடையில் உள்ள நிலப்பகுதியே சோழ நாடு. தென் வெள்ளாற்றுக்குத் தென்பால் உள்ள நிலமே பாண்டிய நாடு. கொச்சி, திருவாங்கூர் நாடுகள் அடங்கிய இடமே பழைய சேர நாடாகும். குடகு முதலிய மலைநாட்டு இடங்களும் அவற்றைச் சார்ந்த கடற்கரையும் கொங்காணம் எனப்படும். கொங்காணத்தைச் சங்ககாலத்தில் நன்னன் என்பவன் ஆண்டு வந்தான்.

திருப்பதியைத் தன்னகத்தே கொண்ட மலைநாட்டுப் பகுதி அருவா வடதலை நாடு எனப்பட்டது. அதனைத் திரையன் ஒருவன் ஆண்டு வந்தான். அவன் தலைநகரம் 'பாவித்திரி' என்பது. அஃது இப்பொழுதைய கூடூர் தாலுக்காவில் உள்ள 'ரெட்டி பாளையம்' என்னும் ஊராகும். இந்த நிலப்பகுதி முன்னாளில் 'காகந்தி நாடு' எனப் பெயர் பெற்றிருந்தது. காகந்தி என்பது புகார் நகரத்தின் மற்றொரு பெயராகும். சோழ மன்னர் இப் பகுதியைக் கைக்கொண்டமையினால் இதற்குக் காகந்தி நாடு (புகாருக்கு உரிமையான நாடு) என்று பெயரிட்டனர் என்று கருதலாம். 'கரிகால் வளவன் காடுகெடுத்து நாடாக்கினான். விளைநிலங்களை உண்டாக்கினான்; ஏரி குளங்களை வெட்டு வித்தான்; தொண்டை மண்டலத்தை நாடாக்கி வளம்பெறச் செய்தான். நாகரிகத்தைத் தோற்றுவித்தான்' என்று பட்டினப் பாலை முதலிய தமிழ்நூல்கள் கூறுகின்றன. இங்ஙனம் தொண்டை மண்டலம் சோழர் ஆட்சிக்கு வந்தது முதல் சோழர் மரபினர் ஒருவர் தொண்டை மண்டலத்தை ஆண்ட செய்தி சங்க நூல்களில் காணக்கிடக்கிறது. திரையன் அருவா வடதலை நாட்டை ஆண்டபோது, இளந்திரையன் அருவா நாட்டை ஆண்டனன் என்பதும் அறிதல்வேண்டும். தொண்டைமான் இளந்திரையன் என்பவன் காஞ்சியை ஆண்ட தமிழ் அரசன் எனப் பெரும்பாணாற்றுப்படையில் கூறப்படுகிறான்.

தொண்டைமான் இளந்திரையன் காலத்தில் காளத்தி முதலிய மலை நாடுகளைச் சேர்ந்த காடுகளில் களவர் என்னும் வகுப்பினர் வாழ்ந்திருந்தனர். அவர்கட்குத் தலைவனாக இருந்தவன் புல்லி யென்பவன். இவன் திரையனுக்கு அடங்கியிருந்தவனா அல்லது மாறுபட்டவனா என்பதை அறியமுடியவில்லை. இவ் வளவே அகநானூறு முதலிய சங்க நூல்களால் நாம் அறியக் கிடக்கும் உண்மையாகும்.

## எல்லைப் போர்கள்

வடபெண்ணையாற்றுக்கு வடக்கே ஆதோனியைச் சுற்றி யுள்ள நிலப்பரப்பு சாதவாகனர் (ஆந்திரர்) ஆட்சியின் தென் மேற்குப் பகுதியாக இருந்தது. அந்த இடம் 'சாதவாகனி

இராட்டிரம்' என்று வழங்கப்பட்டது. சாதவாகனருடைய பெரும்படைத் தலைவனும் சூட்டு நாகர் மரபினனுமான கந்தநாகன் என்பவன் இந்தப் பகுதிக்குத் தலைவனாக இருந்தான். அதே காலத்தில் சாதவாகனரது தென்பகுதியை மேற்பார்த்து வந்த தலைவர்களே பல்லவர் ஆவர். இந்தப் பகுதி தமிழகத்தின் அருவா வடதலை நாட்டிற்கும் வடக்கின்கண்ணது ஆதலின் எல்லைப் போர்கள் பல நடந்த வண்ணம் இருந்தன. இப் போர்களைப் பற்றிய விவரங்கள் அறிய முடியாவிடினும் கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் தமிழ் அரசர்க்கும் 'ஆரியர்' என்று கருதப்பட்ட சாதவாகனர்க்கும் எல்லைப்புறப் போர்கள் நடைபெற்றன என்பதைச் சங்க நூல்களால் அறியலாம். ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் என்னும் பெயரும், திருக்கோவலூரை யாண்ட மலையமான் ஆரியரை வென்றான் என வருவதும், 'சோழர் ஆரியரை வென்றனர்' என்னும் குறிப்புக்கள் தமிழ்நூல்களில் பல இடங்களில் வருதலும் இவ் வெல்லைப் போர்களையே குறித்தன வாதல் வேண்டும். கி. பி. 2ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் (சிலப்பதிகார காலத்தில்) தோன்றி வளர்ந்து வந்த இந்த எல்லைப்புறப் போராட்டங்கள், ஆதோனியைச் சேர்ந்த நிலப் பகுதிக்குத் தலைவராக இருந்த சாதவாகன அதிகாரிகட்கும் தென்பகுதித் தலைவர்கட்கும் நாளடைவில் வெற்றியை அளித்தன வாதல்வேண்டும். அக்கால வழக்கில் இருந்த சாதவாகனர் கையாண்ட 'கப்பல் நாணயங்கள்' வடபெண்ணை முதல் தென் பெண்ணை வரை காணப்படுகின்றன.

### சாதவாகனப் பெருநாடு

சாதவாகனப் பெருநாடு பல மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அப் பிரிவுகளைச் சாதவாகன மரபினரும் உயர்ந்த தானைத் தலைவரும், மண்டலத் தலைவராக இருந்து ஆண்டு வந்தனர்.

### விஷ்ணு குண்டர்

கோதாவரிக்கு வடபாற்பட்ட பகுதியை வாகாடகர் பெண்ணை மணந்த தலைவன் ஒருவன் ஆண்டு வந்தான். அவன் மரபினர்

விஷ்ணு குண்டர் எனப்பட்டனர். அவர்தம் ஆட்சிக் காலம் கி. பி. 450—550 எனக் கருதப்படுகிறது.

### சாலங்காயனர்

கோதாவரிக்கும் கிருஷ்ணைக்கும் இடைப்பட்ட வேங்கி நாட்டைச் சாலங்காயனர் என்ற மரபினர் கி. பி. 320 முதல் 500 வரை ஆண்டனர். அவர் தலைநகரம் வேங்கி (பெத்த வேங்கி) என்பது. அவர்கள் நந்தி வழிபாட்டினர். சாலங்காயன நந்தி என்பவன் அவருள் இரண்டாம் அரசனை அத்திவர்மனேயாவன். கி. பி. 345—370 இல் வாழ்ந்த அத்திவர்மனே சமுத்திர குப்தனை எதிர்த்த அரசர் பலருள் ஒருவன் ஆவன். இறுதியில் இந் நாடு சாளுக்கியர் கைப்பட்டது.

### இக்குவாகர்—பிருகத் பலாயனர்

கிருஷ்ணை, குண்டூர்க் கோட்டங்களை இக்குவாகர் (இக்ஷ்வாகர்) என்பவர் மாகாணத் தலைவராக இருந்து ஆண்டனர். இவருள் ஒருவனை சாந்தமூலன் என்பவன் கி. பி. 225 இல் தன் ஆட்சி நிறுவி அந் நாட்டை ஆண்டான். இவன் மரபினர் சில ஆண்டுகளே அதனை ஆண்டனர். பிறகு அதனை பிருகத் பலாயனர் ஆண்டனர். இறுதியில் அப் பகுதி ஏறத்தாழக் கி. பி. 275 இல் பல்லவர்களால் கைப்பற்றப்பட்டது எனக் கருதப் படுகிறது. அதன் தலைநகரம் 'தான்யகடகம்' என்பது. இந்த நகரம் பல்லவர் ஆட்சியில் வடபகுதிக்குத் தலைநகரமாக இருந்த தென, சிவஸ்கந்தவர்மன் பட்டயத்தில் காணப்படுகிறது.

### ஆனந்தர்

குண்டூர், கிருஷ்ணைக் கோட்டங்களை இக்குவாகரிடமிருந்து ஆனந்தர் என்பவர் கைப்பற்றிக் கி. பி. 350 முதல் 450 வரை ஆண்டு வந்தனர். அப் பகுதி இறுதியில் சாலங்காயனராற் கைப்பற்றப்பட்டது.

### சூட்டுநாகர்

சாதவாகனப் பெருநாட்டின் தென்மேற்குப் பகுதி சூட்டு நாகர் என்பவர் ஆட்சியில் இருந்தது. அதனை ஆண்ட

மாகாணத் தலைவருட் சிறந்தவனே கந்தநாகன் என்பவன். இம் மரபினர் சாதவாகனருடன் உறவு கொண்டிருந்தனர். இவர் தலைநகரம் வனவாசி என்பது. இவர் ஆட்சி கி. பி. 340இல் கதம்பரால் பறித்துக்கொள்ளப்பட்டது.

## பல்லவர்

சாதவாகனப் பேரரசில் கிருஷ்ணையாற்றுக்குத் தெற்கில் உள்ள நிலப்பகுதியே பல்லவர் ஆட்சியில் இருந்தது. சாதவாகனருடைய பேரரசில் மாகாணத்தின் தலைவராக இருந்து ஆண்டவரே பல்லவர் ஆவர். சாதவாகனப் பேரரசு வலிகுன்றத் தொடங்கிய கி. பி. 225இல் பல்லவர் தாம் ஆண்ட பகுதியைத் தமக்கே உரிமை செய்துகொண்டுவிட்டனர்; பின்னர், அவர்கள் வலிமை பெற்றதும் தொண்டை நாட்டைக் கைப்பற்ற முனைந்தனர்.

இங்ஙனம் சாதவாகனர் பேரரசில் மாகாணத் தலைவர்களாக இருந்த சாலங்காயனர், விஷ்ணு குண்டர், இக்குவாகர், பிருகத் பலாயனர், சூட்டுநாகர், பல்லவர் என்பவர் அப் பேரரசு வலி குன்றத் தொடங்கியதும் தனித்தனியே தாம் தாம் ஆண்டு வந்த மாகாணத்திற்குத் தாமே மன்னராகிவிட்டனர்.

சத்ரபர், வாகாடகர் என்ற புதிய மரபினரின் படையெடுப்பால் சாதவாகனப் பேரரசு நிலை தளர்ந்தபோது தனித்தனியே தம் ஆட்சியை உண்டாக்கிக்கொண்ட இந்த அரசருள் பலர் கி. பி. 340இல் தெற்கு நோக்கிப் படையெடுத்த சமுத்திர குப்தனை எதிர்த்தனர் என்பதை அலகாபாத் தூண் கல்வெட்டு உணர்த்துகின்றது. சாதவாகனப் பேரரசு உடைபட்டுச் சிறிய பல நாடுகள் தோன்றியிராவிடின், சமுத்திர குப்தனைக் காஞ்சியை ஆண்ட விஷ்ணுகோபன் முதலான இத்துணையரசர் கோதாவரி, கிருஷ்ணையாறுகளுக்கு அருகில் எதிர்த்திருத்தல் இயலுமா?

## பல்லவரும் தொண்டை நாடும்

இந் நிலைமை உண்டாவதற்கு முன்னரே மாகாணத் தலைவராக இருந்த இந்தப் பல்லவ மரபினர் தங்கள் எல்லைப்புறப் போர்களில் சிறிது சிறிதாக வெற்றி பெற்று வந்தனர். தொண்டை மண்டலத்தை ஆண்ட மன்னன் பகைவரை விரட்ட வலியற்றவனாக இருந்தான். அதனால், சாதவாகனப் பேரரசின்

அதிகாரிகள் மெல்ல மெல்ல அருவா வடதலை நாட்டையும், அருவா நாட்டையும் கைப்பற்றினர்.

'தொண்டைமான் பேரரசனுக்கும் விசுவாவசுராசனுக்கும் போர் நடந்தது' என்னும் செவிமரபுச் செய்தி ஒன்று **கர்னல் மக்கேன்சி** எழுதியுள்ள குறிப்புக்களில் காணப்படுகிறது. விசுவாவசுராசனே தொண்டை மண்டலத்தை வென்ற முதல் பல்லவனாயிருக்கலாம் எனக் கருத இடமுண்டு. அஃது உறுதியாகவில்லை. எனினும், இச் செய்தி பல்லவரது தொண்டை மண்டலப் படையெடுப்பைக் குறிப்பதென்பதில் ஐயமில்லை.

இங்ஙனம் கைப்பற்றிய நாட்டில், மக்களை இன்புறச் செய்யவும், அமைதியை உண்டாக்கவும் பப்பதேவன் என்னும் அரசன் ஓர் இலக்கம் (இலட்சம்) கலப்பைகளையும் பிறவற்றையும் மக்களுக்குத் தந்தான் என்று செப்பேடு கூறுகின்றது. பின்வந்த அரசரும் புதிய நாட்டில் இருந்த கோவில்களுக்கு மானியங்கள் விட்டனர் என்னும் செய்தி செப்பேடுகளில் காணப்படுகிறது. இச் செப்பேடுகள் பிராகிருத மொழியிலேயே எழுதப்படுள்ளன. சாதவாகனப் பேரரசர் ஆட்சியின் தொடக்கத்தில் காணப்பட்ட செப்பேடுகளில் உள்ள பிராகிருத மொழியிலேயே இப் பட்டயங்களும் காணப்படுகின்றன. எனவே, இதுகாறுங் கூறியவாற்றால் சாதவாகனர் பேரரசில் தென்மாகாணத் தலைவராக இருந்தவரும் அவர் மரபினரும் கி. பி. மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அருவா வடதலை நாட்டை முதற்கண் கைப்பற்றி உழவு, நாகரிகம் முதலியவற்றை நுழைத்தனர். பிறகு சோழ வேந்தர் வலியற்றிருந்த நிலையைக் கண்டதும் அருவா நாட்டையும் கைப்பற்றினர். சோழர் காலத்து வடக்குத் தலைநகராக இருந்தது காஞ்சிபுரம். அது கல்விக்கும் பல சமயங்கட்கும் நிலைக்களமாக இருந்தது. படையெடுத்து வென்ற தென்மாகாணத் தலைவர்கள் காஞ்சியைத் தங்கள் தலைநகராகக் கொண்டனர். இவர்களே தங்களைப் பல்லவர் என்று கூறிக்கொண்டனர்.

## பல்லவர் அரச மரபினரே

பல்லவர் தம்மைப் 'பாரத்வாச கோத்திரத்தினர்' எனக் கூறிக்கொள்கின்றனர். இவர்கள் சிறந்த சத்திரியரே. சத்திரி

யரும் இன்ன கோத்திரத்தார் என்று கூறிக்கொள்வது உண்டு. அவர்கள் வாகாடகர், சாலங்காயனர் முதலிய வேறு அரச மரபினரோடு தொடர்பு கொண்டனர். தமிழ் வேந்தர் ஆத்தி, வேம்பு, பனை இவற்றைத் தம் மரபுக்கு அடையாளமாகக்கொண்டது போல ஆந்திர நாட்டிலிருந்து வந்த பல்லவரும் தமிழ் முறை பற்றித் தம்மைப் (பல்லவக் கொடி - தொண்டைக் கொடி பற்றிப்) பல்லவர் என அழைத்துக்கொண்டனர். (பல்லவம் - தளிர்.)

## காடவர் முதலிய பெயர்கள்

காடவன், காடவர்கோன், காடுவெட்டி என்பன பல்லவர்க்குப் பிற்காலத்தில் வந்த பெயர்கள். கி. பி. 8ஆம் நூற்றாண்டுக்குப் பின்னரே பல்லவர் கல்வெட்டுக்களில் இப் பெயர்கள் காணப் படுகின்றன. வேற்றரசர் கல்வெட்டுக்களிலும் இப் பெயர்கள் காணப்படுகின்றன. எனவே, இப் பெயர்கள் அல்லது பட்டங்கள் தமிழ்மக்களால் இவர்களுக்கு இடப்பட்டன எனக் கருதலாம். பல்லவர் காடுகளை அழித்து நாடாக்கினமை இதனால் நன்கு புலனாகிறது.

# 4. களப்பிரர் யாவர்?

சங்ககாலத்துக்குப் (கி. பி. 250க்குப்) பிறகு காளத்தி முதலிய மலைப் பகுதிகளில் வாழ்ந்த களவர் என்பவர் செல்வாக்குப் பெற்றனர். கன்னடத்தில் **'களபரு'** எனவும் வடமொழியில் **'களப்ரா'** எனவும் கூறப்படும் சொல்லே தமிழில் களப்பிரர் என வழங்கப்படுகிறது. இவர்கள் ஒரு கூட்டத்தினரேயன்றி அரச மரபினர் அல்லர். இவர்கள் மூவேந்தரை வென்றதாகப் பாண்டியர் - பல்லவர் பட்டயங்கள் குறிக்கின்றன. வேற்று நாட்டுப் பட்டயங்களில் இவர்கள் பெயர் குறிப்பிடப்படாமையின் இவர்கள் தென்னிந்தியரே என்பது திண்ணமாகும்.

வேள்விக்குடி, சின்னமனூர்ப் பட்டயங்களில் கடுங்கோனுக்கு முன்னும் சங்கத்தில் பாரதம் பாடப்பட்டதற்குப் பின்னும் பாண்டிய நாடு களப்பிரர் ஆட்சியில் இருந்தது. அப்பொழுது அரசர் பலர் ஆட்சி புரிந்து மறைந்தனர் என்று அறியப்படுகிறது. மூர்த்தி நாயனார் காலத்தில் மதுரையில் வடுகக் கருநாடக வேந்தன் பாண்டிய நாட்டைக் கைப்பற்றி அரசாண்டான் என்ற செய்தி பெரியபுராணத்தில் காணப்படுகிறது. வேள்விக்குடிப் பட்டயம் குறிப்பிடும் கலியரசனே பெரியபுராணம் கூறும் வடுகக் கருநாடக வேந்தனாக இருத்தல்வேண்டும் எனக் கருதலாம். அஃதாவது அவன் களப்பிர அரசனாக இருத்தல்வேண்டும் என்பது துணிவு.

கடைச்சங்கத்தின் இறுதிக் காலம் கி. பி. 250 எனக் கொள்ளினும், கடுங்கோன் களப்பிரரை விரட்டிப் பாண்டியர் ஆட்சியை நிலைநாட்டிய காலம் கி. பி. 575 எனக் கொண்டாலும், களப்பிரர் பாண்டிய நாட்டை ஏறக்குறைய 300 ஆண்டுகள் ஆண்டு வந்தனர் என்பதை உறுதியாகக் கொள்ளலாம். எனவே, களப்பிரர் ஏறக்குறையக் கி. பி. 250இல் பாண்டிய நாட்டைக் கைப்பற்றினர் எனக் கொள்வது தவறாகாது.

சோழ நாட்டில் உள்ள புகார் நகரைத் தலைநகரமாகக் கொண்டு **அச்சுதவிக்ரந்தன்** என்னும் களப்பிர அரசன் ஆண்டு வந்தான் என்பதைப் புத்ததத்தர் எழுதும் குறிப்புக்களிலிருந்து அறியலாம். புத்ததத்தர் தென்னாட்டில் இருந்த பௌத்த துறவியாவார். அவர் பாலி மொழியில் "அபிதம்மாவதாரம்" என்னும் நூலை எழுதியுள்ளார். அவர் தமது நூலில் மேற் சொன்ன செய்தியைக் குறிப்பிட்டுள்ளார். அப் பெரியார் காலம் புத்த கோஷரது காலமான கி. பி. 350 ஆகும்.

'**அச்சுதக் களப்பாளன்** என்னும் பெயர் கொண்ட வேந்தன் ஒருவன் முடியுடை மூவேந்தரையும் வென்று சிறைப்படுத்தினான்' என்று தமிழ் நாவலர் சரிதை கூறுகின்றது. கி. பி. 11ஆம் நூற்றாண்டினதான யாப்பருங்கலக்காரிகையில் ஒரு பாடல் அவன் சிறப்பைக் கூறுகின்றது. அஃது, "அடுதிறல் ஒருவநிற் பரவுதும்" எனத் தொடங்கும் பாடலாகும். அது விளக்கத்தனார் என்னும் பண்டைப் பாவலர் பாடியதாகும். அவன் புகழைக் கூறும் மற்றொரு செய்யுளும் யாப்பருங்கல விருத்தியுள் காணப்படுகின்றது. அது, "பொருகுடை வளாகம் ஒருகுடை நிழற்றி" எனத் தொடங்கும் செய்யுளாகும். எனவே, தமிழ்நூல்களிற் கூறப்படும் அச்சுதனும் புத்ததத்தர் கூறிய அச்சுதனும் ஒருவனே என்பதை அறியலாம்.

பெரியபுராணம் கூறும் அறுபத்து மூன்று நாயன்மாருள் ஒருவராகிய கூற்றுவ நாயனார் களப்பிரரேயாவார். இவரைப் பற்றி நம்பியாண்டார் நம்பிகள்,

> "ஓதம் தழுவிய ஞாலமெல் லாம்ஒரு கோலில்வைத்தான்
> கோதை நெடுவேல் களப்பாளன் ஆகிய கூற்றுவனே"

என்று கூறுகின்றார்.

கூற்றுவ நாயனாராகிய இவர் பல அரசர்களை வென்றவர். முடிபுனைய விரும்பித் தில்லைவாழ் அந்தணர்களை வேண்டிக் கொண்டார். சோழ மன்னருக்கு மட்டுமே முடிபுனையும் அந்த அந்தணர்கள் இவருக்கு முடிசூட்ட விரும்பாது மறுத்துவிட்டனர். அதனால், இவர் இறைவனை வேண்ட, சிவபெருமான் தமது

திருவடியை முடியாகச் சூட்டியருளினர். இச் செய்தி பெரிய புராணத்தில் கூறப்பெற் றுள்ளது. இவரும் கி. பி. 6ஆம் நூற்றுண்டுக்கு முற்பட்டவர் என்பதில் ஐயமில்லை. இடங்கழி நாயனரும் இம் மரபினரே. இவர் கொடும்பாளூரை ஆண்ட குறுநில மன்னர் ஆவார்.

## களப்பிரர் - பல்லவர் போர்கள்

கி. பி. 3ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் பல்லவர் தொண்டை மண்டலத்தைக் கைப்பற்ற முயன்றபோது அவர் களால் தாக்கப்பட்ட இக் களப்பிரர் அருவா வடதலை நாட்டை விட்டு நீங்கித் தொண்டை மண்டலத்துள் நுழைந்தனர். அப்பொழுது தொண்டை மண்டலத்துள் இருந்த சோழ மரபினர் அங்கிருந்து வெளியேறினர்.. பல்லவர் தொண்டை நாட்டையும் கைப்பற்ற முனைந்தபொழுது பல்லவரிடம் போரிட்டுத் தோற்ற களப்பிரர் காஞ்சியைவிட்டு நீங்கிப் பாலாற்றுக்குத் தெற்கே சென்றுவிட்டனர். அதனுற்றுன் பப்பதேவன் காலத்தில் பாலாறு பல்லவர் நாட்டின் தென்எல்லையாக இருந்திருத்தல் வேண்டும். பின்னர், சிவஸ்கந்தவர்மன் என்ற பல்லவன் களப்பிரரோடு போரிட்டுத் தென்பெண்ணையாறு வரை பல்லவ நாட்டை விரிவுபடுத்தியிருத்தல்வேண்டும்.

கி. பி. 5ஆம் நூற்றுண்டின் இறுதியில் அல்லது 6ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் இடைக்காலப் பல்லவருள் ஒருவனை புத்தவர்மன் கடல் போன்ற சோழர் படையை (களப்பிரர் படையை) நடுங்க வைத்தான் என்று ஒரு பட்டயம் கூறுதலால் தொண்டை நாட்டிலும் சோழ நாட்டிலும் இருந்த களப்பிரர்க்கும் பல்லவர்க்கும் போர் நடந்த செய்தியை அறியலாம்.

இக் களப்பிரர் அடிக்கடி பல்லவரோடு போரிட்டு வந்தனர். இடைக்காலப் பல்லவர்கள் இவர்களைக் காஞ்சியினின்றும் துரத்தித் தொண்டை மண்டலம் முழுவதையும் கைப்பற்றப் பெரும்பாடு பட்டிருத்தல்வேண்டும்.

கி. பி. 6ஆம் நூற்றுண்டின் இறுதியிலும் 7ஆம் நூற்றுண்டின் தொடக்கத்திலும் பல்லவப் பேரரசனுக இருந்த

சிம்மவிஷ்ணு (கி.பி. 575—615) களப்பிரரை முறியடித்த பெருவீரன் என்று வேலூர் பாளையப் பட்டயம் கூறுகின்றது. சிம்ம விஷ்ணுவின் பெயரனான முதலாம் நரசிம்மவர்மன் (கி. பி. 630—660) இக் களப்பிரரோடு போரிட்டான். கி. பி. 7 ஆம் நூற்றாண்டின் கடையிலும் எட்டாம் நூற்றாண்டின் இடையிலும் சாளுக்கியர் இக் களப்பிரரோடு போரிட்டனர் என்பது உறுதி.

வடக்கே பல்லவராலும், தெற்கே பாண்டியராலும் அடிக்கடி தாக்குதல் பெற்று வலி குன்றிய இக் களப்பிரர் கி. பி. 7, 8 ஆம் நூற்றாண்டுகளில் தஞ்சைக்கு அருகிலும் கொடும்பாளூரிலும் முத்தரையர் என்னும் பெயருடன் சிற்றரசர்களாகிப் பல்லவர்க்கும் பாண்டியர்க்கும் அடங்கி வாழ்ந்து வந்தனர்.

## சோணாட்டில் களப்பிரர்

தஞ்சைக்கடுத்த செந்தலை (சந்திரலேகா) என்னும் ஊர் முத்தரையர் காலத்தில் சிறந்த நகரமாக இருந்திருத்தல் வேண்டும். அங்குள்ள கோவில் மண்டபத் தூண்களில் இருக்கும் கல்வெட்டுக்களில் முத்தரையர் வரிசை முறையைக் காணலாம்.

பெரும்பிடுகு முத்தரையன் I

அல்லது

குவாவன் மாறன்

|

இளங்கோவதி அரையன்

அல்லது

மாறன் பரமேசுவரன்

|

பெரும்பிடுகு முத்தரையன் II

அல்லது

சுவரன் மாறன்

இந்த மூன்றும் அரசன், 'ஸ்ரீமாறன், ஸ்ரீகள்வர் காவலன், ஸ்ரீசத்ருகேசரி, ஸ்ரீகளப்ர காவலன்' எனப் பலவாறு வழங்கப் பட்டான். இந்த மரபினர் பாண்டியரை வென்ற பிறகு 'மாறன்' என்று பெயரிட்டுக்கொண்டனர். முத்து + அரையர் = முத்தரையர் —முத்துக்கள் கிடைக்கும் பகுதிக்கு (பாண்டிய நாட்டுக்கு) அரசர் என்று தம்மை அழைத்துக்கொண்டனர். இன்றுயின் சேர சோழ பாண்டியரை வென்றவராதலின் — (மூன்று தரையர்) மு + தரையர்—முத்தரையர் ஆயினர் எனவும் கொள்ளலாம்.

## பாண்டிய நாட்டில் களப்பிரர்

களப்பிரரே முத்தரையர் ஆயினர். பாண்டிய நாட்டில் முத்தரையர் அரசு செலுத்தியபொழுது கி. பி. 470இல் சமண சங்கம் மதுரையிற் கூட்டப்பட்டது. 'திகம்பர தரிசனம்' என்னும் சமண நூல் இதனைக் குறிக்கிறது. நாலடியாரும் பழமொழியும் அப்பொழுது பாடப்பட்டன என்று கருதலாம். நாலடியாரில் முத்தரையர் புகழப்பெற்றுள்ளனர். முத்தரையர் கோவை ஒன்று இருந்ததாக யாப்பருங்கல விருத்தியுரையால் தெரிகிறது. இம் முத்தரையர் என்னும் களப்பிரரே சமண சமயத்தைப் போற்றி வளர்த்தனர் என்பது நாலடியார் முதலிய நூல்களால் அறியலாம். (செய் - 200, 243, 296).

கி. பி. 8ஆம் நூற்றாண்டினரான திருமங்கையாழ்வார் சோழ நாட்டின் ஒரு பகுதியான ஆலி நாட்டை ஆண்ட சிற்றரசர். அவர் கள்ளர் மரபினர். இன்றும் திருச்சி மாவட்டத்தில் முத்தரையர் சமீந்தார்களாக இருக்கின்றனர். தெலுங்கு நாட்டில் 'முத்து ராசாக்கள்' என்னும் சமீந்தார்கள் இருக்கின்றனர். மதுரைக் கோட்டத்தில் உள்ள மேலூரில் முத்தரையர் 'அம்பலகாரர்' எனப் படுகின்றனர். ஆராய்ச்சியாளர் மேற்கூறிய அனைவரும் இக் காலத்துக் கள்ளர் வகுப்பினர் எனக் கூறுகின்றனர்.

கி. பி. 6ஆம் நூற்றாண்டு முதல் 9ஆம் நூற்றாண்டு வரை களப்பிரர் வலிகுன்றிச் சிற்றரசராக இருந்தனர். தஞ்சையை ஆண்ட களப்பிரர் பல்லவர்க்கும் கொடும்பாளூரை ஆண்ட களப் பிரர் பாண்டியர்க்கும் அடங்கினர். கி.பி. 9ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் விசயாலய சோழன் தஞ்சையைக் களப்பிரரிட மிருந்தே மீட்டான்.

---

# 5. முதற்காலப் பல்லவர்
## (கி. பி. 250—340)

வரலாற்று ஆசிரியர்கள் பல்லவர்களை மூன்று பிரிவினராகப் பிரித்துக் கூறுகின்றனர். அவர்கள் முதற்காலப் பல்லவர் என்றும், இடைக்காலப் பல்லவர் என்றும், பிற்காலப் பல்லவர் என்றும் மூவகைப்படுவர். கி. பி. 3, 4ஆம் நூற்றுண்டுகளில் முதற்காலப் பல்லவர்கள் இருந்தனர். அவர்கள் தீட்டிய பட்டயங்கள் பிராகிருத மொழியில் உள்ளன. 4, 5, 6ஆம் நூற்றுண்டுகளில் இருந்த இடைக்காலப் பல்லவர்கள் தீட்டிய பட்டயங்கள் வடமொழியில் உள்ளன. கி. பி. 575 - 900இல் வாழ்ந்த பிற்காலப் பல்லவர்களின் பட்டயங்கள் கிரந்தம் அல்லது தமிழ்மொழியில் உள்ளன. பட்டயங்களிலிருந்து பின்வரும் மரபு முறை புலப்படுகிறது :

முதற்காலப் பல்லவர்கள்
(கி. பி. 250 - 340)

பப்பதேவன்
|
சிவஸ்கந்தவர்மன்
|
விசயஸ்கந்தவர்மன்
|
இளவரசன் புத்தவர்மன்
|
புத்யங்குரன்

களப்பிரர்களைத் தொண்டை நாட்டினின்றும் வெளியேற்றிப் பல்லவராட்சியை நிறுவி முதலில் ஆண்டவர்கள் இம் மன்னர்களே யாவர்.

---

# 6. இடைக்காலப் பல்லவர்
## (கி. பி. 340—575)

### கதம்பர் (கி. பி. 350—600)

ஏறத்தாழ கி. பி. 350இல் மயூரசன்மன் என்னும் வீரமறையவன திருப்பருப்பதத்தைச் சேர்ந்த நாடுகளைக் கைப்பற்றிப் பின்னர் சித்தூர் வட ஆர்க்காட்டுக் கோட்டங்களை ஆண்ட பாண அரசரை அடிப்படுத்திப் பல்லவர் நாட்டு எல்லைப்புறத்தில் குழப்பம் உண்டாக்கிக்கொண்டிருந்தான். அப்பொழுது அரசனாக இருந்த பல்லவன் மயூரசன்மனுடன் சந்து செய்துகொண்டான். அவனைத் தன் அமைச்சனாகவும் படைத்தலைவனாகவும் அமைத்துக் கொண்டான். பின்னர் மயூரசன்மன் நாளடைவில் குந்தள நாட்டிற்கே அரசன் ஆனான்.

### கங்கர்

காவிரிக்குத் தெற்கே குடகு நாட்டையும் மைசூரின் ஒரு பகுதியையும் ஆண்ட மரபினர் கங்கர் எனப்படுவர். இவர் தலைநகரம் தழைக்காடு என்பது.

### அகச் சான்றுகள்

இடைக்காலப் பல்லவரைப் பற்றி அறியப் பெருந்துணை புரிவன வடமொழியில் வரையப்பட்ட செப்பேடுகளும் இரண்டொரு கல்வெட்டுக்களுமே யாகும். வடமொழியில் நுண்ணறிவுடையார் இவற்றை ஆராய்ந்து இவற்றின் காலம் ஏறக்குறைய கி. பி. 340-575 என்று கூறியுள்ளனர். பல்லவர் வெளியிட்ட செப்புப் பட்டயங்கள் தெலுங்கு நாட்டில் இருந்தே வெளியிடப்பட்டவை.

# 7. பிற்காலப் பல்லவர்
## (கி. பி. 575—900)

இக்காலச் சிறப்பு

(1) இக்காலத்தில் பெரும்பாலான நாயன்மாரும் ஆழ்வாரும தமிழகத்தில் வாழ்ந்தனர். சமணரோடு போரிட்டுச் சைவவைணவ சமயங்களைப் பரப்பினர். பேரரசர்களையும் சமயம் மாறும்படி செய்தனர். தமிழ்மக்கள் இக்காலத்தில் சிறந்த முறையில் சமயப்பற்று உடையவராக ஆயினர். மக்கள் மனப்போக்கை உணர்ந்த பொறுப்பு வாய்ந்த அரசர்கள் மக்கள் மனம் மகிழுமாறு பல கோயில்களைக் கட்டினர். தாமும் இறையன்பில் ஈடுபட்டனர். ஆழ்வார்களும், நாயன்மார்களும் பாடியருளிய நாலாயிர திவ்வியப் பிரபந்தமும், தேவாரப் பாடல்களும் இக்கால அரசர் நிலை, நாட்டு நிலை, சமயங்களின் நிலை, மக்கள் நிலை முதலியவற்றை நன்கு விளக்குகின்றன.

(2) இக்காலத்தில்தான் புகழ்பெற்ற பெருவீரரான பல்லவ மன்னர்கள் வாழ்ந்தனர். அவர்கள் தெற்கே காவிரியாறு வரையும், வடக்கே கிருஷ்ணையாறு வரையும், மேற்கே சாளுக்கிய நாடு வரையும் தங்கள் பேரரசை விரிவாக்கி ஆண்டனர். இக்காலத்தில் வரலாற்றுப் புகழ்பெற்ற சாளுக்கியர் - பல்லவர் போர்களும், பாண்டியர் - பல்லவர் போர்களும், கங்கர் - பல்லவர் போர்களும், இராட்டிரகூடர் - பல்லவர் போர்களும் பிறவும் நிகழ்ந்தன.

(3) இக்காலப் பல்லவர் தாம் குகைக்கோயில்களையும் மலைக் கோயில்களையும் கற்கோயில்களையும் அமைத்து அழியாப் புகழ் பெற்றனர். இவர்க்கு முற்பட்ட காலங்களில் தமிழகத்துக் கோயில்கள் மரத்தாலும் மண்ணாலும், செங்கற்களாலுமே கட்டப் பட்டவை. அவை நாளடைவில் அழிந்துவிட்டன.

(4) இக்காலத்தில் பல்லவ நாட்டில் வடமொழி சிறப்பாகப் போற்றி வளர்க்கப்பெற்றது. வடமொழிவல்ல மறையவர் பல ஊர்களைத் தானமாகப் பெற்றனர். வடமொழிக் கல்லூரிகள் தோற்றுவிக்கப்பட்டன. புகழ்பெற்ற கிராதார்ச்சுனீயம் என்னும் நூலை இயற்றிய தாமோதரர் என்னும் பெயர் கொண்ட பாரவி என்னும் வடமொழிப் புலவரும் காவியாதர்சம் என்னும் நூலை எழுதிய தண்டி என்னும் வடமொழிப் புலவரும் பல்லவரால் பாராட்டப் பெற்றனர். இக்காலத்தில் தமிழ்மொழியும் ஓரளவு வளர்ந்தது. தேவாரத் திருமுறைகள், நாலாயிரப் பாடல்கள், நந்திக்கலம்பகம், பாரத வெண்பா முதலியன இக்காலத்தில் இயற்றப்பட்டன. இவற்றை அருளிச்செய்த நாயன்மார்களும், ஆழ்வார்களும், புலவர்களும் பல்லவ மன்னர்களால் நன்கு மதிக்கப்பெற்றனர்.

## இக்கால வரலாற்றுக்குரிய மூலங்கள்

(1) இக்காலப் பல்லவர் செப்புப் பட்டயங்களையும் மிகுதியான கல்வெட்டுக்களையும் வெளியிட்டனர். அவை தமிழ்நாடு முழுவதும் பரந்து கிடக்கின்றன. அவற்றுள் சிலவே வெளியிடப்பட்டுள்ளன. இன்னும் பல படியெடுக்கப்படாமலும், அச்சாகி வெளிவராமலும் இருக்கின்றன. அவை வெளிப்பட்ட பின் பல்லவர் வரலாற்றில் மேலும் பல பகுதிகளை அறியலாம். இதுகாறும் உணராதிருக்கின்ற பல உண்மைகளை உணரலாம். கல்வெட்டுக்கள் பலவும் அரசர் அல்லது பெருமக்கள் கோயில்களுக்கும் மறையவர்க்கும் சமயக் கல்விக்கும் நிலம் அளித்த செய்தியையும் வேறு பல அறச்செயல்களையும் குறிப்பிடுவனவாகும்.

இவற்றுள் சிம்மவிஷ்ணு முதலாக வந்த அரசர் பரம்பரை கூறப்பட்டிருக்கும் செப்புப் பட்டயங்களிலும் அரசர் பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பட்டயமும் அது வெளியிடப் பட்டபோது இருந்த அரசன் பெயரையும் அவனது ஆட்சி ஆண்டையும் குறிப்பிடுகின்றது. சில கல்வெட்டுக்களும் பட்டயங் களும் அரசர் மரபையும் பிற செயல்களையும் குறிப்பிடுதல் இல்லை. கல்வெட்டுக்களில் பழைமையானவை முதல் மகேந்திரன் வெட்டு வித்தவையேயாகும். அவை தென்னார்க்காடு, திருச்சிராப்பள்ளி,

செங்கற்பட்டு மாவட்டங்களில் உள்ள மலைக்கோயில்களிலும், பிற கோயில்களிலும் காஞ்சிபுரத்தில் உள்ள கைலாசநாதர் கோயிலிலும் பிற இடங்களிலும் இருக்கின்றன. எனினும், இப் பல்வகைப் பட்டயங்களையும் கல்வெட்டுக்களையும் தொகுத்து ஆராய்ச்சி செய்யின் இக்காலப் பல்லவர் பரம்பரை அவர்தம் வரலாறு, அவர் கால நாட்டுநிலை முதலியவற்றை நன்கு அறியலாம்.

(2) பல்லவர் ஆட்சியின் பிற்காலத்தில் பல்லவர் நாட்டைச் சுற்றிலும் இருந்து அரசாண்ட சாளுக்கியர், இராட்டிரகூடர், கதம்பர், கங்கர், பாண்டியர், முத்தரையர் (களப்பிரர்) பாணர் என்னும் இவர்தம் பட்டயங்களும் கல்வெட்டுக்களும் ஆகும்.

(3) சைவசமய குரவர் பாடியருளிய தேவாரத் திருமுறைகளும், ஆழ்வார்கள் பாடியருளிய நாலாயிரப் பாடல்களும் பல்லவரைப் பற்றிய குறிப்புக்களைத் தரத்தக்க இலக்கியங்கள்.

(4) பாரத வெண்பாவும் நந்திக்கலம்பகம், பெரிய புராணம் என்பனவும் கி. பி. 615 - 630இல் மகேந்திரவர்மன் வெளியிட்ட மத்தவிலாசப் பிரகசனம், அவந்திசுந்தரிகதா என்பனவும் பல்லவர் வரலாற்றுக் குறிப்பு அறிய உதவுவனவாகும்.

(5) மகாவம்சம் :—இது இலங்கை வரலாறு கூறும் நூல். கி. பி. ஏழாம் நூற்றுண்டில் நரசிம்மவர்மன் காலத்தில் இலங்கை நோக்கிப் பல்லவர் படை சென்றதும், இலங்கையில் அப்பொழுது முறையின்றி இருந்த அரசனை நீக்கிவிட்டுப் பட்டத்துக்கு உரியவனை அரசனாக்கிய செய்தியும், முதலியன கூறப்பட்டுள்ளன.

இத்துணைச் சான்றுகளையும் துணையாகக்கொண்டு பிற்காலப் பல்லவர் வரலாற்றை ஆராய்வோம்.

காசக்குடி, கூரம், வேலூர், பாளையப் பட்டயங்களை ஆராயின் இப் பிற்காலப் பல்லவர் பட்டியல் பின்வருமாறு அமையும். இன்னவருக்குப்பின் இன்னார் பட்டம் பெற்றார் என்பதை ஏறக்குறையத் தெளிவாகத் தெரிவிக்கின்றது. பட்டியலைப் பார்ப்பின் சிம்மவிஷ்ணு காலம் முதல் ஏறக்குறைய 150 ஆண்டுகள்

ஓரே பரம்பரை அரசர் ஆண்டு வந்தது தெளிவாகும். அந்த ஒன்றரை நூற்றாண்டு காலத்தில் வீமவர்மன் முதல் இரண்ய வர்மன் ஈறான ஐவரும் எந்நிலையில் இருந்தனர் என்பதை அறிய முடியவில்லை. அவர்கள் மாகாணத் தலைவர்களாக அல்லது சேனைத் தலைவர்களாக இருந்திருக்கலாம். சிம்மவிஷ்ணு வுக்குத் தம்பியான பீமவர்மன் வழியில் வந்த இரண்டாம் நந்திவர்மன், கி. பி. எட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பல்லவப் பேரரசன் ஆனான். பின்னர் அவன் வழியினரே, கி. பி. 900 வரை பல்லவ மன்னவராக இருந்து மறைந்தனர்.

மூன்றாம் சிம்மவர்மன்

- சிம்மவிஷ்ணு
  - மகேந்திரவர்மன் I
    - நரசிம்மவர்மன் I
      - மகேந்திரவர்மன் II
        - பரமேசுரவர்மன் I
          - நரசிம்மவர்மன் II
            - பரமேசுரவர்மன் II
            - மகேந்திரவர்மன் III
- பீமவர்மன்
  - புத்தவர்மன்
    - ஆதித்தவர்மன்
      - கோவிந்தவர்மன்
        - இரண்யவர்மன்
          - நந்திவர்மன் II
            - தந்திவர்மன்
              - நந்திவர்மன் III
                - நிருபதுங்கவர்மன்
                  - அபராசிதவர்மன்

# 8. சிம்மவிஷ்ணு
## (கி. பி. 575—615)

இவன் பிற்கால அரசருள் புகழ்பெற்றவன். மூன்றும் சிம்மவர்மனுடைய மகன். முதல் நந்திவர்மனுடைய (ஒன்று விட்ட) உடன்பிறந்தான் மகன். சிம்மவிஷ்ணு நந்திவர்மனுக்குப் பின் பட்டம் பெற்றவன் ஆவன். இவனுக்குப் பீமவர்மன் என்னும் பெயருடைய தம்பியொருவன் இருந்தான். அவன் இவனுடைய ஆட்சியில் வடபகுதியை ஆண்டுவந்தான்.

### சிம்மவிஷ்ணுவின் சிறப்பு

இவன் மகனுன முதலாம் மகேந்திரவர்மன் தான் இயற்றிய மத்தவிலாசத்தில் தன் தந்தையைச் சிறப்பித்துள்ள செய்திகள் காண்க. "சிம்மவிஷ்ணு 'பல்லவ குலம்' என்ற உலகைத் தாங்கும் குலமலே போன்றவன். அவன் நுகர்ச்சிப் பொருள்கள் அனைத்தையும் உடையவன்; பல நாடுகளை வென்றவன். வீரத்தில் இந்திரனைப் போன்றவன். செல்வத்தில் குபேரனை ஒத்தவன். அவன் அரசர் ஏறு."

### போர்ச் செயல்கள்

மூன்றும் நந்திவர்மன் காலத்திய வேலூர்ப் பாளையப் பட்டயத்தில் சிம்மவிஷ்ணுவைப்பற்றிச் சில குறிப்புக்கள் உள்ளன. "இவனது புகழ் உலகெலாம் பரவியுள்ளது. இவன் காவிரி பாயப் பெற்ற செழிப்பான சோழ நாட்டைச் சோழரிடமிருந்து கைப் பற்றினுன்" என்பன. இரண்டாம் நந்திவர்மன் காலத்துக் காசக்குடிப் பட்டயத்தில் "......பிறகு இப் பூவுலகில் சிங்கம் போன்ற சிம்மவிஷ்ணு தோன்றினுன். அவன் பகைவரை அழிப்பதில் ஈடுபட்டிருந்தான். களப்பிரர், மழவர், சோழர்,

பாண்டியர் ஆகியவரை வெற்றி கொண்டான் என்பது காணப் படுகின்றது.

சிம்மவிஷ்ணு என்னும் பெயரைக்கொண்டே இவன் வைணவன் என்பதை நன்கு உணரலாம். இரண்டாம் நந்திவர்மன் காலத்திய உதயேந்திரப் பட்டயம் இவனைப் "பத்தி ஆராதித்த விஷ்ணு - சிம்மவிஷ்ணு" என்று குறிப்பிடுகிறது.

## ஆதிவராகர் கோவில்

மகாபலிபுரத்தில் ஆதிவராகர் கோவில் இருக்கிறது. அக் கோவிலில் இரண்டு உருவச் சிலைகள் உள்ளன. இவற்றைக் கர்னல் மக்கன்ஸி, பெர்கூசன், பர்கஸ் முதலிய அறிஞர் கண்டு தம் நூல்களில் குறிப்பிட்டுள்ளனர். 1922இல் புதை பொருள் ஆராய்ச்சியாளர் இச் சிலைகளின்மேல் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுக்களைக் கண்டுபிடித்தனர். பின்னர் இவை சிம்ம விஷ்ணுவையும் அவன் மகனை மகேந்திரவர்மனையும் குறிப்பன என்பது வெளிப்பட்டது. வாகாடகர் அசந்தாக் குகைகளில் வியத்தகு வேலைப்பாடுகளைச் செய்தனர். அவற்றைக் கண்டு அவருடன் கொள்வினை - கொடுப்பினை வைத்திருந்த விஷ்ணு குண்டர் என்னும் மரபினர் கிருஷ்ணையாற்றங்கரையில் பல குகைக்கோயில்களை அமைத்தனர். அவற்றையெல்லாம் சிம்ம விஷ்ணுவும் அவன் மகன் மகேந்திரவர்மனும் பார்வையிட்டிருத்தல் கூடும். அந்த நினைவுகொண்டே அவர் மாமல்லபுரத்திலும் பிற இடங்களிலும் குகைக்கோயில்களை அமைத்திருத்தல் வேண்டும்.

சிம்மவிஷ்ணு வைணவன் ஆதலால், இவன் உருவச்சிலை ஆதிவராகர் கோயிலில் இருத்தல் வியப்பு அன்று. ஆனால், முதலில் சமணனாக இருந்து பின்னர் சைவனாக மாறிய மகேந்திர வர்மன் சிலை அங்கு இருத்தலே நினைக்கத்தக்கதாகும். மகேந்திர வர்மன் இளவரசனாக இருந்தபொழுது தன் தந்தையுடன் வைணவக் கோயிலுக்குப் போதல் வழக்கமாக இருந்திருக்கலாம். அவன் பட்டம் பெற்ற பிறகே சமணனாக மாறியிருக்கலாம். எனவே, மாமல்லபுரத்தில் உள்ள ஆதிவராகர் கோயில் சிம்ம விஷ்ணு காலத்திற்றான் அமைக்கப்பட்டது என்று கோடல் பொருத்தமுடையதாகும்.

## புலவர்கள்

சிம்மவிஷ்ணுவின் அவையில் சிறந்த புலவராக இருந்தவர் வடமொழி வல்லுநரான தாமோதர் எனப் பெயர்கொண்ட பாரவி என்பவர். அவர் முதலில் (கீழைச் சாளுக்கிய) விஷ்ணு வர்த்தனனுக்கு நண்பரானார். அவர் ஒருநாள் அரசனைத் தொடர்ந்து காட்டிற்குச் சென்றார். அரசன் வேட்டையாடி விலங்கிறைச்சி தின்றான். புலவரையும் தூண்டி இறைச்சியைத் தின்னச் செய்தான். அப் பாவத்தைத் தொலைக்க அப் புலவர் பற்பல இடங்கட்கும் சென்று பின்பு (கங்க அரசனான) துர்விநீதன் அவையை அடைந்தார்.

உடனே சிம்மவிஷ்ணு அதிகாரிகள் சிலரை அனுப்பி, பாரவியைத் தன் அவைக்கு வருமாறு பலமுறை தூண்டினான். அதனால் பாரவி காஞ்சி நகரம் வந்து, சிம்மவிஷ்ணுவின் அவைப் புலவரானார். ஓய்வு நேரங்களில் அரசனை மகிழ்வித்துப் பாக்கள் இயற்றிக்கொண்டிருந்தார்.

## இவன் காலத்து வாழ்ந்த அரசர்கள்

சாளுக்கிய நாட்டில் கி. பி. 609இல் அரியணையேறிய இரண்டாம் புலிகேசி அரசனாக இருந்தான். அவன் கி. பி. 642 வரை ஆண்டான். கங்க நாட்டைத் துர்விநீதன் (கி. பி. 605-650) என்பவன் ஆண்டுவந்தான். தெற்கே மாறவர்மன் அவனி சூளாமணி என்ற பாண்டியன் (கி. பி. 600 - 625) பாண்டிய நாட்டை ஆண்டுவந்தான். நாசிக்கிலும் வேங்கி நாட்டிலும் விஷ்ணுவர்த்தனன் என்பவன் (கி. பி. 614 - 635) ஆண்டு வந்தான்.

# 9. மகேந்திரவர்மன்
## (கி. பி 615—630)

சிம்மவிஷ்ணுவின் மகன் மகேந்திரவர்மன் ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் கி. பி. 615இல் அரியணை ஏறினான். இவன் இடைக்காலத்தில் சமண சமயத்தில் சேர்ந்து பின்பு சைவ சமயத்துக்கு மாறினான். அப்பர் சுவாமிகள் என்னும் திருநாவுக்கரசருடைய சைவப்பற்றினை யறிந்து தானும் சைவனாக மாறினான். குகைக்கோயில்கள் பலவற்றைக் குடைவித்தான். பாறைக் கோயில்கள் பலவற்றை அமைத்தான். இவன் காலத்தில் பல்லவர்-சாளுக்கியர் போர் உச்சநிலையை யடைந்தது. இவனுக்குப் பின்னரும் அந்தப் போர் 150 ஆண்டுகள் வரை நீடித்தது. சிற்பம், ஓவியம், இசை, நாடகம் முதலிய கலைகள் இவன் காலத்தில் வளர்ச்சியுற்றன.

### படையெடுப்பு

"சாளுக்கிய மன்னன் புலிகேசி, காஞ்சிபுரத்தில் இருந்த பல்லவ மன்னன் மகேந்திரன்மீது படையெடுத்துச் சென்றான். புலிகேசியின் பெரும்படைக் கடலைக் கண்டு காஞ்சி அரசன் காஞ்சிபுரக் கோட்டைக்குள் புகுந்துகொண்டான்" என்று 'அய்ஹொளே' கல்வெட்டுக் கூறுகின்றது.

இரண்டாம் நந்திவர்மன் வெளியிட்ட காசக்குடிப் பட்டயம் "மகேந்திரன் தன் பகைவரைப் புள்ளலூரில் அழித்தான்" என்று குறிக்கிறது.

மகேந்திரவர்மன் புலிகேசியுடன் போர்புரிய முடியாமல் ஒளிந்துகொண்ட செய்தி அவன் பகைவராகிய தமிழ்வேந்தரை மகிழச் செய்தது. ஆனால், சாளுக்கியன் பல்லவனைத் தோற்கடித்தான் என்ற செய்தி அக் கல்வெட்டுக்களில் இல்லை.

காவிரி வரை சென்ற சாளுக்கியன் திரும்பி வரும்பொழுது காஞ்சிபுரத்துக்கு அருகிலுள்ள புள்ளலூரில் மகேந்திரன் அவனைத் திடீரெனத் தாக்கி வளைத்துக்கொண்டு போர்புரிந்தான். அப் பகைவரை அழித்தான். இதுவே நடந்த செய்தி. மகேந்திரன் சாளுக்கியனுடைய செருக்கை ஒழித்தான் என்பதே உண்மை.

இரண்டாம் புலிகேசியின் தம்பி விஷ்ணுவர்த்தனன். அவன் மகன் கங்க துர்விநீதனுடைய மகள்வயிற்றுப் பேரன். புள்ள லூரில் நடந்த போரில் மகேந்திரன் படை கங்க - சாளுக்கியப் படைத்தலைவனை பெத்தணி சத்தியாங்கனைக் கொன்றது. அப் போரிலே குப்ஜவிஷ்ணுவர்த்தனன் (துர்விநீதன் மருமகன்) இறந்தான். இக் காரணங்களால் கங்கரும் சாளுக்கியரும் பல்லவனை எதிர்த்துப் போரிட்டுத் தோல்வியுற்றதோடு, தம் முயற்சியையும் கைவிட்டு ஓடினர்.

மகேந்திரவர்மன் வல்லம், தளவானூர், சீயமங்கலம், பல்லா வரம், திருச்சிராப்பள்ளி முதலிய இடங்களில் சிவன் கோயில் களையும் மகேந்திரவாடியில் பெருமாள் கோயிலையும் அமைத் துள்ளான்.

இவன் திருப்பாதிரிப்புலியூரில் இருந்த சமணப் பள்ளிகளை யும் பாழிகளையும இடித்து அக் கற்களைக்கொண்டு திருவதிகையில் ஒரு சிவன்கோயிலைக் கட்டினான். அதற்குக் 'குணபர ஈச்சுரம்' என்று பெயர் சூட்டினான். குணபரன் என்பது மகேந்திரனுடைய பல பெயர்களுள் ஒன்று.

## இவன் காலத்து அரசர்

பல்லவர்க்குக் கொடிய பகைவரான மேலைச் சாளுக்கியர் கிருஷ்ணையாறு வரை ஆண்டுவந்தனர். சாளுக்கியர் படை யெடுப்பால் நாட்டையிழந்த கதம்பர் சிற்றரசராக இருந்தனர். இவர்கட்குத் தெற்கே இன்றைய மைசூர்ப் பகுதியைக் கங்கர் ஆண்டுவந்தனர். அவர் தலைநகரம் தழைக்காடு என்பது. வடக்கே கோதாவரிக்கும் கிருஷ்ணையாற்றுக்கும் இடையில் கீழைச் சாளுக்கியர் ஆண்டுவந்தனர். தெற்கே பாண்டியர்

வன்மையுடன் ஆண்டுவந்தனர். பாண்டியர் நாட்டிற்கும் பல்லவர் நாட்டிற்கும், இடையே சோழர், களப்பிரர் என்போர் சிற்றரசர்களாக இருந்து சில ஊர்களை ஆண்டுவந்தனர்.

களப்பிரர் ஒருவேளை பல்லவரையும் மற்றொரு வேளை பாண்டியரையும் தழுவிக் காலத்துக்கு ஏற்றாற்போல வாழ்ந்துவந்தனர். சோழருள் ஒரு பிரிவினர் பல்லவர் துணையால் வடக்கே சென்று சிற்றரசர்களாகி, கடப்பை கர்நூல் கோட்டங்களை ஆண்டு வந்தனர். அவர்கள் தம்மை 'ரேநாண்டுச் சோழர் - கரிகாலன் மரபினர்' என்று கல்வெட்டுக்களிற் கூறிக்கொண்டனர்.

ஆந்திர அரசர் தெலுங்கு நாட்டின் சில பகுதிகளை ஆண்டனர். குண்டூர்க் கோட்டத்தையும் அதற்கு வடக்கே உள்ள கடற்கரை வெளியையும் பீமவர்மன் மரபினர் ஆண்டு வந்தனர். இங்ஙனம் சிற்றரசர் பலர் மகேந்திரன் நாட்டில் இருந்தனர்.

## மகேந்திரன் அமைத்த கோயில்கள்

இம் மன்னன் பல்லாவரம், சீயமங்கலம், திருவல்லம் முதலாகப் பல ஊர்களில் மலைகளைக் குடைந்து கோயில்களை அமைத்தான். தான் அமைத்த குகைக்கோயில்களில் கல்வெட்டுக்களையும் அமைத்துள்ளான். அவை வடமொழியில் அல்லது தமிழ்மொழியில் பொறிக்கப்பட்டிருக்கும்.

### (1) பல்லாவரம் குகைக்கோயில்

சென்னைக்கு அடுத்த பல்லாவரம் என்னும் புகைவண்டி நிலையத்துக்கு எதிரே பல குன்றுகள் லாடம் போன்ற அமைப்பில் இருக்கின்றன. அவற்றின் இடையே பல சிற்றூர்கள் இருக்கின்றன. அவற்றுள் பெரியது 'ஜமீன் பல்லாவரம்' என்பது. அந்த ஊரில் உள்ள குன்றில் இன்று முஸ்லீம் தொழுகை இடமாக அமைந்துள்ள மண்டபமே மகேந்திரவர்மன் அமைத்த குகைக்கோயில் ஆகும். இது மலைச் சரிவில் குடையப்பட்டுள்ளது. அங்கு ஐந்து சிலைகள் இருந்ததற்கு உள்ள அடையாளங்கள் காணப்படுகின்றன. விட்டங்களில் உள்ள கல்வெட்டுக்களின்மேல் வெள்ளை அடித்திருப்பதால் படிக்க இயலவில்லை.

(2) பல்லவபுரம்

பழைய பல்லவபுரம் என்னும் பெயருடன் ஓரூர், இக் குகைக் கோயிலுக்கு எதிரே உள்ளது. மகேந்திரன் காலத்தில் இது இயற்கை அரண் கொண்ட முதல்தர நகரமாக இருந்திருத்தல் கூடும். லால்குடி தாலுக்காவில் உள்ள பல்லாவரம் வேறு.

(3) வல்லம்

வல்லம் என்னும் ஊர் செங்கற்பட்டுக்குக் கிழக்கே திருக் கழுக்குன்றத்துக்குப் போகும் சாலையில் மூன்று கி. மீ. தொலைவில் உள்ளது. அங்கு மூன்று குகைகள் உள்ளன. அவற்றை அமைத்தவன் மகேந்திரவர்மன். அங்கு ஒரு தமிழ்க் கல்வெட்டும் உள்ளது.

(4) மாமண்டூர்

இது கச்சிக்குத் தெற்கே 9·2 கி. மீ. தொலைவில் உள்ளது. இங்குள்ள ஒரே சிறிய குன்றில் நான்கு கோயில்கள் உள்ளன. மகேந்திரன் கல்வெட்டுக்கள் இங்கும் உள்ளன. இங்கும் மகேந்திரனால் ஓர் ஏரி வெட்டப்பட்டது.

(5) மகேந்திரவாடி

இவ்வூர் அரக்கோணத்துக்கு அணித்தாயுள்ள சோழ சிங்கபுரம் (சோளிங்கர்) என்னும் புகைவண்டி நிலையத்துக்குத் தென்கிழக்கே 5 கி. மீ. தொலைவில் உள்ளது. இங்குள்ள குன்றில் கீழ்ப்புறத்தில் ஒரு சிறிய குகைக்கோயில் உள்ளது. இங்குள்ள கல்வெட்டில் குணபரன் என அரசன் பெயர் குறிக்கப்பட்டுள்ளது. இங்கு மகேந்திரவர்மனால் ஓர் ஏரி வெட்டப்பட்டிருந்தது.

(6) தளவானூர்

இது தென்னார்க்காட்டுக் கோட்டத்துள் 'பேரணி' என்னும் புகைவண்டி நிலையத்துக்கு மேற்கே 8 கி. மீ. தொலைவில் உள்ளது. இவ்வூருக்கு வடக்கேயுள்ள பஞ்சபாண்டவர் மலையில் தென் பக்கத்தில் மகேந்திரன் குடைவித்த கோயில் இருக்கிறது.

இதனுள், இலிங்கம் இருக்கின்றது. இங்குள்ள கல்வெட்டில் ஒரு பகுதி தமிழிலும் மற்றொரு பகுதி வடமொழியிலும் உள்ளது. அக்காலத்தில் இவ்வூர் 'வேண்பட்டு' என வழங்கப்பெற்றது.

## (7) சீயமங்கலம்

இது வடவார்க்காட்டுக் கோட்டத்தில் வந்தவாசிக் கூற்றத்தில் தேசூருக்கு ஒன்றரை கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இது 'சிம்மவிஷ்ணு சதுர்வேதி மங்கலம்' என்னும் பெயர் மருவிச் சீயமங்கலம் என வழங்கப்படுகிறது. உள்ளறையில் இலிங்கம் உள்ளது.

## (8) மண்டபப்பட்டு

இது புதுவைக்கு அடுத்த சின்னபாபு சமுத்திரம் என்னும் புகைவண்டி நிலயத்துக்குத் தெற்கே 3 கி. மீ. தொலைவில் உள்ளது. இங்குள்ள குகைக்கோவிலே மகேந்திரனால் முதன் முதலில் அமைக்கப்பட்டதாக இருக்கலாம் என்று கருத வேண்டியுள்ளது. "கல், மரம், உலோகம், சுண்ணும்பு இல்லாமல் பல்லவன் கோவில் அமைத்தான்" என்பதை உணர்த்தும் கல்வெட்டு ஒன்று இங்கு உள்ளது.

## (9) திருச்சி மலைக்கோயில்

திருச்சிராப்பள்ளிக் குன்றின் நடுவில் குடைந்து அமைத்த சிவன் கோயில் சிறந்த வேலைப்பாடு கொண்டதாகும். இதன் மேல்புறச் சுவரில் கண்ணையும் கருத்தையும் ஈர்க்கும் பதுமைகள் செதுக்கப்பட்டுள்ளன. இங்குள்ள சிற்பங்கள் மிக்க வேலைப்பாடு உடையன, "இக் கோவிலை, சத்யசந்தன், சத்ருமல்லன், குணபரன் என்னும் விருதுகள் பூண்ட அரசன் அமைத்தான்" என்று இங்குள்ள கல்வெட்டுக் குறிக்கிறது.

## (10) நாமக்கல் மலைக்கோவில்

இங்கு உள்ள அரங்கநாதர் மலைக்கோயில் மகேந்திரன் அமைத்ததாகும். இங்கு இருக்கும் பள்ளிகொண்ட பெருமாள் உருவம் சிறந்த செதுக்கு வேலை வாய்ந்தது. இது போன்ற

வேலைப்பாடு உலகில் எங்குமே இல்லை எனக் கூறுகின்றனர். கோயிலும் வியக்கத்தக்க வேலைப்பாடு உள்ளது. முன் மண்டபத்துக்கு வெளியிடம் மூங்கிலால் செய்த தாழ்வாரத்தைப் போல மலையைக் குடைந்து அமைக்கப்பட்டுள்ளது.

## மகேந்திரவர்மனும் மகாபலிபுரமும்

மகாபலிபுரத்தில் உள்ள கோயில்களில் பழைமையான அமைப்பு உடையது **ஆதிவராகர் கோவில்** ஆகும். அதனைச் சிம்மவிஷ்ணு அமைத்தான் என்று பலர் கூறுவர். உண்மையில் மகேந்திரவர்மனே அமைத்தான் என்பதற்குப்பல ஆதாரங்கள் உள்ளன.

'மகாபலிபுரத்தில் மகேந்திரன் காலத்துக் கோயில்களே இல்லை. எல்லாம் அவன் மகனான **நரசிம்மவர்மன்** என்னும் மாமல்லன் அமைத்தவையே' என்று ஆராய்ச்சியாளர் பலர் தவருகக் கூறிவிட்டனர். பல்லாவரத்திலிருந்து புதுக்கோட்டை வரை பல இடங்களில் குகைக்கோயில்களை அமைத்த மகேந்திர வர்மன் காஞ்சிக்கு அண்மையிலுள்ள மகாபலிபுரத்தைக் கவனியாது இருந்திருத்தல் முடியுமா? என்பதை அவர்கள் எண்ணிப் பார்த்திலர். மகாபலிபுரத்தில் உள்ள தருமராசர் மண்டபமும் கொடிக்கால் மண்டபமும் மகேந்திரன் காலத்து அமைந்தவை என்று கொள்ளுதலே பொருத்தமுடையதாகும்.

## இக் கோவில்கட்கு மூலம்

கிருஷ்ணையாற்றங்கரையில் விநுகொண்டாவைத் தலைநகர மாகக்கொண்டு கி. பி. 450 - 620 வரை ஆண்ட விஷ்ணுகுண்டர் என்னும் மரபினர் பல இடங்களில் குகைக்கோயில்களை அமைத் துள்ளனர். அக் கோயில்களைக் கண்டு மகிழ்ந்த மகேந்திரவர்மன் அக் கோயில்களைப்போலவே தன் நாட்டிலும் பல கோயில்களை அமைத்தான். மலைகளைக் குடைந்து கோயில்களை அமைத்த பெருமை மகேந்திரவர்மனையே சாரும்.

## மகேந்திரன் பட்டப்பெயர்கள்

மகேந்திரவர்மனுக்குப் பல பட்டப் பெயர்கள் இருந்தன. அவற்றுள் சில வருமாறு : குணபரன், அவனிபாஜனன்,

லளிதாங்குரன், புருஷோத்தமன், சத்தியசந்தன், விசித்திர சித்தன், நரேந்திரன், சேத்தகாரி, போத்தரையன், சத்துரு மல்லன், மகாப்பிடுகு, நயபரன், விக்ரமன், கலகப் (போர்) பிரியன், மத்தவிலாசன், அநித்தியராகன், சங்கீரணசாதி முதலியன. இவனுக்குப் பல தெலுங்குப் பட்டங்களும் உண்டு. குண்டூர்க் கோட்டத்தில் 'சேஜர்லா' என்னும் இடத்தில் இவன் கல்வெட்டுக் காணப்படுகிறது. இவற்றை நோக்க இவ் வரசன் கிருஷ்ணையாறு வரை ஆண்ட பேரரசன் என்பது நன்கு விளங்குகிறது.

## மகேந்திரன் வளர்த்த கலைகள்

மகேந்திரவர்மன் நாகரிகக் கலைகளான இசை, நடனம், சிற்பம், ஓவியம், நாடகம் இவற்றை நலமுற வளர்த்தவன். கல்வெட்டுக்களாலும் அவன் அமைத்த குகைக்கோயில்களாலும் இவற்றை அறியலாம்.

## மகேந்திரன் நூலாசிரியன்

மாமண்டூர்க் கல்வெட்டில் குறிக்கப்பட்ட மத்தவிலாசப் பிரகசனம் என்னும் நூல் சில ஆண்டுகட்குமுன்பு திருவிதாங் கோட்டில் வெளியிடப்பட்டது. இந்நூல் வடமொழியில் இயற்றப் பெற்றுள்ளது. மகேந்திரவர்மன் வடமொழிப் புலவன் என்பதை இதனால் அறியலாம். கி. பி. ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் பல சமயத்தாரும் தனிப்பட்ட நிலையில் வாழ்க்கை நடத்தியதை இந் நூல் ஓரளவு எடுத்துக் காட்டுகிறது.

காபாலிக சமயத்தவன் ஒருவன் ஒழுக்கங்கெட்ட காபாலினி ஒருத்தியுடன் குடித்து மயங்கிக் கிடத்தல், அப்பொழுது அவன் கையில் இருந்த காபாலத்தை (பிச்சைப் பாத்திரம்) ஒரு நாய் கவர்ந்து செல்லல், அதனை அறியாத காபாலிகன் அவ் வழியே சென்ற பௌத்த துறவியை மறித்து அவனுடன் பூசலிடுதல், இப் பூசலைத் தீர்க்க ஒழுக்கங்கெட்ட பாசுபத சமயத்தான் ஒருவனைக் காபாலிகன் அழைத்தல், இறுதியில் வெறியன் ஒருவனிடமிருந்து காபாலத்தைப் பெறுதல் ஆகிய செய்திகள் அந் நூலில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன.

## இதனால் அறியப்படுவன

மகேந்திரவர்மன் காலத்தில் பௌத்தம், காபாலிகம், பாசுபதம், சமணம் முதலிய சமயங்கள் இருந்த நிலையை அறியலாம். (1) காபாலிகனுக்குக் காபாலம் என்னும் மண்டையோடு இன்றியமையாதது. அவன் அதனை இழந்தால் குறித்த காலத்துக்குள் அதனை அடைந்தே தீரவேண்டும் என்பது விதி. அவன் தன் உடம்பு முழுவதும் சாம்பல் பூசிப் பார்வைக்கு அருவருப்பாக இருப்பான். மண்டையோட்டில் மதுவை அருந்துவான். அவன் மாட்டுக் கொம்பு ஒன்றையும் ஏந்தித் திரிவான்; வழிபாட்டின் போது அதனை ஊதுவான். அதனில் நீர் அருந்துவான். காபாலிக ஆடவரும் பெண்டிரும் கள்ளங்கவடு இல்லாமல் பழகி வந்தனர். (2) பௌத்த துறவிகள் ஊன் உண்டு வந்தார்கள். பல பௌத்தப் பள்ளிகளை (விகாரங்களை) நடத்திக்கொண்டு இன்பமாகக் காலங்கழித்து வந்தனர். தங்கள் சமயக் கட்டளைகளை மீறி நடந்தனர். தங்கள் குறைகளை மறைக்கவே உடலை மூடித் திரிந்தனர் என்னும் செய்திகளை அறியலாம். இவன் சமணரைப் பற்றியும் சிறிது இழிவாகக் கூறியிருத்தலால் இந் நூல் மகேந்திரன் சைவனாக மாறிய பிறகே இயற்றப்பட்டதாகக் கொள்ளலாம். இவன் சமணத்தைவிட்டு நீங்கிய பிறகு தமிழ்நாட்டில் சமண மதம் செல்வாக்கை இழக்கத் தொடங்கியது.

## மகேந்திரனுடைய நற்பண்புகள்

மகேந்திரவர்மனைப்பற்றிய கல்வெட்டுக்களிலிருந்து, இவன் வடமொழியிற் சிறந்த புலமையுடையவன், இசைக்கலையை வல்லாரிடம் முறையாகப் பாடங் கேட்டவன், சிற்ப ஓவிய, நடனக் கலைகளை வளர்ப்பதில் பேரார்வமுடையவன், போர் புரிவதிற் சிறந்தவன் என்பவற்றை நன்கு அறியலாம், இவன் இயற்றிய மத்தவிலாசம் என்னும் நூலிலிருந்து, இவன் தந்தையிடம் மிக்க மதிப்புடையவன் என்பதும் தன் நாட்டுப் பல சமயங்களை நன்கு ஆராய்ந்து அறிந்தவன் என்பதும், அருங்கலை விநோதன் என்பதும் அறியலாம்.

# 10. நரசிம்மவர்மன்
## (கி. பி. 630—668)

மகேந்திரவர்மன் மகன் நரசிம்மவர்மன் தன் தந்தையைப் போலவே பெருவீரனாக விளங்கினான். இவன் ஆட்சிக் காலம் தென்னிந்திய வரலாற்றில் சிறப்பிடம் பெற்றதாகும். இவன் வரலாற்றில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை : (1) வாதாபி நகரத்தைக் கைப்பற்றியது. (2) இலங்கைமீது படையெடுப்பு. (3) கோயில்களும் கோட்டைகளும் அமைத்தமை. (4) சீனப்பயணி யுவான்சுவாங் என்பவர் பல்லவ நாட்டிற்கு வந்தது. (5) தமிழ் நாட்டுச் சைவ நிலை முதலியன.

## பல்லவர்—சாளுக்கியர் போர்

### (1) பட்டயங்கள் கூறும் கூற்று

மகேந்திரவர்மனிடம் தோல்வியுற்று ஓடிய இரண்டாம் புலிகேசி நரசிம்மவர்மன் பட்டம் பெற்ற சில ஆண்டுகட்குள் பல்லவ நாட்டின்மீது படையெடுத்தான். முன்போலவே சாளுக்கிய வேந்தனாகிய புலிகேசி காஞ்சியை நெருங்கினான். காஞ்சிக்கு அருகில் உள்ள மணிமங்கலம் முதலிய இடங்களில் கடும்போர் நடந்தது. இப் போரைப் பற்றியும் பின்விளைவுகளைப் பற்றியும் பல்லவர் பட்டயங்களே விரிவாகக் கூறுகின்றன. சாளுக்கியர் பட்டயங்களில் தெளிவாகக் கூறப்படவில்லை.

### (2) கூரம் பட்டயத்தில் உள்ளவை

கீழ் மலையிலிருந்து கதிரவனும் திங்களும் தோன்றினாற்போல இப் பல்லவர் மரபில் வந்தவனும், வணங்காமுடி மன்னர் தம் மணிமுடிமேல் இருக்கும் சூடாமணி போன்றவனும், தன்னை எதிர்த்த பகைவராகிய யானைக் கூட்டத்துக்குச் சிங்கம் போன்றவனும், நரசிங்கப் பெருமாளே வந்தாற்போல் தோன்றியவனும்,

சேர சோழ பாண்டிய, களப்பிரரை முறியடித்தவனும், பல நூறு போர்கள் புரிந்தவனும், பரியலம், மணிமங்கலம், சூரமாரம் முதலிய இடங்களிற் போர்களிற் புலிகேசி தோற்று ஓடிய பொழுது வெற்றி என்னும் மொழியை அவன் முதுகு என்னும் பட்டயத்தின்மீது எழுதினவனும் ஆகிய நரசிம்மவர்மன்...... என்பது.

## (3) உதயசந்திர மங்கலப் பட்டயங்கள் கூறும் பகுதி

"நரசிம்மவர்மன் அகத்தியனைப் போன்றவன்; அடிக்கடி வல்லப அரசனை (சாளுக்கியனை)ப் பரியலம், மணிமங்கலம், சூரமாரம் முதலிய இடங்களிற் போர்களில் வென்றவன்; வாதாபியை அழித்தவன்" என்பது.

## (4) வேலூர்ப் பாளையப் பட்டயங்கள் கூறுவது

"விஷ்ணுவைப் போன்ற புகழுடைய நரசிம்மவர்மன் தன் பகைவரை அழித்து வாதாபியின் நடுவில் தன் வெற்றித் தூணை நாட்டினான்" என்பது.

புலிகேசி முதல் படையெடுப்பிலும் காஞ்சி வரை எதிர்ப்பின்றி வந்துவிட்டான் என்பதையும் இம் முறையும் எதிர்ப்பின்றிக் காஞ்சி வரை வந்தனன் என்பதையும் நோக்க எதிரியைத் தம் நாட்டிற்குள் தடையின்றி வரச்செய்து (தம்பால் இழுத்து) பிறர் உதவியை அவன் பெறுதவாறு செய்து, அவனை வளைத்து முறியடித்தலையே மகேந்திரவர்மனும், அவன் மகன் நரசிம்ம வர்மனும், நோக்கமாகக்கொண்டிருந்தனர் என்பது நன்கு விளங்கு கிறது. சாளுக்கிய சேனை நெடுந்தொலைவு வந்து களைப்புற் றிருக்கும்போது, புது வலிமைகொண்ட பல்லவர் சேனை எதிர்த்து வளைத்து அழித்தலும், தோற்றோடச் செய்தலும் எளிய செயலேயாகும். இந் நோக்கம் கொண்டே பல்லவர் இச் சூழ்ச்சி முறையைக் கையாண்டனர்.

### வாதாபி கொண்டது

சாளுக்கியர் தலைநகரான வாதாபி நகரம் பல்லவ வேந்தன் நரசிம்மவர்மனுடைய படைகளால் கைப்பற்றப்பட்டது. வாதாபி

என்னும் நகரத்தை அழித்த காரணம் பற்றியே நரசிம்மவர்மன் 'வாதாபி என்னும் அசுரனை அழித்த அகத்தியர் போன்றவன்' என்று கூறப்பட்டான். எனவே, சாளுக்கியன்மீது இருந்த சினத்தை நரசிம்மவர்மன் அவனது தலைநகரை அழித்துத் தீர்த்துக்கொண்டான் என்பது தெரிகிறது. நகரத்தில் பல சிறந்த கட்டடங்கள் அழிக்கப்படவில்லை. பல்லவன் வாதாபி கொண்ட காலம் கி. பி. 642 என்பர் ஆராய்ச்சியாளர். அந் நகரம் ஏறத்தாழ 13 ஆண்டுகள் (கி. பி. 642 - 655 வரை) பல்லவர் கையில் இருந்தது. வாதாபியில் தக்கிண ஈரப்பன் கோயிலுக்கு அருகில் உள்ள கம்பம் ஒன்றில் நரசிம்மவர்மனது பதின்மூன்றும் ஆண்டுக் கல்வெட்டொன்று காணப்படுகிறது. அது சிதைந்து இருப்பதால், 'வாதாபி' என்னும் சொல்லும் 'நரசிம்மவர்மன்' என்னும் சொல்லும் படிக்கக்கூடியனவாக உள்ளன. நரசிம்ம வர்மன் தன் வெற்றியை அத் தூண்மீது பொறித்தனன் போலும்!

## சேனைத்தலைவர் பரஞ்சோதியார்

கி. பி. 12ஆம் நூற்றாண்டில் குலோத்துங்க சோழ மன்னனுடைய அவையில் உயர் அலுவலராக இருந்த சேக்கிழார் பெருமான் பல்லவ மன்னன் வாதாபிகொண்ட செய்தியைத் தாம் கேட்டறிந்தவரை கூறியுள்ளார்.

நரசிம்மவர்மனுடைய சேனைத்தலைவராகிய பரஞ்சோதியார் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவர் என்பதும், சிறுத் தொண்டரே பரஞ்சோதியார் என்பதும், அவரே வாதாபியுள் படைகளுடன் சென்று சாளுக்கியருடைய செருக்கு அடங்குமாறு போரிட்டவர் என்பதும், தம் யானைகளைக்கொண்டு அந் நகரைப் பாழாக்கியதோடு பகைவருடைய யானைகளையும் குதிரைகளையும் செல்வத்தையும் கவர்ந்து சென்று தம் மன்னன் நரசிம்மவர்மன் முன்னிலையில் வைத்தவர் என்பதும் பெரிய புராணத்தால் தெளிவாக அறியலாம். நரசிம்மவர்மன் தன் தலைநகராகிய காஞ்சியில் தங்கியிருந்தான். சேனைத்தலைவராகிய பரஞ்சோதியாரே படைகளுடன் சென்று வாதாபி நகரத்தை அழித்துப் பகைவரின் செருக்கை அடக்கினார் என்ற உண்மையையும் பெரியபுராணத்தால் அறியலாம்.

இரண்டாம் புலிகேசியின் மகனுன முதலாம் விக்கிரமாதித்தனது கர்நூல் பட்டயம் இதனை விளக்கமாகக் கூறுகிறது. இதனால், நரசிம்மவர்மனுக்கு **வாதாபி கொண்டவன்** என்னும் சிறப்புப் பெயர் உண்டாயிற்று.

## பல்லவர்—பாண்டியர் போர்

நரசிம்மவர்மன் ஆண்ட காலத்தில் தெற்கே பாண்டிய நாட்டில் கி. பி. 640 முதல் 680 வரை அரிகேசரி பராங்குசன் என்ற நெடுமாறன் ஆண்டு வந்தான். அவன் சேர, சோழ, களப்பிரர்களுக்குத் தலைவனாக இருந்தான். பல்லவர் படையுடன் பரஞ்சோதியார் சாளுக்கியத் தலைநகராகிய வாதாபியை அழிக்கச் சென்றபோது நரசிம்மவர்மன் பாண்டியரோடு போரிட்டுச் சங்கர மங்கை என்னும் இடத்தில் முதலில் தோல்வியுற்றான். பின்னர் பெரும்படை கொண்டு பாண்டியனை வென்றான் என்ற உண்மைகள் பல்லவர் பாண்டியர் பட்டயங்களால் அறியப்படுகிறது.

## பல்லவர்—கங்கர் போர்

இரண்டாம் புலிகேசிக்குப் பிறகு கி. பி. 642 முதல் கி. பி. 654 வரை சாளுக்கிய நாடு குழப்பத்தில் இருந்தது. இரண்டாம் புலிகேசியின் மக்கள் மூவர். அவர் சந்திராதித்தன், ஆதித்தவர்மன், (முதலாம்) விக்கிரமாதித்தன் என்பவர். மூத்தவன் சந்திராதித்தன் இறந்த பிறகு பின்னவர் இருவர்க்கும் அரியணைபற்றிய பூசல் உண்டாயிற்று. ஆதித்தவர்மன் நரசிம்ம வர்மனுடைய துணையை வேண்டினான். விக்கிரமாதித்தன் தன் பாட்டன் உதவியை நாடினான். அதனால் வேறு வழியின்றித் துணையை வேண்டினான். அதனால், நரசிம்மன் சாளுக்கியருடைய அரசியலில் அதிக அக்கறை செலுத்தாமல் தன்னை நெருங்கி வந்து கேட்டவனுக்கு உதவியாக ஒரு படையை அனுப்பினான். அப் படையை விக்கிரமாதித்தன் பாட்டனாகிய துர்விநீதன் முறியடித்து வெற்றி பெற்றிருக்கலாம். நரசிம்மனால் அனுப்பப் பட்ட படையை வென்றமையால், துர்விநீதன் பேரரசனாகிய நரசிம்மவர்மனையே நேரில் வென்றுவிட்டதாக நினைத்து மகிழ்ந்து தன் கல்வெட்டிலும் பொறிக்கும்படி செய்தான். துர்விநீதன் வெற்றியால் பல்லவர்க்கு எந்தவிதமான குறையும் ஏற்படவில்லை.

## இலங்கைப் போர்

நரசிம்மவர்மன் காலத்தில் இலங்கைப் பட்டத்துக்குரிய மானவன்மன் என்னும் இளவரசன் அங்கிருந்த அட்டதத்தன் என்பவனால் துரத்தியடிக்கப்பட்டான். அதனால், மானவன்மன் காஞ்சிக்கு வந்து நரசிம்மவர்மனிடம் முறையிட்டான். நரசிம்ம வர்மன் புலிகேசியுடன் போரிட்டபோது காஞ்சியில் வந்து அடைக்கலம் அடைந்திருந்த மானவன்மன் நரசிம்மனுக்குப் போர்க் களத்தில் உதவி புரிந்தான். இந்த நன்றியை நினைத்து நரசிம்மன மானவன்மனுக்குத் தன் படைகளைத் துணையாக அனுப்பி இலங்கையின்மீது போரிடச் செய்தான்.

## இலங்கைப் போர் II

மானவன்மன் நரசிம்மவர்மனுடைய படையைத துணை யாகச் சேர்த்துக்கொண்டு இலங்கைமீது, முதன்முறை படையெடுத்தபோது தோல்வி யடைந்தான். அதனால், நரசிம்மன் தானும் துணையிருந்து இலங்கையை வெல்வதுபோலக் காட்டித் தன் சேனைகளை மட்டும் இரண்டாம் முறை கப்பலேற்றி யனுப் பினான். தன் படை வீரர் முதலியவர்க்குத் தெரியாமல் கப்பலில் இருந்து இறங்கித் தன் நகருக்குச் சென்றான். காரணம் என்ன? பகையரசர் அவ் வேளையில் தன் தலைநகருக்கு வந்து போரிடா திருப்பதற்காக. இலங்கை நோக்கிச் சென்ற பல்லவப் படை வீரர் வீரப் போர் புரிந்து பகைவனை வென்று மானவன்மனுக்கு முடிசூட்டினர். இதனைக் காசக்குடிப் பட்டயம் கூறுகிறது. நரசிம்மன் இலங்கையில் பெற்ற வெற்றி இராமன் இலங்கையில் பெற்ற வெற்றி போன்றது எனக் குறிப்பிட்டுள்ளது.

## சீன வழிப்போக்கர் கூறுவது

ஹர்ஷனது பேரரசையும் இரண்டாம் புலிகேசியினது சாளுக்கியப் பேரரசையும் கண்டு மகிழ்ந்து பௌத்தர் உறையும் இடங்களைக் காணவந்த சீன வழிப்போக்கரான இயூன்சங் (யுவான்சுவாங்) கி. பி. 642இல் காஞ்சிக்கு வந்தார். அவர் தம் குறிப்புக்களில் காஞ்சியைச் சுற்றியுள்ள நாட்டைத் திராவிடம் என்று குறித்துள்ளதோடு, "இந்த நிலம் செழிப்புள்ளது; நல்ல

விளைவு தருவது; நாடு வெப்பமானது; மக்கள் அஞ்சா நெஞ்சினர்; உண்மைக்கு உறைவிடமானவர்; கற்றவரையும் உயர்ந்த கொள்கைகளையும் மதிப்பவர். இந் நாட்டில் 100 சங்கிராமங்கள் (பௌத்த மடங்கள்) இருக்கின்றன. பதினாயிரம் பௌத்த துறவிகள் இருக்கின்றனர்; சைவ, வைணவ, சமணக் கோயில்கள் ஏறத்தாழ 80 இருக்கின்றன. இந்தத் திராவிட நாட்டில் திகம்பர சமணர் பலர் இருக்கின்றனர். புத்தர் காஞ்சிக்கு வந்து பலரைப் பௌத்தராக்கியதாக இந் நாட்டில் கூறப்படுகிறது. அசோகன் இந் நாட்டில் பல தூபிகளை அமைத்தான். அவற்றுள் சில காஞ்சியைச் சுற்றிலும் பழுதுற்ற நிலையில் இருக்கின்றன. நாலந்தாப் பல்கலைக்கழகத்தில் சிறந்த பேராசிரியராக இருந்த தர்மபாலர் காஞ்சிப் பதியினர் எனப்படுகிறார். நான் பாண்டிய நாட்டையும் சென்று கண்டேன். அங்குச் சிலரே உண்மைப் பௌத்தராக இருக்கின்றனர். பலர் பொருள் ஈட்டுவதிலேயே ஈடுபட்டுள்ளனர். பாண்டிய நாட்டில் பௌத்தம் அழியும் நிலையில் உள்ளது. பல இடங்களில் பௌத்த மடங்கள் இருந்தமைக்குரிய அறிகுறிகள் காணப்படுகின்றன" என்று குறித்துள்ளார். மேலும் அந்த அறிஞர், "காஞ்சி 9·6 கி. மீ. சுற்றளவு உடையது; அது கடற்கரை நோக்கி 32 கி. மீ. விரிந்துள்ள நகரம் ஆகும். இங்கிருந்து பல கப்பல்கள் இலங்கைக்குச் செல்கின்றன" என்று கடல் வாணிகச் சிறப்பையும் குறிப்பிட்டுள்ளார்.

### குகைக்கோயில்கள்

நரசிம்மவர்மன் தன் தந்தையைப்போலவே சில குகைக் கோயில்களை அமைத்துள்ளான். இவன் விருதுப் பெயர்கள் இவன் அமைத்த குகைக்கோயில்களில் வெட்டப்பட்டிருக்கும். முன்மண்டபச் சுவர்களில் சிறுமணிக் கோவைகளும் அணியணியாய் அன்னப்பறவைகளும் காணப்படும்.

தூண்களின் அடியில் ஏறக்குறைய இரண்டு முழ அகலமும் இரண்டு முழ உயரமுங்கொண்டு திறந்த வாயுடன் இருக்கும் சிங்கங்கள் தூண்களைத் தம் தலைமீது தாங்கியிருப்பது போன்ற வேலைப்பாடு காணப்படும். சிங்கங்கள் நரசிங்கனுடைய பெயரை நினைவூட்டுகின்றன என்று கூறினும் பொருந்தும்.

நாமக்கல் மலையடியில் இருக்கின்ற நரசிங்கப் பெருமாள் குகைக்கோயில் இம் மன்னன் காலத்தது. அதன் சுவர்களில் புராணக் கதைகள் சிற்ப வடிவில் செதுக்கப்பெற்றுள்ளன. திருச்சிராப்பள்ளி மலையடியில் தென்மேற்கு மூலையில் உள்ள குகைக்கோயில் இவன் காலத்தது. இதன் கிழக்குப் பக்கத்தில் சிவன் கோயிலும், மேற்குப் பக்கத்தில் பெருமாள் கோயிலும் குடையப்பட்டுள்ளன. இவ் விரண்டு கோயில்களுக்கு இடையில் உள்ள பெரிய மண்டபச் சுவர்மீது சிவன், பிரமன், இந்திரன், துர்க்கை, கணபதி ஆகியவர் உருவங்கள் செதுக்கப்பெற்றுள்ளன. கோயிலின் முன்பக்கத்தில் மரவிட்டங்கள்போலக் கல்லில் அமைத்துள்ள வேலைப்பாடு கண்டு வியத்தற்குரியது. கல்விட்டங்களின் நுனியில் பெருவயிறு கொண்ட ‘குபேரன்’ உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

திருச்சிராப்பள்ளிக்கு வடமேற்கேயுள்ள திருவெள்ளறையில் மலைமீது பழைய பெருமாள் கோயில் ஒன்று இருக்கிறது. அம் மலையின் அடியில் பெரிய குகைக்கோயில் குடையத் தொடங்கி வேலை முடியாமல் நிறுத்தப்பட்டுள்ளது. இந்த வேலைப்பாடு நரசிம்மன் காலத்தது என்று கூறலாம். புதுக்கோட்டையைச் சேர்ந்த குடுமியாமலையில் மகேந்திரனுடைய கல்வெட்டுக்கு அண்மையில் உள்ள குகைக்கோயில் நரசிம்மவர்மன் காலத்தது. புதுக்கோட்டையைச் சேர்ந்த திருமையத்தில் மகேந்திரன் அமைத்த சிவன் கோயிலுக்குப் பக்கத்தில் உள்ள வைணவக் குகைக்கோயில் நரசிம்மன் அமைத்ததேயாகும்.

### மாமல்லபுரமும் நரசிம்மவர்மனும்

மாமல்லபுரத்தில் மகேந்திரவர்மன் தொடங்கிய வேலையை - சிற்ப ஓவியக்கலைகளை நரசிம்மவர்மன் தொடர்ந்து நடத்திப் பெரு வெற்றி பெற்றான். இவனது வெற்றிக்கு இவன் கி. பி. 642இல் பெற்ற வாதாபி வெற்றியே சிறந்த காரணம் ஆகும். வாதாபியில் புலிகேசியின் சிற்றப்பன் மங்களேசன் அழகுற அமைத்த குகைக்கோயில்கள் பல உண்டு. அவை வேலைப்பாடு கொண்டவை; கண்ணையும் கருத்தையும் ஈர்ப்பவை. அவற்றைக் கூர்ந்து நோக்கிய நரசிம்மவர்மன் மாமல்லபுரத்தில் அவைபோல

அமைத்துள்ளான் என்பது பொருந்தும். சாளுக்கியர் வளர்த்த கலைகளைக் கண்டு மகிழ்ந்த நரசிம்மன், அவற்றை அமைத்த வல்லுநரை அழைத்துச் சென்று மாமல்லபுரத்தில் அமைத்தான் என்று எண்ணத்தக்க விதமாக ஒருமைப்பாடு காணப்படுகிறது.

## மூவகை வேலைப்பாடுகள்

நரசிம்மவர்மன் மாமல்லபுரத்தில் மூவகை வேலைப்பாடுகளை அமைத்துள்ளான். அவை (1) குகைக்கோயில்கள் (2) தேவர்கள் (3) கற்சிலைகள் என்பன.

## (1) குகைக்கோயில்கள்

மகிடாசுர மண்டபம், வராக மண்டபம், திரிமூர்த்தி மண்டபம் ஆகிய மூன்றும் நரசிம்மன் அமைத்த குகைக் கோயில்கள். வாதாபியில் உள்ள தூண்களில் காணப்படும் வேலைப்பாடுகள் இந்த மண்டபத் தூண்களில் அமைந்துள்ளன. குகைக்கோயில் சுவர்களில் கண் கவரத்தக்க சிற்பங்கள் உள்ளன. மேற்கூறிய மண்டபங்களைக் கோயில்கள் என்றே கூறுதல் வேண்டும்.

## ஒற்றைக்கல் கோயில்கள்

மகேந்திரவர்மனைத் தொடர்ந்து அவன் மகன் நரசிம்மவர்மன் பல குகைக்கோயில்களை அமைத்தது மட்டுமன்றிப் பெரிய பாறைகளாகிய ஒற்றைக் கல்களைச் செதுக்கிக் கோயிலாகவும் அமைத்துள்ளான். அவற்றைப் பிற்காலத்தார் ரதங்கள் அல்லது தேர்கள் எனத் தவறாக வழங்கினர். பஞ்சபாண்டவர் தேர்கள் என வழங்கப்படுபவை கோயில்களேயாகும்.

### (க) தருமராசன் தேர்

இது சிவன் கோயில். இது மூன்று தட்டுக்களைக்கொண்ட மேற்பாகத்தை (விமானத்தை) உடையது.

### (உ) வீமசேனன் தேர்

இதன் மேற்கூரை அமைப்பும் சாளர அமைப்பும் காஞ்சியில் உள்ள அமைப்பைப் பெரிதும் ஒத்துள்ளன. இக் கோயில்

அக்காலத்தில் பௌத்த சமயக் கலை வளர்ச்சி தென்னாட்டில் பரவியிருந்ததை மெய்ப்பிக்கிறது.

## (ந) அருச்சுனன் தேர்

இது தருமராசர் தேரைப் போன்றதே. இஃது உண்மையில் சிவன் கோயிலாகும். ஆனால், புத்தப்பள்ளி அமைப்பை யுடையது.

## (ச) திரௌபதி தேர்

இது தமிழ்நாட்டில் ஊர்த் தேவதைகட்கு இருக்கும் சிறு கோயில்போல அமைந்துள்ளது. சிற்ப வேலைப்பாடு மிக்கது. இங்குள்ள கல் யானை, கற்சிங்கம், நந்தி என்பன சிறந்த தோற்றத் தோடு விளங்குகின்றன.

## (ரு) சகதேவன் தேர்

இது போன்று பெரிய துர்க்கையின் கோயில் சாளுக்கிய நாட்டில் 'அய்ஹோளே' என்னும் இடத்தில் இருக்கிறது. இது போன்றே பிற்காலத்தில் அமைக்கப்பட்ட விமானம் திருத்தணிகை யில் உள்ளது. சிவபெருமான், துர்க்கை, இந்திரன் இவர்களுக் குரிய ஊர்திகளான நந்தி, சிங்கம், யானையென்பன அவரவர் கோயிலுக்கு முன்னால் அமைக்கப்பட்டுள்ளன.

## கற்சிற்பங்கள்

பாறைகள்மீது புராணக் கதைகள் சிற்பங்களாக அமைக்கப் பட்டுள்ளன. கோவர்த்தன மலையைக் கண்ணன் ஏந்தி நிற்றல், கங்கைக் காட்சி என்னும் இரண்டும் சிறப்புடையன. ஒரு கறவையின் காட்சியும் வேலைப்பாடுள்ளது. ஒரு சிற்பம் அருச்சுனன் தவம் என்று சொல்லப்படுகிறது. அஃது ஓர் ஆற்றின் நீரோட்டத்தையே காட்டுகிறது. நாகர் மகிழ்ச்சியோடு நீராடல், பிராமணன் ஒருவன் நீர்க் குடத்தைத் தோள்மீது சுமந்து செல்லுதல், நீர் அருந்த மான் ஒன்று ஆற்றின் அருகில் வருதல், ஆற்றுக்கு மேற்புறம் இரண்டு அன்னப் பறவைகள் நீரில் வீழ்ந்து நீராட நிற்றல், கீழ்ப்புறம் ஒரு பெருமாள் கோவிலைச்

சுற்றிலும் முனிவர் பலர் இருந்து தவம்செய்தல், பூனை ஒன்று பின்னங்கால்கள்மீது நின்று முன்னங்கால்களைத் தலைக்குமேல் சேர்த்து, யோக நிலையில் இருத்தல், அதனைக் கண்டு எலிகள் அச்சம் நீங்கி அருகில் வந்து பணிதல் ஆகிய இந்தக் காட்சிகள் அனைத்தும் இமயமலை அடிவாரத்தில் கங்கைக்கரைக் காட்சி களையே ஒத்துள்ளன.

**மாமல்லபுரம்**

இது மகாபலிபுரம் என வழங்கப்படுகிறது. மகாமல்லபுரம் என முன்பு வழங்கப்பட்டது. இந்த நகரைக் கடற்கரைப் பட்டின மாக அமைத்துப் பெருமைப்படுத்தியவன் நரசிம்மன் என்பது உண்மை. அம் மன்னன் தன் பெயரை அதற்கு அமைத்தான்.

திருச்சிராப்பள்ளிக்கு அருகில் லால்குடியை அடுத்துப் பெருவள நல்லூர் இருக்கிறது. அதன் அருகில் பல்லவபுரம் எனப் பெயர்கொண்ட சிற்றூர் உள்ளது. பல்லவர் கோட்டை இருந்ததற்குரிய அடையாளங்கள் அங்குக் காணப்படுகின்றன.

**நரசிம்மவர்மனுடைய பட்டப் பெயர்கள் :**

மகாமல்லன், ஸ்ரீபரன், ஸ்ரீமேகன், ஸ்ரீநிதி, இரணசயன், அத்தியந்தகாமன், அமேயமாயன், நயநாங்குரன் என்பன அவன் பட்டப் பெயர்கள்.

# 11. பரமேசுவரவர்மன்
## (கி. பி. 670—685)

### இரண்டாம் மகேந்திரவர்மன் (668 - 670)

இவன் நரசிம்மவர்மன் மகன். இவன் வரலாறு கூறும் பட்டயம் ஒன்றும் இதுகாறும் கிடைத்திலது. இவன் ‘அவ்வவ் வகுப்பார் நடக்க வேண்டும் முறைகளைக் கூறும் அறநூல் வழியாண்டான்’ என்று மட்டுமே வேலூர்ப் பாளையப் பட்டயம் கூறுகிறது. இவன் நீண்ட காலம் ஆண்டதாகத் தெரியவில்லை. இவனுக்குப் பின் வந்த ‘பரமேசுவரவர்மன்’ காலம் கி. பி. 670 - 685.

### பல்லவர்—சாளுக்கியர் போர்

பரமேசுவரன் காலத்தில் சாளுக்கிய அரசனாக இருந்தவன் இரண்டாம் புலிகேசியின் மகனான முதலாம் விக்கிரமாதித்தன் (கி. பி. 655 - 680) ஆவான். அவன் சிறந்த போர் வீரன். அவன் தன் தந்தை பல்லவ மன்னரால் அடைந்த இழிவையும், தலைநகரம் அடைந்த அழிவையும் போக்கிக்கொள்ள எண்ணிப் பல்லவ நாட்டின்மீது படையெடுத்தான். இப் படையெடுப்பைப் பற்றிச் சாளுக்கியர் பட்டயங்களும் பல்லவர் பட்டயங்களும் குறிப்பிடுகின்றன. அவ்விரண்டையும் ஆராய்ந்து முடிவு காணுதல் வேண்டும்.

### (அ) சாளுக்கியர் பட்டயங்கள்

*1.* முதலாம் விக்கிரமாதித்தன் வெளியிட்ட ‘கர்நூல் பட்டயம்’ கூறுவது :—“விக்கிரமாதித்தன் தன் தந்தையின் பட்டத்தைத் தன் வலிமையால் அடைந்தான் ; மூன்று கூட்டரசரை வென்று தன் உரிமையை நிலைநாட்டினான் ; தன் பகைவரைப் பல நாடுகளில் வென்று தன் உரிமையைப் பெற்றான்” என்பது.

2. இவனே வெளியிட்ட 'கத்வல்' பட்டயம் கூறுவது :— "ஸ்ரீவல்லபனுகிய விக்கிரமாதித்தன் நரசிம்மவர்மனது பெருமையை அழித்தான்; மகேந்திரன் செல்வாக்கை அழித்தான். ஈசுவர போத்தரசனை (பரமேசுவரவர்மனை) வென்ருன். இவன் மகாமல்லன் மரபை அழித்தமையால் 'இராசமல்லன்' என்னும் விருதுப் பெயரைப் பூண்டான். இவன் (பரம) ஈசுவர போத்தரசனைத் தோற்கடித்தான். தென்னுட்டின் ஒட்டியாணமாக விளங்கும் காஞ்சியைக் கைப்பற்றினன். அதன் பெரிய மதிற் சுவர் ஏற முடியாததும் உடைக்கக் கடினமானதும் ஆகும். அம் மதிலைச் சுற்றித் தாண்ட முடியாத ஆழமான அகழி இருந்தது" என்பது.

3. விக்கிரமாதித்தன் வெளியிட்ட 'சோரப்' பட்டயம் கூறுவது :—"பல்லவர் கோவைத் தோற்கடித்த பிறகு, விக்கிரமாதித்தன் காஞ்சியை அடைந்தான்" என்பது. 'கேந்தூர்'ப் பட்டயம் "தமிழரசர் அனைவரும் கூடி விக்கிரமாதித்தனை எதிர்த்தனர்" என்று கூறுகிறது.

## (ஆ) பல்லவர் பட்டயங்கள்

1. பரமேசுவரவர்மன் வெளியிட்ட 'கூரம்' பட்டயம் கூறுவது :—"பரமேசுவரவர்மன் பிறருதவியின்றி, பல இலக்கம் வீரரைக்கொண்ட விக்கிரமாதித்தனை; கந்தையைச் சுற்றிக் கொண்டு ஓடும்படி செய்தான்" என்பது.

2. இரண்டாம் நந்திவர்மன் வெளியிட்ட 'உதயேந்திரப்' பட்டயம் உரைப்பது :—"பரமேசுவரவர்மன் பெருவள நல்லூரில் நடந்த பெரும் போரில் வல்லபன் (விக்கிரமாதித்தன்) படையை முறியடித்தான்" என்பது.

3. மூன்றும் நந்திவர்மன் வெளியிட்ட 'வேலூர்ப் பாளைய'ப் பட்டயம் பகர்வது :—"பரமேசுவரவர்மன் தன் பகைவரின் அகந்தையை அடக்கியவன். அவன் சாளுக்கிய அரசனது பகையாகிய இருளை அழிக்கும் பகைவனாக இருந்தான்" என்பது.

### ஆராய்ச்சி

இருதிறத்தார் பட்டயங்களும் வெற்றி ஒன்றையே பெற்றதாகக் கூறுகின்றன. ஆயினும், இரண்டு சிறப்பு மொழிகளை இங்குக் காணல் வேண்டும். (1) சாளுக்கியர் காஞ்சியைக் கைப்பற்றியது. (2) பல்லவர் பெருவள நல்லூரில் சாளுக்கியரைத் தோற்கடித்தது. இரண்டும் உண்மையாகவே இருத்தல் வேண்டும். இவையிரண்டும் ஒரே படையெடுப்பில் வெவ்வேறு காலத்தில் நடந்தன என்று கொள்ளின் உண்மை புலனாகும்.

விக்கிரமாதித்தன் முதலில் பல்[illegible]ோற்கடித்துக் காஞ்சியைக் கைப்பற்றினன். பிறகு [illegible]கத[illegible] பட்டயம் கூறுமாறு) சோழ நாட்டில் உள்ள [illegible]பு[illegible]த ([illegible]றையூரை) அடைந்து தங்கினன். பல்லவர் ப[illegible]டயம [illegible]பருவள நல்லூர், திருச்சிராப்பள்ளிக்கு 19·2 கி.[illegible] [illegible]ள்ளது. எனவே, அஃது உறையூருக்கு அண்[illegible]த யாகும். விக்கிரமாதித்தன் தோல்வியுற்ற இடம் பெருவள நல்லூர் ஆகும். (எப்பொழுதும்தான் தோற்ற செய்தியைத் தோற்ற அரசன் குறிப்பிட மாட்டான் அல்லவா?) ஆதலின், காஞ்சியை இழந்ததாகப் பல்லவர் பட்டயங் கூறவில்லை. முதலில் வெற்றி கொண்ட சாளுக்கியன் பின்னர்ப் பெருவள நல்லூரில் தோல்வியுற்றான் என்பது உண்மையாகும்.

இறுதியில் பல்லவப் பேரரசன் வெற்றி பெற்றான். இருதிறத்தார்க்கும் கடுமையான இழப்பு (நட்டம்) ஏற்பட்டது. சாளுக்கிய மன்னன் புறங்காட்டி ஓடி ஒளித்தான்.

கயிலாச நாதர் கோயில் கல்வெட்டு ஒன்று "பரமேச்சுரன் வாதாபியை அழித்தான்" எனக் கூறலால், 'இவன் விக்கிரமாதித்தனைத் துரத்திச் சென்று நரசிம்மனைப்போலவே சாளுக்கியர் தலைநகரையும் அழித்து மீண்டான்' என்பதை அறியலாம்.

### சாளுக்கியர் - பாண்டியர் போர் (கி. பி. 674 - 675)

விக்கிரமாதித்தன் உறையூரில் தங்கிய பிறகு பாண்டிய நாட்டைத் தாக்கினன். விக்கிரமாதித்தனை நெல்வேலியில்

வென்றவன் நெடுமாறனேயாவன் என்பதை "வில்வேலிக் கடல் தானையை நெல்வேலிச் செருவென்றும்" எனவரும் வேள்விக்குடிச் செப்பேட்டு அடி, குறிப்பாக உணர்த்துகின்றது. வில்வேலி என்பவன் சாளுக்கியன் படைத்தலைவனாக இருக்கலாம். "வில்லவனை நெல்வேலியிற் புறங்கண்ட பராங்குசன்" என்பது சின்னமனூர்ச் செப்பேட்டு அடி. 'வில்வேலி, வில்லவன்' என்பன 'வல்லபன் வல்லவன்' என்பவற்றின் திரிபாக இருக்கலாம். வல்லபன் என்பது, சாளுக்கியர்க்கு இருந்த பொதுப் பெயராகும். தென்னாட்டில் அக்காலத்தில் 'கடல் போன்ற தானை'யுடைய பேரரசர் வேறு இல்லை. பல்லவர், சாளுக்கியர் என்னும் இருவருமே யாவர். அத்தகைய பெரும் படையையுடைய பேரரசனை வென்றமையாற்றான் நெடுமாறனுக்கு இரண்டு நூற்றாண்டுகட்குப் பின் இருந்தவரான சுந்தரர்,

> "நிறைக்கொண்ட சிந்தையான் நெல்வேலி வென்ற
> நின்றசீர் நெடுமாறன் அடியார்க்கும் அடியேன்"

என்று தம் திருத்தொண்டத் தொகையுட் கூறியுள்ளார்.

நெல்வேலி என்னும் இடத்தில் வெற்றியில் ஆழ்ந்து கிடந்த விக்கிரமாதித்தனுக்கும், சிவபத்தியில் ஆழ்ந்து கிடந்த நெடுமாறனுக்கும் போர் நடந்தது. முடிவில் நெடுமாறன் வெற்றி பெற்றான்.

'நெல்வேலி' என்பது புதுக்கோட்டைச் சீமையில் உள்ள 'நெல்மலி' என்னும் ஊராகும்.

## பல்லவர் - கங்கர் போர்

பரமேசுவரன் காலத்தில் கங்க அரசனாக இருந்தவன் பூவிக்கிரமன் (கி. பி. 650 - 670). அவனுக்குப் பின் முதலாம் சிவமாறன் (கி. பி. 679 - 726) அரசன் ஆனான். இவருள் பூவிக்கிரமன் விழிந்தம் முதலிய பல இடங்களில் பல போர்கள் பல்லவனோடு செய்ததாகக் கூறப்படுகிறது. ஆயின் பல்லவர் பட்டயங்களில் இவை குறிக்கப் பெறவில்லை.

## கூரம் - கோயில் (முதற்கோயில்)

பரமேசுவரவர்மன் சிறந்த சிவபத்தன். இவன் தன் பெரு நாட்டின் பல பாகங்களில் சிவன் கோயில்களைக் கட்டினான். பலவற்றைப் புதுப்பித்தான். இவன் கூரம் என்ற சிற்றூரில் சிவன் கோயில் ஒன்றைக் கல்லாற் கட்டினான். அதற்கு இவ்வரசன் 'பரமேசுவரமங்கலம்' எனத் தன் பெயர் பெற்ற சிற்றூரை மானியமாக விட்டான். அங்குக் கட்டப்பட்ட கோயில் 'வித்யாவிநீத பல்லவ - பரமேசுவர க்ருகம்' எனப் பெயர் பெற்றது. இக் கோயிலே தமிழகத்து முதற் கற்கோயிலாகும். இப்பொழுது சிவன் கோயில்களில் நடக்கும் எல்லா வழிபாடுகளும் இவன் காலத்திலும் நடந்து வந்தன என்பதைக் கூரம் பட்டயத்தால் அறியலாம்.

## மாமல்லபுரம்

இவன் மாமல்லபுரத்தில் கணேசர் கோயில் ஒன்றை ஒரு கல்லால் அமைத்தான். இராமாநுசர் மண்டபம் என்பதையும் அமைத்தான். தருமராசர் தேரின் மூன்றும் அடுக்கை முடித்தான். அந்த அடுக்கில் 'ரணசயன்' (ரணரசிகனை விக்கிரமாதித்தனை வென்றவன்) 'அத்யந்தகாமப் பல்லவேசுர க்ருகம்' என்பவற்றை வெட்டுவித்தான். இவற்றால் இவன் 'ரணசயன், அத்யந்தகாமன்' என்னும் பெயர்களைத் தரித்தவன் என்பது புலனாகிறது. இவன் கணேசர் கோயிலில் 11 வடமொழிச் சுலோகங்களையும் வெட்டுவித்தான்.

இந்த வடமொழிச் சுலோகங்களால் இந்தப் பரமேசுவரவர்மனுடைய வீரமும் சிவபத்தியும் நன்கு புலனாகும். இவனுக்குச் சித்திரமாயன், குணபாசனன், அத்யந்தகாமன், ஸ்வஸ்தன், ஸ்ரீநிதி, ஸ்ரீபரன், ரணசயன், தருணாங்குரன், காமராகன் முதலிய விருதுப் பெயர்கள் இருந்தன என்பதும் விளங்குகிறது. தருமராசர் மண்டபம், கணேசர் கோயில், இராமாநுசர் மண்டபம் என்பன யாவும் சிவன் கோயில்களே என்பது இவ்விடங்களில் உள்ள கல்வெட்டுக்களால் நன்கு அறியலாம்.

இவனுடைய கல்வெட்டுக்களால் இப் பெருவேந்தன் வடமொழியிற் சிறந்த புலமையுடையவனாய் இருந்தான் என்பது

அறியலாம். கண்மணிகளைக்கொண்டு சிவலிங்க வடிவாக அமைக்கப் பட்ட முடியைத் தலையில் அணிந்திருந்த இப் பேரரசனது சிவபக்தி யாவரும் பாராட்டத்தக்கது.

## இவன் காலத்து அரசர்

கங்க அரசன் பூவிக்கிரமன் முதலாம் சிவமாறன் என்பவன், சாளுக்கிய மன்னன் முதலாம் விக்கிரமாதித்தன் (கி. பி. 655 - 680) என்பவனும், பாண்டிய மன்னன் நெடுமாறன் (கி. பி. 540 - 680) என்பவனும் இவன் காலத்து அரசராவர்.

# 12. இராசசிம்மன்
## (கி. பி. 666—705)

### போர்கள் - முன்னுரை

இராசசிம்மன் காலத்தில் (கி. பி. 685 - 705) எந்தப் போரும் நடந்ததில்லை என்றே வரலாற்று ஆசிரியர் அனைவரும் கொண்டனர். ஆயின் இவனுடைய கல்வெட்டுக்களையும் இவன் காலத்துச் சாளுக்கிய அரசனான விநயாதித்தன் (கி. 680 - 696) தொடர்பான பட்டயங்களையும் ஊன்றிப் படித்து ஆராய்ந்தால், இவன் காலத்தில் பல்லவர் சாளுக்கியர் போர் நடந்தது என்பதை உறுதியாக நம்பலாம்.

### பல்லவர் கல்வெட்டுக்கள்

இராசசிம்மன் கல்வெட்டுக்களில் இவன் 'சிறந்த மற்போர் வீரன் ; யானை நூல் அறிவில் வத்சராசனையும் பகதத்தனையும் ஒத்தவன் ; போரில் விசயனுக்கும் இராமனுக்கும் ஒப்பானவன்; உடல் வலியாலும் புகழாலும் நரசிம்ம அவதாரத்தை ஒத்தவன் ; போர் வீரரை அழிப்பவன் ; போரில் மனவுறுதியுடையவன் ; போரில் செல்வத்தை வெல்லுபவன் (பகைவருடைய பொருளைப் போரில் கைப்பற்றுபவன்) வீரத்தில் மகேந்திரனை ஒத்தவன் ; திடீரென இடிக்கும் இடி போன்றவன் ; போரில் களைப்படையாதவன் ; செருக்கரை அடக்குபவன்...'' என்றெல்லாம் குறிக்கப்பட்டுள்ளன. இவன் வீரம் பற்றியும் போர்த்திறம் பற்றியும் மேலும் பல கூறப்பட்டுள்ளன.

போரே செய்யாத ஒருவனைப் பற்றி இத்துணைத் தொடர்கள் வர இடமில்லையன்றோ? இத் தொடர்களை நோக்க, இவன் ஒன்றுக்கு மேற்பட்ட போர்களில் ஈடுபட்டுத் தன் வீரத்தையும் பொறுமையையும் காட்டி வெற்றி பெற்றிருத்தல் வேண்டும் என்பது தானே புலப்படும். ஆகவே, இராசசிம்ம பல்லவன் யாருடன் போரிட்டான் என்பதை நோக்குவோம் :

## போரிட்டவன் விநயாதித்தனே

முதலாம் விக்கிரமாதித்தன் கி. பி. 674 - 5இல் பரமேசுவர வர்மனால் பெருவள நல்லூரில் முற்றிலும் முறியடிக்கப்பட்டான். அவன் தன் காலத்தில் மறுமுறை பல்லவனைத் தாக்கவில்லை. அவன் தன் இறுதிக்காலத்தில் தனக்குப்பின் பட்டம்பெற இருந்த தன் செல்வ மைந்தனைத் தான்பெற்ற பெருந் தோல்விக்கு ஈடாகப் பல்லவரைப் பழிவாங்குமாறு கட்டளையிட்டிருக்கலாம். சிறந்த வீரனாகிய விநயாதித்தன் பரமேச்சுர பல்லவன் இறந்த பின் இராசசிம்மன் கி. பி. 680இல் அரசன் ஆனதும் தன் தந்தை கட்டளைப்படி பல்லவ நாட்டின்மீது படையெடுத்தான்.

## பல்லவர் - சாளுக்கியர் போரின் பயன்

இப் போரினால் சாளுக்கியனுக்கும் நன்மை இல்லை. என்னை? விநயாதித்தன் எந்த நன்மையும் பெற்றதாகச் சாளுக்கியர் பட்டயங்கள் குறிக்காமையின் என்க. பல்லவனும் பெற்ற நன்மை ஒன்றும் இல்லை. இவனுக்கு முன் இருந்த அரசர்கள் ஆற்றிய ஓயாப்போர்களால் துன்புற்ற பல்லவ நாடு, இவன் ஆட்சியின் தொடக்கத்திலும் துன்புற நேர்ந்தது. பழைய போர்களின் விளைவும் திரண்டு கொடிய வற்கடமாக மாறியது.

## பல்லவர் - கங்கர் போர்

மேற்சொன்ன பல்லவர் சாளுக்கியர் போருக்கு முன்னோ பின்னோ இராசசிம்மன் கங்க நாட்டின்மீது படையெடுத்தான். இப் படையெடுப்பு பூவிக்கிரம கங்கன் (கி. பி. 650 - 670) பல்லவர்க்கு இழைத்த இன்னலுக்கு ஏற்ற பரிசாகும் என்று கூறப்படுகிறது. அப்பொழுது கங்கபாடியை ஆண்ட முதலாம் சிவமாறன் சாளுக்கியருடன் சேர்ந்துகொண்டு பல்லவனை வென்ற தாகக் கங்கர் பட்டயம் கூறுகின்றது.

இங்ஙனம் வடக்கிலும், மேற்கிலும் பகைவர் இருந்து இடர் விளைத்து வந்தமையாற் போலும், இராசசிம்மன் கல்வெட்டுக்க ளெல்லாம் இராசசிம்மனுடைய போர்ச் சிறப்பையும், வீரத்தையும்

நாட்டைப் பகைவரிடமிருந்து காத்தமையையும் தன் பெருமை குன்றாது பேரரசனாகவே இருந்து வந்ததையும் பாராட்டிக் கூறலாயின.

## கோடிய பஞ்சம்

"இப் பேரரசன் காலத்திற்குமுன் பல்லவர்க்கும் சாளுக்கியர்க்கும் ஓயாத போர்கள் நடைபெற்றன. அதனால், நாட்டில் பெரிய வற்கடம் உண்டாயிற்று. அதனால், அரசனாகிய இராசசிம்மனே காஞ்சியைத் துறக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அவன் அவைப் புலவரான தண்டி என்பாரும் கற்றோர் பலரும், நாடெங்கும் அலைந்து திரிந்தனர். குடிகள் பெருந் துன்பம் உழன்றனர். சாலைகள் சீர்கெட்டுக் கிடந்தன. குடும்பங்கள் நிலை கெட்டன. அரசியல் நிலை தடுமாறிற்று" என்று தண்டி தாம் எழுதிய 'அவந்திசுந்தரிகதா' என்னும் நூலிற் கூறியுள்ளார்.

இக் கொடிய பஞ்சம் கி. பி. 686 முதல் 689 வரை மூன்று ஆண்டுகள் இருந்ததாகச் சீன நூல் ஒன்று கூறுகிறது. இது இராசசிம்மன் காலமே யாகும். அப்பொழுது வச்சிரபோதி என்னும் பௌத்தப் பெரியார் ஒருவர் காஞ்சிக்கு வந்தார். அவரை இராசசிம்மன் வற்கடம் தீர இறைவனை வேண்டுமாறு, வேண்டியதாக முற்சொன்ன சீன நூல் கூறுகிறது. அப் பெரியார் வேண்டியபோது மழை வந்ததாக அந் நூல் கூறுகிறது. வேலூர்ப் பாளையப் பட்டயமும் வற்கடத்தின் கொடுமையைக் குறிப்பிடுகிறது.

## கோயில்கள் கட்டிய சிறப்பு

வற்கடத்திற்குப் பிறகு இராசசிம்மன் தென்இந்தியாவில் புகழ்பெற்று விளங்கும் கயிலாச நாதர் கோயிலைக் காஞ்சியிற் கட்டினான். பிறகு காஞ்சியில் ஐராவதேச்சுரர் கோயிலையும் கட்டினான். மாமல்லபுரத்தில் கடற்கரை ஓரமாக உள்ள கோயிலை அமைத்தான். பனைமலைக் கோயிலையும் அமைத்தான். ஒவ்வொரு கோயிலிலும் தன் விருதுப் பெயர்களை வெட்டுவித்தான். கைலாச நாதர் கோயிலில் மட்டும் 250 விருதுப் பெயர்களை வெட்டுவித்துள்ளான். இவன் சைவசித்தாந்தத்தில் பேரறிவுடை

யவன். இசைக் கருவிகள் இசைப்பதில் விஞ்சையனை ஒத்தவன் என்பதும் அவ் விருதுப் பெயர்களால் புலப்படுகின்றன.

## வான்ஒலி கேட்ட வரலாறு

சென்னைக்கும் திருவள்ளூருக்கும் (திருஎவ்வுளூர்) இடையில் உள்ளது தின்னனூர். இதன் திருத்தமான பெயர் திருநின்றவூர் என்பது. அப் பதியில் நான்மறைவல்ல அந்தணர் பலர் இருந்தனர். அவருள் ஒருவர் பூசலார் என்பவர். அவர் பேரன்பு கொண்டு இறைவனுக்குக் கோயில் ஒன்று கட்ட எண்ணினார். கைப்பொருள் இல்லாமையால் பலரிடமும் கேட்டு வாங்க முயன்றார். பொருள் சேரவில்லை. எனவே, தம் மனத்தினாலேயே இரவும் பகலும் முயன்று எல்லாவகை அமைப்புக்களும் பொருந்தக் கோயில் ஒன்று கட்டினார். அந்தக் கோயிலுள் இறைவனை அமர்த்தும் குடமுழுக்கு விழா நடத்த ஒரு நாளைக் குறிப்பிட்டார். காஞ்சியில் கைலாச நாதர் கோயிலைக் கட்டிய இராசசிம்மன் தன் கோயிலில் இறைவனை அமர்த்தும் குடமுழுக்கு விழா நடத்துவதற்கும் அந்த நாளையே குறிப்பிட்டிருந்தான். அற்றைக்கு முன்னாள் இரவில் சிவபெருமான் பல்லவ மன்னனுடைய கனவில் தோன்றி "யாம் பூசலார் கட்டியுள்ள கோயிலில் எழுந்தருளப் போவதால் மன்னனாகிய நீ குடமுழுக்கு விழா நடத்த வேறொரு நாளைக் கொள்ளுக" என்று கூறினார். அதுகேட்டு வியந்த மன்னன் திடுக்கிட்டு திருநின்றவூர் சென்று, பூசலாரைக் கண்டு, அவர் கட்டிய கோயில் யாண்டு உளதெனக் கேட்டான்.

மன்னன் கூறிய மாற்றங் கேட்ட பூசலார் திடுக்கிட்டு இறைவன் தம்மையும் ஒரு பொருட்படுத்தி மன்னன் கனவில் சொல்லிய செய்தி கேள்விப்பட்டு, நடந்த வரலாறு முழுதும் கூறினார். அவர் மனத்தால் கட்டிய கோயிலின் பெருமையை அறிந்த மன்னன் அடியாரை வணங்கி விடைபெற்றுச் சென்றான். பல்லவன் கனவில் கேட்ட மொழிகளையே 'வானொலி கேட்டல்' எனக் கல்வெட்டுக் கூறுகின்றது. இம் மன்னன் மாமல்லபுரத்திலும் சில கோயில்களைக் கட்டியுள்ளான். இவன் கட்டிய கோயில்களுள் காஞ்சியில் உள்ள கைலாச நாதர் கோயிலே அக்காலத்துச் சிற்பிகளின் திறத்தை விளக்குவதாக உள்ளது.

## இரண்டாம் பரமேசுவரவர்மன் (கி. பி. 705 - 710)

இவன் இராசசிம்மன் மகன். இவனது மூன்ரும் ஆண்டுக் கல்வெட்டு ஒன்று, வீரட்டானேச்சுரர் கோயிலில் காணப்படுகிறது. அதற்குப் பிற்பட்ட கல்வெட்டு ஒன்றும் கிடைக்காமையால், இவன் சிறிது காலமே அரசாண்டான் என்று கொள்ளவேண்டும். காசக்குடிப் பட்டயம் "இவன் கலியை வென்ருன்; அமைதியான வாழ்க்கையை நடத்திஞன்; பிரகஸ்பதி விதித்த வழியில் குடிகளை நடத்திஞன்; உலகத்தைக் காத்தான்" என்று கூறுகிறது.

வேலூர்ப் பாளையப் பட்டயம், "இவன் கலியை வென்றவன்; மநு கூறிய விதிகளின்படி நாட்டை ஆண்டவன்" என்று கூறுகிறது. இவன் காஞ்சியில் உள்ள 'பரமேச்சுர விண்ணகரம்' எனப்படும் வைகுந்தப் பெருமாள் கோயிலைக் கட்டியவன் என்று அறிஞர் கூறுகின்றனர். திருவதிகையில் உள்ள சிவன் கோயிலையும் கற்களால் அமைத்தவன் இவனே என்றும் கருதுகின்றனர்.

# 13. புதிய பல்லவர் மரபு

## சில செய்திகள்

இரண்டாம் பரமேசுவரவர்மனுடன் சிம்மவிஷ்ணு மரபு முடிந்துவிடுகிறது. இரண்டாம் பரமேசுவரவர்மனுக்குப்பின் புதிய மரபைச் சேர்ந்த இரண்டாம் நந்திவர்மன் என்பவன் பட்டம் பெற்றதாகச் சில பட்டயங்கள் பகர்கின்றன. உதயேந்திரப் பட்டயம் 'இரண்டாம் பரமேசுவரவர்மனுக்குச் சித்திரமாயன் என்னும் மைந்தன் இருந்தான். அவனுக்குப் பட்டம் கிடைக்க வேண்டுமென்று தமிழரசர் முயன்றனர்' என்று கூறுகிறது. கொற்றங்குடிப் பட்டயம் இரண்டாம் நந்திவர்மனுக்குமுன் இரண்யவர்மன் ஆண்டதாகக் கூறுகிறது. ஆனால், தண்டன் தோட்டப் பட்டயம் இதனைக் கூறாமல் 'இரண்யவர்மன் உலக நன்மைக்காகப் பிறந்தான்; தன் பகைவரைக் காட்டிற்கு ஓட்டினான்; குடிகளைச் செம்மையுறப் பாதுகாத்தான்' எனக் கூறுகிறது. இந்த இரண்யவர்மன் யாவன்? அடுத்த பக்கத்தில் அரச மரபைக் காண்க.

## வைகுந்தப் பெருமாள் கோயிற் சிற்பங்கள்

காஞ்சி வைகுந்தப் பெருமாள் கோயிலில் உள்ள வரிசை வரிசையான சிற்பங்கள் அக்கால நிலைமையைப் பெரிதும் விளக்கு கின்றன. அவற்றின்கீழ்ச் சில செய்திகள் செதுக்கப்பட்டுள்ளன. முதற் சிற்பம் இரண்டாம் பரமேசுவரவர்மன் இறப்பைக் குறிக் கிறது. அங்கு அமைச்சர், கடிகையார், மூலப்பிரகிருதி, இரண்ய வர்மன் இவர்கள் குறிக்கப்பட்டுள்ளனர். நான்காம் சிற்பத்தில் ஸ்ரீமல்லன், இரணமல்லன், சங்கிராமமல்லன், பல்லவமல்லன் இந் நால்வரும் இரண்யவர்மன் பிள்ளைகளாகக் குறிக்கப்பட் டுள்ளனர். அவ்விடத்தில் 'பரமேசுவரன் நான் போவேன் என்று தொழுது நின்ற இடம்' என்பது குறிக்கப்பட்டுள்ளது. பிறகு இரண்யவர்மராசனும், தரணிகொண்ட போசரும், நகரத்தாரும்,

காடகமுத்தராயரும் குறிக்கப்பட்டுள்ளனர். பின்னர், இளம் பல்லவ மல்லன் 'நந்திவர்மன்' என்னும் பெயரால் அபிடேகம் செய்யப் பெற்ற செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது.

சிம்மவர்மன்

| | |
|---|---|
| சிம்மவிஷ்ணு | பீமவர்மன் |
| மகேந்திரவர்மன் I | புத்தவர்மன் |
| நரசிம்மவர்மன் I | ஆதித்தவர்மன் |
| மகேந்திரவர்மன் II | கோவிந்தவர்மன் |
| பரமேசுவரவர்மன் I | இரண்யவர்மன் |
| நரசிம்மவர்மன் II | |
| பரமேசுவரவர்மன் II | |
| (சித்திரமாயன்—சிறுவன்) | நந்திவர்மன் II |

இச் சிற்பங்களை முதலில் இருந்து இறுதி வரை நன்கு நோக்குவோமாயின், பல்லவர் மரபை முதலிலிருந்து நன்கு விளக்கிச் செல்லலைக் காணலாம். இவற்றைப் பதிப்பித்த ஆராய்ச்சியாளர் எழுதியுள்ளதைக் கீழே காண்க.

இரண்டாம் பரமேசுவரவர்மன் இறந்த பிறகு கடிகையாரும், மூலப் பிரகிருதியாரும், அமைச்சரும், இரண்யவர்ம மகாராசனைக் கண்டனர். தமக்கோர் அரசனைத் தரவேண்டினர். உடனே இரண்யவர்மன் தன் மைந்தர் நால்வரையும் அழைத்து, 'யார் அரசராக விரும்புகிறீர்?' என்று கேட்டான். முதல் மூவரும் மறுத்தனர். பன்னிரண்டு வயதுடைய பல்லவ மல்லன் தான்

அரசனாக விழைவதை வணக்கத்தோடு கூறினான். தரணி கொண்ட போசர் தன் இசைவைத் தருமாறு இரண்யவர்மனை வற்புறுத்தினார்.

பிறகு தந்தையும் தரணிகொண்ட போசரும் தந்த கைப் படைகளை ஏந்திப் பல்லவமல்லன் பல மலைகளையும் காடுகளையும் கடந்து காஞ்சிக்கு வந்தான். அவனைப் பல்லவடி அரையன் பெருஞ் சேனையுடன் எதிர்கொண்டு வரவேற்று யானைமீது அமர்த்தி அழைத்து வந்தான். பல்லவமல்லனை நகரச் செல்வரும், 'காடக முத்தரையர்' முதலிய சிற்றரசரும், பிறரும் வரவேற்று முடிசூட்டி அபிடேகம் செய்தனர். நந்திவர்மன் என்னும் பெயரை அபிடேகப் பெயராகச் சூட்டினர்.

'விடேல் விடுகு, கத்வாங்கதரன், ரிஷபலாஞ்சனன்' என்னும் பட்டத்திற்குரிய விருதுப் பெயர்களும் வழங்கினர். நந்திவர்மன் அரசனானான்.

## இரண்யவர்மன்

கொற்றங்குடிப் பட்டயம், 'இரண்யவர்மன் அரசனாக இருந்தான்' என்று கூறலும், தண்டன் தோட்டப் பட்டயம் 'இரண்ய வர்மன் பெருவிரன் - பகைவரை விரட்டியவன்' என்று பலபடக் கூறி, அவன் அரசன் எனப் பொருள்படுமாறு கூறலும் ஆராயற்பாலன. ஆனால், பல்லவர் வழிமுறை கூறும் பல பட்டயங்கள் அவன் பெயரை (அரசனாக)க் குறிக்கவில்லை. எனவே, இவ் விருவகைப் பட்டயங்கட்கும் மதிப்பைத் தந்து நோக்குழி, 'இரண்ய வர்மன்' தன் மகனை (பன்னிரண்டு வயதுடைய) பல்லவமல்லன் பட்டம் பெற்ற காலம் முதல் உரிய பருவம் வரும் வரை அவன் சார்பாக நின்று, பல்லவ நாட்டைப் பாதுகாத்தான் எனக் கோடலே பொருத்தமுடையதாகும்.

## புதிய மரபு ஏன் வந்தது?

சிம்மவிஷ்ணுவின் தம்பி பீமவர்மன். பீமவர்மன் மரபில் வந்தவன் இரண்யவர்மன். இரண்யவர்மன் மகன் இரண்டாம் நந்திவர்மன் என்னும் பல்லவமல்லன். இம் மரபினரே 8, 9ஆம்

நூற்றாண்டுகள் முடியப் பல்லவ நாட்டை ஆண்டனர். சிம்ம விஷ்ணு மரபினர் ஆட்சி இரண்டாம் பரமேசுவரவர்மனோடு முடிவுற்றுவிட்டது. அவனுக்குச் சித்திரமாயன் என்னும் மைந்தன் இருந்தான். ஆயின், அவன் அரசனாகி ஆட்சி புரிவதற்குப் பொதுமக்கள் இடம் கொடுக்கவில்லை. ஏன்? பல்லவ நாட்டிற்கு வடமேற்கே நெடுங்காலப் பகைவராகிய சாளுக்கியர் பகை பாராட்டிப் போர்புரியும் முனைப்புடன் காத்திருந்தனர். அதே நேரத்தில் தெற்கில் பாண்டியர் பல்லவரை வென்று நாடு பிடிக்க வேண்டும் என்னும் எண்ணம் கொண்டிருந்தனர். இவற்றை நோக்கிய அமைச்சர் முதலிய பொறுப்புள்ளவர்கள் சிறுவனாகவும் திறமையற்றவனாகவும் இருந்த சித்திரமாயனை விடுத்து, வல்லமை வாய்ந்த இரண்யவர்மனையே அரசனாகுமாறு வேண்டிக்கொண்டனர். அவன் அதனை மறுத்துத் தன் வீர மகனாகிய இரண்டாம் நந்திவர்மனையே அரசு கட்டிலில் அமர்த்தினான் எனக் கொள்வது பொருத்தமாகும்.

பன்னிரண்டு வயதுடைய இளைஞனான பல்லவமல்லன் 'நான் அரச பதவி ஏற்றுக்கொள்கிறேன்' என்று தந்தையிடம் கூறினது நோக்கற்பாலது. தனக்கு முன் பிறந்தார் மூவரும் பதவி ஏற்க மறுத்தபோது, அஞ்சாநெஞ்சுடன் அரசு கட்டில் ஏற ஒப்புக்கொண்டது பாராட்டற்குரியதாகும்.

## இப் புதிய பல்லவ மரபு அரசர்கள்

இரண்டாம் நந்திவர்மன்
(கி. பி. 710 - 775)
|
தந்திவர்மன்
(கி. பி. 775 - 825)
|
மூன்றாம் நந்திவர்மன்
(கி. பி. 825 - 850)
|
பிற்பட்ட பல்லவர்
(கி. பி. 850 - 893)

# 14. இரண்டாம் நந்திவர்மன்
## (கி. பி. 710—775)

### வரலாற்று அடிப்படைகள்

இவனுடைய ஆட்சிக் காலத்தின் 65ஆம் ஆண்டுக் கல்வெட்டுக் கிடைத்துள்ளது. அதனால், இவன் ஆட்சிக் காலம் ஏறக்குறைய 65 ஆண்டுகள் என அறிஞர்கள் கருதுகின்றனர். இவ்வளவு நீண்டகாலம் ஆண்ட பல்லவ மன்னர் வேறு ஒருவரும் இல்லை. இவன் கால வரலாற்றை அறிய உதவுவன பல பட்டயங்களாகும்.

## பல்லவர்—பாண்டியர் போர்

### போருக்குக் காரணம்

பல்லவர்க்கும் பாண்டியர்க்கும் போர் நடந்ததற்கெல்லாம் சிறந்த காரணம் கொங்கு நாட்டு உரிமை பற்றியதாகும். கொங்கு நாடு ஒரு காலத்திற் பாண்டியரிடமும் மற்றொரு காலத்திற் பல்லவரிடமும் கைமாறி வந்தது. (1) நந்திவர்மன் கொங்கு நாட்டைப் பிடிக்க முயன்றான். அதற்காகப் பாண்டிய மன்னன் போரிட வேண்டியவன் ஆனான். (2) அடுத்த காரணம் சித்திரமாயன் (பரமேசுவரன் மகன்) பாண்டியனைச் சரணடைந்திருந்தது. இவ்விரண்டு காரணங்களாலும் பாண்டியர் அரிகேசரி பராங்குச மாறவர்மன் (கி. பி. 710 - 765) நந்திவர்மனைத் தாக்க சமயம், பார்த்திருந்தான்.

### போர்

கும்பகோணத்துக்கு அருகில் உள்ள 'நாதன் கோவில்' என்னும் இடம் நந்திபுரம் எனப் பெயர் பெற்றிருந்தது. அந்த நந்திபுரக் கோட்டைக்குள் பல்லவன் தங்கியிருந்தான். அப்பொழுது பாண்டியன் படையெடுத்துச் சென்று அந்தக் கோட்டையை முற்றுகையிட்டான்.

அப்பொழுது பல்லவனுக்கு நல்வேளை பிறந்தது. பல்லவர்க்கு வழி வழியாகப் படைத் தொண்டு செய்து வந்த 'பூசான்' என்பவன் மரபில் பிறந்த உதயசந்திரன் என்னும் படைத்தலைவன் பெருஞ் சேனையுடன் நந்திபுரத்துக்கு விரைந்து அல்லி மலர் இதழ்போல் ஒளிர்ந்த தன் வாளால் சித்திரமாயனையும் பிறரையும் கொன்றான். பாண்டியருடைய படையை நிம்பவனம், சூதவனம் முதலிய பல இடங்களில் வென்றான். ஆனால், பாண்டியருடைய பட்டயங்கள் நெடுவயல், குறுமடை, மன்னிக்குறிச்சி முதலிய இடங்களில் பாண்டியன் வெற்றி பெற்றான் எனக் கூறுகின்றன. குழும்பூரில் நடந்த போரில் பாண்டியன் பல்லவனுடைய கரிகளையும் பரிகளையும் கைக்கொண்டான் என்று அப் பட்டயங்கள் கூறுகின்றன. இருவர் கூறும் கூற்றுக்களும் உண்மையே. சில இடங்களில் பாண்டியனும் சில இடங்களில் பல்லவனும் வெற்றி பெற்றனர் என்றே கொள்ளவேண்டும். ஆயினும், இறுதியில் பல்லவன் வெற்றி பெற்றான் என்பதில் ஐயமில்லை.

## உதயசந்திரன்

இரண்டாம் நந்திவர்மன் பரிவேள்வி செய்ய விழைந்து குதிரையை வடக்கே அனுப்பினான். அது வேங்கி நாடு சென்றது. அதனை ஆண்ட விட்ணு இராசன் என்னும் கீழைச் சாளுக்கியன் பல்லவன் பெருமையை ஒப்புக்கொண்டான். ஆயின், அவனுக்குக் கீழ்ப்பட்ட பிருதிவி வியாக்கிரன் என்பவன் அக் குதிரையைக் கட்டிவிட்டான். உடனே உதயசந்திரன் அங்குச் சென்று அச் சிற்றரசனைப் போரில் முறியடித்து நாட்டைவிட்டுத் துரத்தி மீண்டான். தோற்றவனுடைய விலையுயர்ந்த அணிகலன்களைப் பல்லவ மன்னனுக்குப் பரிசளித்தான். பல்லவமல்லனது நீண்ட ஆட்சிக்கும், பெற்ற வெற்றிகட்கும் உதயசந்திரனே சிறந்த காரணமாவான் என்பதில் ஐயமில்லை.

## பல்லவர் - சாளுக்கியர் போர்கள்

(1) பல்லவன் பாண்டியரோடு போர் செய்தபொழுது விக்கிரமாதித்தன் காஞ்சியை எளிதிற் பற்றி அங்குத் தங்கி இன்பமாகக் காலங் கழித்தான். (2) உதயசந்திரன் தமிழரசரைத் துரத்திக் கொண்டு தெற்கே சென்றபொழுது, பல்லவன் தன்னிடம் இருந்த

படையுடன் சென்று விக்கிரமாதித்தனை எதிர்த்துத் துரத்தினன். (3) அவ்வமயம் விக்கிரமன் மகனான இளவரசன் கீர்த்திவர்மன் பெரும் படையுடன் வந்து பல்லவனைக் காஞ்சியினின்றும் விரட்டிப் பல பொருள்களைக் கைப்பற்றினன். (4) இந்த நெருக்கடியான நிலையில் உதயசந்திரன் போந்து கீர்த்திவர்மனைத் துரத்திச் சென்று பல்லவ நாட்டிற்கு அப்பால் விட்டனன். (5) உதய சந்திரன் அப்படியே வடக்கே சென்று வேங்கிப் பகுதியில் வெற்றி கண்டு மீண்டான். இதற்கு உதயேந்திரன் கொற்றங்குடி, வக்க லேரிப் பட்டயக் குறிப்புக்கள் அனைத்தும் செவ்வையாகப் பொருந்தி வருவதைக் காணலாம்.

### படையெடுப்பின் பயன்

விக்கிரமாதித்தன் சிறந்த கலையுணர்வு உடையவன்; அவன் கயிலாச நாதர் கோயிலைக் கண்டு வியந்தான். தன் சாளுக்கிய நாட்டில் கயிலாச நாதர் கோயில் கும்பம் போன்ற கும்பங்களைக் கொண்ட கோயில்களைப் பல்லவர் முறையில் அமைத்தான். அவனுக்குப் பின் அந் நாட்டில் கட்டப்பட்ட கோயில்களில் இப் பல்லவர் முறையைக் கண்டு களிக்கலாம்.

## II

இரண்டாம் கீர்த்திவர்மன் கி. பி. 746 இல் சாளுக்கிய அரசனானன். அவனது ஆட்சியில் கி. பி. 757 இல் பல்லவர் சாளுக்கியர் போர் கடுமையாக நடைபெற்றது. இப் போர் வெம்பை என்ற இடத்தில் முற்றுப்பெற்றது. கீர்த்திவர்மன் போரில் இறந்தான். அவனுடன் சாளுக்கியப் பேரரசு ஒழிந்தது.

### இரட்டர் - பல்லவர் நட்பு

இரண்டாம் கீர்த்திவர்மன் ஆட்சியில் இரட்ட மரபினன் ஒருவன் சிற்றரசனாக இருந்தான். அவன் பெயர் தந்திதுர்க்கன் என்பது. அவன் நந்திவர்ம பல்லவனுடைய அன்பைப் பெற்றுச் சாளுக்கிய நாட்டைக் கைப்பற்றினன். அவன் கி. பி. 725 முதல் 758 வரை இருந்த இரட்ட மரபின் முதல் மன்னன் ஆவான்.

தந்திதுர்க்கன் என்பவனுக்கு வைரமேகன் என்ற மறு பெயரும் உண்டு. அவன் காஞ்சியை வென்றதாக ஒரு கல்வெட்டுக் கூறுகிறது. அந்த வைரமேகனையும் பல்லவமல்லனையும் காஞ்சியில் கண்டதாகத் திருமங்கையாழ்வார் பாடியுள்ளார். எனவே, இருவரும் சமாதான நிலையில் காஞ்சியில் இருந்தனர் எனக் கொள்வது பொருந்தும். நந்திவர்மன் மனைவி ரேவா. அவள் மகன் தந்திவர்மன். இதனை வேலூர்ப் பாளையப் பட்டயம் கூறுகின்றது.

இவற்றை நன்கு ஆராய்ந்த அறிஞர், 'இரட்ட அரசனை வைரமேகன் காஞ்சியைக் கைப்பற்றியதும், பல்லவமல்லன் அவனிடம் பெண் பெற்று மணந்திருத்தல் வேண்டும். அவனுக்குப் பிறந்த மகனுக்குத் தந்திவர்மன் என்னும் பாட்டன் பெயரை இட்டிருத்தல் வேண்டும் என்று முடிபு கொண்டனர்.

## முதலாம் கிருஷ்ணன்

இவன் தந்தி துர்க்கனின் சிற்றப்பன். தந்தி துர்க்கன் கி. பி. 725 முதல் 758 வரை ஆண்டு இறந்தான். அவனுக்குப் பிள்ளை இன்மையால் முதலாம் கிருஷ்ணன் தன் முதுமைப் பருவத்தில் கி. பி. 758 முதல் 772 வரை அரசனாக இருந்தான். இவன் 'கன்னரதேவன்' என்ற பெயரையும் கொண்டிருந்தான்.

## பல்லவர் - கங்கர் போர்

இரண்டாம் நந்திவர்மன் காலமெல்லாம் போர்களிலேயே கழிந்தது என்னலாம். அவன் 'உக்ரோதயம்' என்னும் வைரம் பதித்த கழுத்தணியைக் கங்க அரசனிடமிருந்து கைப்பற்றினான் என்று ஒரு பட்டயம் கூறுகின்றது. பல்லவனுடன் போரிட்ட கங்க அரசன் ஸ்ரீபுருஷன் என்பவன். அவன் கி. பி. 726 முதல் 776 வரை ஆண்டான். இப்போர் பல்லவனது 58ஆம் ஆட்சி ஆண்டில் வெளியிட்ட தண்டன் தோட்டப் பட்டயத்தில் காணப்படலால், பல்லவ மல்லனது முதுமைப் பருவத்தில் இது நடந்ததாகல் வேண்டும் எனக் கொள்ளுதல் தவறாகாது.

## சமயப் பணி

இரண்டாம் நந்திவர்மனை பல்லவ மல்லன் சிறந்த வைணவன். இவனை 'அரிசரணபரன்' என்று காசக்குடிப் பட்டயமும், 'முகுந்தன் திருவடிகளைத் தவிர வேறு ஒன்றிற்கும் அவன் தலை வணங்கவில்லை' எனத் தண்டன் தோட்டப் பட்டயமும் கூறுகின்றன. இவனே வைகுந்தப் பெருமாள் கோயிலை நன்கு அமைத்தவன். இவன், (1) கூரத்தில் உள்ள கேசவப் பெருமாள் கோயிலையும், (2) திருவதிகை வீரட்டானேசுரர் கோயிலையும், (3) புதுக்கோட்டையில் உள்ள குன்றாண்டார் கோயிலையும் கட்டினான். கோயில்களுக்கு மிகுதியான தானங்கள் செய்தான். இவன் காலத்தில் பல்லவ நாட்டில் சமணரும் புத்தமதத்தினரும் இருந்தனர். திருமங்கையாழ்வார் பாடல்களால் இக் கருத்து உண்மையாகிறது.

இரண்டாம் நந்திவர்மனிடம் பரிசு பெற்றுச் சென்ற மறையவர்கள் நான்கு மறைகளையும் ஆறு அங்கங்களையும் நன்கு கற்றவர்கள். செய்யுள், கூத்து, இசை இவற்றில் வல்லவர்கள். நல்ல ஒழுக்கம் உடையவர். இவரை 'இருள் அகற்றும் ஒளி அனையர்' என்று காசக்குடிப் பட்டயம் முதலியன கூறுகின்றன. இம் மன்னனும் சிறந்த கல்விமான், படைக்கலப் புலவன், இசை விருப்பன், செய்யுள் செய்வதில் வால்மீகி போன்றவன், வில் வித்தையில் இராமன், அரசியலில் பிரகஸ்பதி எனப் பலபடப் பட்டயங்கள் பகர்கின்றன.

## பல்லவப் பேரரசின் நிலை

இரண்டாம் நந்திவர்மன் தன் காலத்தில் வடக்கிலும், தெற்கிலும், மேற்கிலும், பல போர்கள் செய்தனன் ஆயினும் தன் பெருநாட்டில் ஒரு சிறு பகுதியையும் இழக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இவன் ஆட்சி மண்டலம் வடவேங்கடம் முதல் புதுக்கோட்டை வரை பரவியிருந்தது. இவனது பேரரசு முன்னிலும் மிக்க வன்மை பெற்று விளங்கியது. நாட்டில் கல்விநிலை, சமயநிலை முதலியன நன்கு பரவியிருந்தன.

# 15. தந்திவர்மன்
## (கி. பி. 775—825)

### பிறப்பும் ஆட்சிக் காலமும்

தந்திவர்மன் இரண்டாம் நந்திவர்மன் மகன். இவன் இராட்டிரகூடப் பெண்மணியான 'ரேவா'வுக்குப் பிறந்தவன். ('ரேவா' என்பது நருமதையாற்றின் பெயர்) இராட்டிரகூட மன்னன் தந்திதுர்க்கன் (வைரமேகன்) மகள் வயிற்றுப் பெயரன் ஆதலின், இவன் தந்திவர்மன் எனப்பட்டான். இவன் தன் பாட்டனைப் போலவே வைரமேகன் என்னும் பெயரும் பெற்றிருந்தான். இவன் பட்டயங்களும், கல்வெட்டுக்களும் திருச்சிராப்பள்ளிக் கோட்டத்திலிருந்து வடக்கே திருச்சானூர் வரை பரவியுள்ளன. இவன் குறைந்தது 51 ஆண்டுகள் அரசாண்டான் என்பது கல்வெட்டுக்களால் தெரிகின்றது.

### சிறப்பும் மணமும்

இவன் செந்தாமரைக் கண்ணனை திருமாலின் அருட் பிறவியாகப் பிறந்தவன். அன்பு, அருள், ஈகை, ஒழுக்கம் இவற்றுக்குப் புகலிடமானவன். இவன் கதம்பர் குலமகளான அக்களநிம்மதி என்பவளை மணந்துகொண்டவன்.

### இரட்ட அரசர் கிருஷ்ணன் I (கி. பி. 780 - 794)

தந்திதுர்க்கன் இறந்த பிறகு, அவன் மாமனை கிருஷ்ணன் அரசன் ஆனான். இவன் சாளுக்கியர் மரபை அழித்தான். ஏலாபுரம் (எல்லோரா) கூற்றத்தில் உள்ள ஒரு மலையில் மிகவும் பாராட்டத்தக்க கயிலாசநாதர் கோயிலைக் கட்டுவித்தான். இவன் கி. பி. 772இல் இறந்தான்.

### தந்திவர்மன் அரசியல்

தந்திவர்மன், திருச்சிராப்பள்ளிக் கோட்டத்தில் ஆலம் பாக்கம் என்னும் சிற்றூர்க்கு அண்மையில் தனது பட்டப்

பெயரான 'மாற்பிடுகு' என்பதை வைத்து 'மாற்பிடுகு ஏரி' ஒன்றை வெட்டுவித்தான். புதுக்கோட்டைச் சீமையில் 'வாலிஏரி' ஒன்றை இவனுடைய சிற்றரசனாகிய வாலிவடுகன் கலிமூர்க்க 'இளஅரையன்' என்பவன் வெட்டுவித்தான். இவன் காலத்தில் பெருங் கிணறுகளும், வாய்க்கால்களும், கேணிகள், குளங்கள் முதலிய நீர்நிலைகளும் தோண்டப்பெற்றன. மக்கள் பல ஏரிகளைத் தூய்மை செய்தனர். இவை சிறந்த அரசியற் பண்பாகும்.

இவன் காலத்துக் கல்வெட்டுக்கள் பல காணப்படுகின்றன. அவற்றுள் ஒன்று புகழ்த்துணை விசையரசன் என்பவன் 30 காடி நெல்லும் 5 கழஞ்சு பொன்னும் திருவல்லிக்கேணி கோயிலுக்குத் தானம் செய்தான் என்பதாகும்.

இவன் காலத்தில் பல கோயில்கள் கட்டப்பட்டன. ஆலம் பாக்கம் என்னும் ஊருக்குத் 'தந்திவர்ம மங்கலம்' எனத் தன் பெயரிட்டு—அதனைப் பிரமதேயமாக வழங்கினான்.

---

# 16. மூன்றும் நந்திவர்மன்
## (கி. பி. 825—850)

மரபு

இவன் தந்திவர்மனுக்கும் கதம்ப அரசர் மகளுக்கும் பிறந்தவன் என்ற செய்தி வேலூர்ப் பாளையப் பட்டயத்தால் உறுதியாகிறது.

பட்டயங்கள்

(1) இவன் காலத்துப் பட்டயங்களில் சிறந்தது வேலூர் பாளையப் பட்டயமேயாகும். இது பொன்னேரிக் கூற்றத்துத் திருக்காட்டுப் பள்ளியில் உள்ள சிவன் கோயிலுக்கு ஒரு சிற்றூரைத் தேவதானமாக விடுத்ததைக் கூறுவது.

(2) மற்றொன்று இவன் தெள்ளாற்றில் வென்ற வெற்றிச் சிறப்பைக் கூறுவது.

(3) குடிமல்லம் பரசுராமேசுவரர் கோயில் கல்வெட்டு ஒன்று இவனது 23ஆம் ஆட்சியாண்டைக் குறிக்கிறது. அதன்பின் வேறு கல்வெட்டுக் கிடைக்கவில்லை. இப் பேரரசன் 25 ஆண்டுகள் ஆட்சி புரிந்தான் என்று அறிஞர் கருதுகின்றனர்.

இவன் காலத்துக் கல்வெட்டுக்களைக்கொண்டு இவன் தனது ஆட்சியின் ஆறும் ஆண்டிற்குப் பின்னும் 10ஆம் ஆண்டிற்கு முன்னும் தெள்ளாற்றுப் போரில் வாகை சூடியிருத்தல்வேண்டும் என்பது அறியப்படுகிறது.

நந்திக் கலம்பகம்

இந் நூல் இந்த அரசன்மீது பாடப் பெற்றது. இந் நூலில் உள்ள பல பாக்கள் இவனுடைய தெள்ளாற்றுப் போரையே குறிக்கின்றன. இந் நூலால் இவனைப்பற்றி அறியப்படுவன பின்வருவன. அவை :—

"இவன் சந்திர மரபினன்; சேர சோழ பாண்டியரை வெறியலூர், பழையாறு, வெள்ளாறு, தெள்ளாறு இவற்றில் நடந்த போர்களில் முறியடித்தவன். மூவேந்தரிடமும் வடபுலத் தரசரிடமும் திறை பெற்றவன்" என்பன. இவன் பல இடங்களில் "அவனிநாரணன், அவனிநாராயணன்" என்று குறிக்கப்பட்டுள்ளான்.

இவன் காலத்தில் காவேரிப்பாக்கம் 'அவனிநாராயண சதுர்வேதி மங்கலம்' எனப் பெயர் பெற்றிருந்தது. இவன் காலத்தில் தமிழ்ப் பெருவணிகன் ஒருவன் சென்று சையாமில் ஒரு குளம் வெட்டினான். அதற்கு 'அவனிநாரணன் குளம்' எனப் பெயரிட்டான் என்பது அங்குள்ள கல்வெட்டு ஒன்றால் தெரிகிறது.

## இவன் கழற்சிங்கனா?

இவன் நந்திக்கலம்பகத்தில் 'கழல்நந்தி' என்றும், 'பல்லவர் கோன் அரி' என்றும் கூறப்படுகிறான். (அரி - சிங்கம்.) இதனால் மூன்றாம் நந்திவர்மனே கழற்சிங்கன் எனப்பட்டான் என்பதில் ஐயமில்லை.

> 'கடல்சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான்
> காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்'

எனச் சுந்தரரால் திருத்தொண்டத் தொகையில் கூறப்பட்டவன் இவனே என்று உறுதியாகக் கொள்ளலாம்.

## பல்லவர் - இரட்டர் போர்

இம் மன்னன் தன் படைகளை வடக்கு நோக்கிச் செலுத்தி இரட்டரோடு போரிட்டு வெற்றி பெற்றான் என்பதை நந்திக் கலம்பகத்தால் அறியலாம். இவனுடைய இரட்டரை வென்ற வடநாட்டு வெற்றியை வேலூர்ப் பாளையப் பட்டயம் உணர்த்துகிறது.

## தெள்ளாற்றுப் போர்

இவன் கி. பி. 830 அல்லது 832க்குள் வடபுலப் போரை முடித்துக்கொண்டு திரும்புவதற்குள், பாண்டியன் மாறன்,

தனக்கு அடங்கிய சேர சோழருடனும் பெரும் படையுடனும் வடவார்க்காட்டுக் கோட்டத்துள் நுழைந்தான். வடக்கே வெற்றி பெற்ற நந்திவர்மன் தன் பெரும் படையுடன் திரும்பி வரும்போது வந்தவாசிக் கூற்றத்தில் உள்ள தெள்ளாற்றில் பாண்டியனை எதிர்த்துப் பெரும் போர் நிகழ்த்தி முற்றிலும் முறியடித்தான். இப் போர் மிகவும் கொடுமையானது. இப் போர் கி. பி. 830 - 832இல் நடந்திருத்தல்வேண்டும். பல்லவன் பாண்டியரை வென்ற செய்தி நந்திக்கலம்பகத்துள் கூறப்பட்டுள்ளது. நந்தி வர்மனைக் காவிரிநாடன் என்றே கலம்பகம் கூறுகிறது. சோழ நாட்டையும் வென்று இவன் தஞ்சையில் பல ஆண்டுகள் வாழ்ந்தான்.

நந்திவர்மன் வடக்கிலும் தெற்கிலும் பெரும்போர் இயற்றினன் ஆதலின் நாட்டில் வறுமையுண்டாகியது. அதனை இவன் நீக்கினன் (செய். 11) எனக் கலம்பக நூல் கூறுகிறது. இதே காலத்தில் சோணாட்டில் பஞ்சம் உண்டானதைக் கோட்புலி நாயனர் வரலாற்ருல் அறியலாம்.

## திருப்பணிகள்

இப் பெருவேந்தன் சிற்றூர்களைத் தேவதானமாக விடுத்தான். அவற்றுள் ஒன்று திருக்காட்டுப் பள்ளியில் உள்ள சிவபெருமான் கோயிலுக்கு ஒரு சிற்றூர் விடப்பட்டது. இவன் திருநாகேச்சரத்தைத் தன் பெயரால் ‘குமார மார்த்தாண்டபுரம்’ எனப் பெயர் சூட்டித் தானமாக விடுத்தனன். திருவிடை மருதூரிற் கோயில் திருப்பணி செய்துள்ளான். நந்திவர்மன் மனைவியான மாறம்பாவையார் தஞ்சையை அடுத்த நியமம் என்னும் சிற்றூரில் உள்ள சிவன் கோயிலுக்குச் சித்திரை நாளில் திருவமுது செய்விக்க ஐந்து கழஞ்சு பொன் அளித்தாள். இவன் அளித்த பிரமதேயங்கள் பல, இவ்வாறு விளக்கெரிக்கவும், நந்தா விளக்கு வைக்கவும், திருப்பதிகம் ஓதுவார்க்கும் பணி செய்வார்க்கும் நெல் அளிக்கவும் இவனும், இவன் ஆட்சியில் இருந்த அதிகாரிகளும் அளித்த நன்கொடைகள் பலவாகும்.

## சிவனடியாருள் ஒருவன்

இவன், "சிவனை முழுதும் மறவாத சிந்தையன்" என்று கலம்பகம் போற்றுகின்றது. சுந்தரர் தம் திருத்தொண்டத் தொகையுள், "கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்" என்று கூறியுள்ளார். வேலூர்ப் பாளையப் பட்டய வரிகளில் இவன், "எனக்குப் பின்வரும் அரசர் இந்தத் திருப்பணியைப் பாதுகாப்பாராக" என்று வேண்டுகின்றான். இவற்றால் இவன் சிவநெறித் தொண்டன் என்பது உறுதியாகிறது.

# 17. பிற்பட்ட பல்லவர்

## நிருபதுங்கவர்மன்

நிருபதுங்கவர்மன் மூன்றும் நந்திவர்மனுக்கு மகன். அமோக வர்ஷ நிருபதுங்கன் என்பது இவன் தாய்வழிப்பாட்டன் பெயர். ஆதலால், பாட்டன் பெயரை இவன் பெற்றுன். இவன் சற்றேறக்குறைய கி. பி. 850இல் பட்டம் பெற்று ஏறத்தாழ முப்பது ஆண்டுகள் ஆட்சி புரிந்தான்.

மூன்றும் நந்திவர்மனுடைய இறுதிக் காலத்தில் அல்லது நிருபதுங்கன் ஆட்சியின் தொடக்க காலத்தில் பாண்டியன் பல்லவரைக் குடமூக்கில் (கும்பகோணத்தில்) வென்றிருத்தல் வேண்டும். பிறகு நிருபதுங்கன் பெரும் படையுடன் சென்று அரிசிலாற்றங்கரையில் சீமாறனை வென்றிருத்தல்வேண்டும் என்டன கல்வெட்டுக்களால் அறியலாம்.

## திருப்புறம்பயப் போர்

சீமாறன் சீவல்லபன் மகனுன இரண்டாம் வரகுண பாண்டியன் (கி. பி. 862 - 880) ஏறத்தாழக் கி. பி. 880இல் பல்லவர்மீது படையெடுத்தான். இவன் 868இல் திருவதிகையில் உள்ள கோயிலுக்குத் தானம் செய்ததாக நிருபதுங்கனது கல்வெட்டுக் கூறுகின்றது. முதலில் பாண்டியன் நிருபதுங்கனிடம் நண்பனுக இருந்தான் என்பதை நன்கு அறியலாம். பாண்டியன் படையெடுத்தபோது நிருபதுங்கன் முதியவன் ஆதலால் இளையவன் அபராசிதனே போருக்குச் சென்றுன். அவனுக்குத் துணையாக அவன் பாட்டனும் கங்க அரசனுமான முதலாம் பிரிதிவிபதி என்பவன் தன் படையுடன் சென்றுன். இந்த நிலையில் விசயாலயன் (கி. பி. 850 - 870) மகனுன ஆதித்த சோழன் (கி. பி. 870 - 907) பல்லவருடன் சேர்ந்து கொண்டான். இம் மூவரும் பாண்டியனைத் திருப்புறம்பயத்தில் எதிர்த்துப் போர் செய்தனர். கடும் போர் நடைபெற்றது.

(திருப்புறம்பயம் என்னும் ஊர் கும்பகோணத்துக்கு அருகில் உள்ளது.) அதில் பிரிதிவிபதி இறந்தான். ஆயினும், பாண்டியன் தோற்று ஓடினன். அபராசிதன் வெற்றி பெற்ருன்.

நிருபதுங்கவர்மனது ஆட்சி முடிவிலேயே பல்லவப் பேரரசின் பெரும்பகுதி சோழர் கைப்பட்டது எனலாம். அபராசிதன் ஆட்சியோடு பல்லவர் பேரரசு முடிவுற்றது.

## பழிக்குப் பழி

ஏறக்குறைய கி. பி. 250இல் சோழரைத் துரத்திப் பல்லவர் தொண்டை நாட்டையும் பிறகு சோழ நாட்டையும் கைப்பற்றி, கி. பி. 890 வரை ஏறத்தாழ 650 வருட காலம் தமிழ்நாட்டை ஆண்டனர். அதன்பிறகு அச்சோழ மரபினரே போரில் வென்று பல்லவரைப் பழி தீர்த்துக்கொண்டனர்.

## கோயில் திருப்பணிகள்

நிருபதுங்கவர்மன் காலத்தில் பல கோயில்களில் புதிய கல்வெட்டுக்கள் தோன்றின. பல திருப்பணிகள் செய்யப்பட்டன. மன்னர் குடும்பத்தாலும், அதிகாரிகளாலும் பொன், ஆடு, எருமை முதலிய நன்கொடைகள் அளிக்கப்பட்டன.

## நிருபதுங்கன் காலத்துக் குகைக்கோயில்

புதுக்கோட்டைச் சீமையில் உள்ள பழியிலிஈச்சுரம் என்ற கோயில், பல்லவ அரசனகிய நிருபதுங்கவர்மன் காலத்தில் குடையப்பட்டது.

## திருத்தணிகைக் கோயில்

இது நிருபதுங்கன் மகன் அபராசிதன் காலத்தில் ஏறத்தாழ கி. பி. 890இல் கட்டப்பட்டது. இதில் இவனது 18ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டுக்கள் கிடைத்தமையால் இக் கணக்குத் தரப்பட்டது. இம் மன்னன் பாடிய வெண்பா ஒன்றும் கல்வெட்டில் காணப்படுகிறது. அபராசிதன் காலத்தில் கச்சிப் பேடு, மாங்காடு, திருவொற்றியூர் முதலிய ஊர்க் கோயில்களில் விளக்கெரிக்க, பெண்கள் மிகுதியான பொன் அளித்துள்ளார்கள்.

திருவொற்றியூரில் உள்ள அபராசிதனது 8ஆம் ஆண்டுக் கல்வெட்டு அக் கோயிலுக்கு அரிசி, நெய், வாழைப்பழம் முதலியன வாங்க ஒருவன் 50 கழஞ்சு பொன் வழங்கிய செய்தியைக் கூறுகிறது. நிலங்களும், ஆடுகளும், பொன்னும் வேறு பலர் அளித்த செய்தியும் அதில் காணப்படுகிறது.

## பல்லவ மரபினர்

கம்பவர்மன் என்பவனைக் குறிக்கும் கல்வெட்டுக்கள் வட ஆர்க்காட்டுக் கோட்டத்தில் இருபதுக்குமேல் கிடைத்துள்ளன. சிலர் இவன் நிருபதுங்கனுடன் பிறந்தவனாக இருக்கலாம் என்று கருதுகின்றனர். கம்பவர்மன் அறங்கள் பல செய்துள்ளான்.

சந்திராதித்தன், விசய நரசிம்மவர்மன், விசய ஈசுவரவர்மன் என்பவர்களின் கல்வெட்டுக்கள் சிலவும் கிடைத்துள்ளன. இவர்கள் யாவரும் நிருபதுங்கன் காலத்தில் கோட்டங்கட்குத் தலைவர்களாக இருந்த பல்லவ அரச மரபினர் என்று அறிஞர் கருதுகின்றனர்.

## பிற்காலப் பல்லவர்

பிற்காலத்தில் நுளம்ப பல்லவர் சிலர் பல்லாரிக் கோட்டமும், மைசூரின் ஒரு பகுதியும் சேர்ந்த நுளம்ப பாடியைக் கி. பி. 13ஆம் நூற்றாண்டு வரை ஆண்டு வந்தனர். அவர்கள் ஆதித்த சோழன் வழிவந்த பேரரசர்களுடன் ஓயாது போர் நடத்தி வந்தனர். பலர் சிற்றரசராகியும், அரசாங்க அலுவலர்களாகியும் இருந்தனர். அவர்களிற் சிலர் மேலைச் சாளுக்கியரிடத்தும் வேலை பார்த்தனர். அவர்கள் ‘காஞ்சிப் பல்லவர் மரபினர்’ என்று தம்மைக் கூறிக்கொண்டனர். ஆதலின், காஞ்சியில் பல்லவர் ஆட்சி வீழ்ந்த பின், பல்லவ அரச மரபினர் தமது பழைய இடத்துக்குச் சென்று குறுகிய நிலப்பகுதியை ஆளலாயினர் என்பது தெரிகிறது. வேறு பலர் சோழ நாட்டில் கூடலூர், சேந்தமங்கலம் முதலிய இடங்களில் சிற்றரசராகவும், தானைத் தலைவராகவும் வளநாட்டுத் தலைவர்களாகவும் இருந்து வந்தனர்.

# 18. பல்லவர் ஆட்சிமுறை

## நாட்டுப் பிரிவு

பல்லவப் பெருநாடு பல இராட்டிரங்களாக (மண்டலங்களாக)ப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வோர் இராட்டிரமும் பல விஷயங்களாக (கோட்டங்களாக)ப் பிரிக்கப்பட்டிருந்தது. பல்லவர் பட்டயங்களில் முண்ட ராட்டிரம், வெங்கோ ராட்டிரம் (வேங்கி ராட்டிரம்) முதலிய ஆந்திரப் பகுதி மண்டலங்களும், துண்டக ராட்டிரம் என்னும் தொண்டை மண்டலமும் குறிக்கப்பட்டுள்ளன. பல்லவர் ஆண்ட தமிழ்நாட்டில் கோட்டம், நாடு, ஊர் என்னும் பிரிவுகள் காணப் படுகின்றன. பல்லவர் தமக்குமுன் இருந்த தமிழ்மன்னரும் ஆந்திரமன்னரும் வைத்திருந்த பெயர்களையே தம் நாட்டுப் பிரிவுகட்கும் வைத்திருந்தனர். தொண்டை நாடு புழல் கோட்டம், ஈக்காட்டுக் கோட்டம் முதலாக இருபத்து நான்கு கோட்டங் களாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

## அரசர் மரபு

பல்லவர் பட்டயங்களால் அவர்களுடைய ஆட்சியில் தந்தைக்குப் பின் அவனுடைய மூத்தமகனே பட்டமெய்தினன் என்பதும், அரசனுக்கு மைந்தனில்லாதபோது மன்னனுடைய தம்பி, அல்லது தம்பி மகன் முதலியோர் பதவி ஏற்றனர் என்பதும் பிள்ளை இல்லாது அரசன் இறந்தால் அமைச்சர்களும் பெரியோர்களும் ஒன்றுகூடி அரச மரபிற் பிறந்த ஒருவனை அழைத்து வந்து முடிசூட்டினர் என்பதும்அறியப்படுகின்றன.

## பட்டப் பெயர்கள்

பல்லவ அரசர்கள் தத்தம் தகுதிக்கேற்றவாறு, மகாராசன், தரும மகாராசன், மகாராசாதிராசன் முதலிய பட்டப் பெயர்களைப் பெற்றிருந்தனர்.

## பல்லவர் இலச்சினை

பாண்டியர்க்கு மீனும், சோழர்க்குப் புலியும், சேரர்க்கு வில்லும், கங்கர்க்கு நாகமும், சாளுக்கியர்க்குப் பன்றியும், இலச்சினைகளாகும். அதுபோலப் பல்லவர்க்கு நந்தி இலச்சினை யாகும்.

நந்தி இலச்சினை பொதுவாகப் பல்லவர் சைவசமய உணர்ச்சி உடையவர் என்பதை நன்கு விளக்குகிறது. இரண்டு பக்கங்களிலும் உயர்ந்த விளக்குகள், இடையே நந்தி அமர்ந்துள்ள அழகிய கோலம் கொண்ட பல்லவர் இலச்சினை பார்க்கத்தக்கது. சிங்க இலச்சினை கொண்ட பட்டயங்கள் யாவும் போர் முகத்தி லிருந்து விடப்பட்டவை.

வெற்றியைக் குறிக்கச் சிங்க இலச்சினையே சிறந்ததாகும். பிற்காலப் பல்லவர் அனைவரும் நந்தி இலச்சினையையே நன்கு பயன்படுத்தினர். பல்லவர்க்குக் கொடி நந்திக்கொடி. பல்லவர் காசுகளிலும் நந்தி உருவம் பொறிக்கப்பட்டிருந்தது. மன்னன் தனிப்பட்ட முறையில் சமணம் வைணவம் முதலிய சமயங்களில் இருந்தாலும் பல்லவர் ஆட்சியில் சைவமே அரசியல் சமயமாக இருந்தது என்பது உண்மை.

## பல்லவரது கத்வாங்கம்

கத்வாங்கம் என்பது சிவன் கொண்ட படைகளில் ஒன்று. இதனால், சிவபெருமான் 'கத்வாங்கன், கத்வாங்கதரன்' எனக் கூறப்பட்டுள்ளான். பிற்காலப் பல்லவர் தம் சமய அடையாள மாகக் கத்வாங்கப் படையைக் கொண்டிருந்தனர். முதலாம் பரமேசுவரவர்மன் கத்வாங்கத்தைக் கொடியிலே பெற்றிருந்தான். இரண்டாம் நந்திவர்மன் பட்டமேற்றபோது அவனுக்குக் கத்வாங்கப் படையும் கொடுக்கப்பட்டது.

## அமைச்சியல்

பல்லவர் ஆட்சியில் அமைச்சர் குழு இருந்தது. 'பிரம்ம ராசன், பேரரையன்' என்பன அமைச்சர் பெறும் அரசியல் பட்டங்கள். பல்லவர் ஆட்சியில் உள்படு கருமத் தலைவர்களும்

(தனிச் செயலாளர்களும்) இருந்தனர். வாயில் கேட்பார், கீழ் வாயில் கேட்பார் என்னும் செயலாளர், துணைச் செயலாளர் களும் இருந்தனர்.

## அறங்கூர் அவையம்

பெருநகரங்களில் அறங்கூர் அவையங்கள் (நீதி மன்றங்கள்) இருந்தன. அவற்றுக்கு அதிகரணங்கள் என்பது பெயர். அறங்கூர் அவையத்துத் தலைவர்க்கு 'அதிகரண போசகர்' என்பது பெயர். சிற்றூர்களில் இருந்த அறங்கூர் அவையம் 'கரணம்' எனவே வழங்கப்பட்டது. அரண்மனை அலுவலாளர் களாகப் பொற்கொல்லரும், பட்டய எழுத்தாளரும், புலவர்களும், வேறு பல அதிகாரிகளும் இருந்தனர்.

## பல்லவர் படைகள்

பல்லவரிடம் தேர்ப்படை இருந்ததற்குச் சான்றுகள் வெளிப்படையாகத் தெரியவில்லை. யானை, குதிரை, காலாட் படைகள் இருந்தன. அவை பண்பட்ட படைகள்; வெற்றி பெறுவதில் சிறந்தன. பல்லவரிடம் கடற்படையும் இருந்தது. கடல் வாணிகமும் நடைபெற்றது.

## பிரமதேயச் சிற்றூர்கள்

இவை மறையவர் பொருட்டே புதியனவாக உண்டாக்கப் பட்டவை. சில மறையவர்க்கு நன்கொடையாக அளிக்கப் பெற்றவை.

## தேவதானச் சிற்றூர்கள்

கோயில்களுக்கென்றே இறையிலியாக விடப்பட்ட சிற் றூர்கள்.

## சிற்றூர்க் கோயில்கள்

கோயிலால் பல குடும்பங்கள் பிழைத்தன. 'தனிப்பரிவாரம், 'கோயில் பரிவாரம்', 'அமிர்த கணத்தார்' அனைவரும் கோயில் வருவாயைக்கொண்டு பிழைத்தவர் ஆவர். கோயில்களை அடுத்து அடியார்கட்கும் ஏழைகளுக்கும் உணவுச்சாலைகள் நடைபெற்று

வந்தன. கோயில் அல்லது உணவுச்சாலைக்கு ஊராரிடமிருந்தும், வணிகரிடமிருந்தும், இக்கால வழக்கம்போல மகன்மை (மகமை, அல்லது மகிமை) யாக நெல் அரிசி முதலியவற்றை வாங்கி வந்தனர்.

### பள்ளிச் சந்தம்

'தேவதானம், பிரமதேயம்' என்பனபோலப் 'பள்ளிச் சந்தம்' என்பது சமணப் பள்ளிக்கென விடப்பட்ட இறையிலி நிலங்கள் ஆகும். பல்லவர் காலத்தில் பௌத்தர் மடங்களுக்கு நிலம் விட்டதாக ஒரு சான்றும் கிடைக்கவில்லை.

### ஏரிப்பட்டி

சிற்றூர்களில் உள்ள ஏரிகளை அடிக்கடி பழுது பார்க்க வேண்டிய செலவுக்காகச் சில நிலங்கள் ஊரவையார் பார்வையில் விடப்பட்டிருந்தன. அவை ஏரிப்பட்டி எனப்பட்டன.

## பலவகை வரிகள்

### தென்னை பனை வரிகள்

தென்னை, பனை முதலியன வளர்த்துப் பயன்பெறுவோர் செலுத்தும் வரிகளும், மிகச் சிறந்த (செங்கொடி வேலி அல்லது சித்திர மூலம்) மருந்துச் செடிகளைப் பயிரிடுவோரும், மருக் கொழுந்து பயிரிடுவோரும், நீலோற்பலம் என்னும் குவளைச் செடிகளைப் பயிரிடுவோரும், செங்கழுநீர் நடுவோரும் அரசாங்கத் துக்கு வரி செலுத்தினர்.

### பிற வரிகள்

கால் நடைகளாற் பிழைப்பவர், புரோகிதர், வேட்கோவர், பலவகைக் கொல்லர், வண்ணார், ஆடை விற்போர், ஓடக்காரர், தரகர், செக்கர், ஆடை நெய்பவர், வலைஞர் முதலிய பலவகைத் தொழிலாளரும் வரி செலுத்தினர்.

### பல்லவர் அரசாங்கப் பண்டாரம்

பல்லவர் காலத்தில் சில ஆண்டுகளில் போர் முதலியவற் றாலும் மழையின்மையாலும் பஞ்சம் வந்து மக்கள் வறுமையால்

வாடினாலும் பெரும்பாலான ஆண்டுகளில் செழிப்புடன் வாழ்ந்தனர் என்பது உண்மையாகும்.

பல்லவர் நடத்திய போர்களையும் அவர்கள் கட்டிய அல்லது குடைவித்த புகழ்பெற்ற கோயில்களையும் நினைக்கும்பொழுது அவர்தம் செல்வநிலை நன்னிலையில் இருந்திருத்தல்வேண்டும் என எண்ண வேண்டியிருக்கிறது. பண்டாரத்தில் மாணிக்கம் முதலிய கற்களைப் பாதுகாப்பவர் மாணிக்கப் பண்டாரம் எனப்பட்டனர்.

## நில அளவை

பல்லவர் ஆட்சிக்குட்பட்ட நாடுகளில் நிலங்கள் முழுவதும் செவ்வையாக அளக்கப்பெற்று இருந்தன. கள்ளியும், கல்லும் நட்டு எல்லை வகுத்தல் அக்காலப் பழக்கமாக இருந்தது.

## நீர்ப்பாசன வசதிகள்

பல்லவர் காடு வெட்டிகள் ஆதலால் நீர்ப்பாசன வசதிகள் மிகுதியாகச் செய்ய வேண்டியவர் ஆயினர். பல்லவர் நாட்டில் ஏரிகளும், ஆறுகளும், கிணறுகளும், குளங்களும் மிகுதியாக இருந்தன. பல்லவ மன்னர் பெயர்களால் சில வாய்க்கால்கள் வெட்டப்பட்டன. அவற்றுள் ஒன்று வைரமேகன் (நந்திவர்மன்) வாய்க்கால் என்பது.

## நீட்டல் அளவை

'கலப்பை, நிவர்த்தனம், பட்டிகா, பாடகம்' என்னும் நான்கு அளவைகள் பல்லவர் ஆட்சியில் இருந்தன.

### (1) கலப்பை

இரண்டு எருதுகள் பூட்டப்பெற்ற ஒரு கலப்பையைக் கொண்டு குறிப்பிட்ட ஒரு நேரத்தில் ஒருவன் உழும் நிலத்தின் அளவு 'கலப்பை' எனப்பட்டது.

### (2) நிவர்த்தனம்

ஒருவன் ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியிலிருந்து, குறிப்பிட்ட நேரத்திற்குள் நடந்து, புறப்பட்ட இடத்தை அடைந்தவுடன்

அவனால் எல்லை கோலப்பட்ட நில அளவே நிவர்த்தனம் எனப் பட்டது. பிற்காலத்தில் 200 சதுர முழம்கொண்ட நிலப்பரப்பே 'நிவர்த்தனம்' எனப் பெயர் பெற்றது.

(3) பட்டிகா

(பட்டி) ஓர் ஆட்டை ஓர் இடத்தில் ஓர் அளவுடைய கயிற்றில் கட்டினால் அந்த ஆடு அந்தக் கயிற்றின் உதவியால் சுற்றும் அளவுடைய நிலப்பகுதியே பட்டி அல்லது 'பட்டிகா' எனப்படும்.

(4) பாடகம்

பாடகம் என்பது 240 குழிகொண்ட நிலகுமாகும். இந்த அளவைகளோடு (1) நாலு சாண்கோல், (2) பன்னிரு சாண் கோல் முதலிய நீட்டல் அளவைக் கோல்களும் இருந்தன.

முகத்தல் அளவை

நாழிகள் பல பெயர்களைப் பெற்றிருந்தன. அவை, (1) கருநாழி, (2) நால்வாநாழி, (3) மாநாயநாழி, (4) பிழையா நாழி, (5) நாராய(ண)நாழி முதலியன. 'உறி' என்பது ஒரு முகத்தலளவைக் கருவியாகும். எண்ணெய், நெய், பால் முதலியன அளக்கப் பயன்பட்ட சிறிய அளவை 'பிடி' எனப்பட்டது. நெல் முதலியன அளக்க, சோடு, நாழி, மரக்கால், பதக்கு, குறுணி, காடி, கலம் முதலியன பயன்பட்டன,

நிறுத்தல் அளவை

கழஞ்சு, மஞ்சாடி என்பன பொன் முதலியன அளக்கும் நிறுத்தல் அளவை. கழஞ்சு என்பது அரசாங்கப் பொது அளவை. கழஞ்சின் பன்னிரண்டில் ஒரு பாகம் 'மஞ்சாடி' என்பது.

பல்லவர் காசுகள்

பல்லவர் காசுகள் செம்பாலும், வெள்ளியாலும், பொன்னாலும் செய்யப்பட்டவை. அக் காசுகளில் நந்தி இலச்சினை யுண்டு. இஃது அவர்களுடைய சைவசமயப் பற்றினை உணர்த்தும். பாய்மரக் கப்பல் சில காசுகளில் இலச்சினையாக இருந்தது. இஃது அவர்களுடைய கடல் வாணிகச் சிறப்பினை யுணர்த்தும்.

அக் காசுகளின் மறுபுறம் சுவஸ்திகா, வேள்விக்குரிய விளக்கு, சங்கு, சக்கரம், வில், மீன், குடை, சைத்தியம் (கோயில்) குதிரை, சிங்கம் முதலியன இருந்தன.

## பல்லவர் நாட்டில் பஞ்சங்கள்

ஓயாத பெரும் போர்கள் பல்லவர்க்கும், வேற்று வேந்தர் கட்கும் அடிக்கடி நடைபெற்றதால் நாட்டில் பஞ்சம் ஏற்பட்டது. அந் நாள்களில் மழையின்றியும் பஞ்சம் தோன்றியது. பஞ்சத்தை ஒழித்து நாட்டிற்கு நன்மை செய்யப் 'பஞ்சவார வாரியம்' ஏற்படுத்தியிருந்தனர். நந்திவர்மன் காலத்துக் கல்வெட்டு ஒன்றில் பஞ்சவாரமாக நெல் குடிகளிடம் வாங்கிய செய்தி கூறப்பட்டுள்ளது.

## அறப்பணிகள்

ஒருவரை அவரது செயலுக்காகப் பாராட்டி அவர் பெயரால் கோயிலிற் பொன் கொடுத்து விளக்கு வைத்தல் முதலிய அறப்பணிகள் செய்வித்தல் அக்கால வழக்கம். ஊர்களில் உருவச் சிலைகள் செய்து, அமைத்தலும், வீரக் கற்கள் நிறுவுதலும் வெளி நிலங்களில் (சமாதிகள்) பள்ளிப்படைமீது கோயில் கட்டுதலும் உண்டு.

# 19. கலைக் கழகங்கள்

## கல்வி முறை

பண்டைக்காலக் கல்வி முறை இக்காலக் கல்வி முறைக்கு முற்றிலும் மாறுபட்டதாகும். அறம் பொருள் இன்பம் நுகரவும், வீடுபேற்றிற்குரிய நெறியிற் பயிலவும் பழங்காலக் கல்வி முறைகள் பயன்பட்டன.

## ஓவியச் சிற்பக் கலைக் கூடங்கள்

பல்லவ மன்னர்களின் புகழுக்குக் காரணமான ஓவியங்களும் சிற்பங்களும் கற்பித்து வளர்க்கும் கலைக் கூடங்கள் பல்லவ நாட்டில் இருந்தன. காஞ்சியில் வடமொழிக் கல்லூரி சிறப்போடு விளங்கியது. வெளிநாட்டு மன்னர்மக்களும் அதன்கண் வந்து கல்வி கற்றனர். வடமொழி ஆராய்ச்சி முறை கற்பிக்கும் துறையும் அக் கல்லூரியில் இருந்தது. கல்லூரி கடிகை என அழைக்கப் பெற்றது. காஞ்சியிலிருந்து தர்மபாலர் என்னும் அறிஞர் நாலந்தாப் பல்கலைக் கழகத்திற் பேராசிரியராகப் பணியாற்றச் சென்றார். 'கல்வியிற் கரையிலாத காஞ்சிமாநகர்' எனப் பல்லவர் தலைநகரம் அப்பரடிகளால் புகழப் பெற்றது.

## கடிகாசலம்

இரண்டாம் நந்திவர்மன் காலத்தில் சோளிங்கர் (சோழ சிங்கபுரம் : கடிகாசலம்) மலைமீது உள்ள கடிகைக்கு மானியம் விடப்பட்டதாகத் திருவல்லம் கல்வெட்டுக் குறிக்கிறது. இது வைணவர் கலைப் பீடமாக இருந்திருத்தல் கூடும்.

## பாகூர் வடமொழிக் கல்லூரி

பாகூர் என்பது தென்னார்க்காடு மாவட்டத்தில் திருப் பாதிரிப் புலியூருக்கும் புதுச்சேரிக்கும் இடையில் உள்ள பெரும்

பாதையின் அருகில் உள்ளது. இது பல்லவர் காலத்திற் சிறந்திருந்த பெரும் பதியாகும். இங்கு ஒரு வடமொழிக் கல்லூரி சிறப்போடு விளங்கியது. இங்குப் பதினான்கு கலைகளுடன் 18 வகை வித்தைகளும் கற்பிக்கப்பட்டன.

### ஊராண்மை

பல்லவர் ஆட்சியில் 'ஊர்அவைகள்' பல இருந்தன. அவை ஊருக்கு வேண்டிய அனைத்தையும் செய்து வந்தன. வழக்குகளைக் கேட்டு முடிவு கூறி வந்தன. இதனைத் தடுத்தாட் கொண்ட புராணம் முதலியவற்றால் அறியலாம்.

### படைக்கலப் பயிற்சி

கல்வி கற்பித்தும், ஊராண்மை செய்தும், வந்த நான்மறையாளர், தம் சேரிகளைப் பகைவரிடமிருந்து பாதுகாப்பதற்கென்று படைக்கலப் பயிற்சியும் பெற்றிருந்தனர். இத்தகைய பயிற்சியால் பிராமணர் பலர் மேலைச் சாளுக்கியரிடம் மகாசாமந்தராக இருந்தனர்.

### பிரமபுரிகள்

பேரூர்களிலும் நகரங்களிலும் கலைவளர்ச்சியுடைய மறையவர் தங்கியிருந்த இடம் 'பிரமபுரி' எனப்பட்டது. இவர்கட்கு நிலம் மானியமாக விடப்பட்டது. சீர்காழிக்கு உரிய பல பெயர்களுள் 'பிரமபுரம்' என்பதும் ஒன்றாகும். 'பிராமணர்கள் வாழ்ந்த சீர்காழியின் ஒரு பகுதியே பிரமபுரியாக இருந்து பின்பு சீர்காழி முழுதும் 'பிரமபுரி' எனப்பட்டது.

### கோயில்கள்

பல்லவர் காலத்தில் கயிலாச நாதர் கோயில் போன்றவை பல்கலைப் பள்ளிகளாகவும் இருந்து வந்தன. அங்குச் சிற்பம், ஓவியம், இசை, நடனம், நாடகம், சமயக் கல்வி, அறிவியற் கல்வி முதலியன கற்பிக்கப்பட்டன. பத்திரப் பதிவும் (பட்டயமும், கல்வெட்டும் பிறவும்) அங்கு நடைபெற்று வந்தன. பெரிய கோயில்களில் படிக்கும் மண்டபம், நடன மண்டபம், நாடக

மண்டபம், தருக்க மண்டபம் முதலியன இருந்தன. சமய நூல்கள், தேவாரப் பதிகங்கள் முதலியன பாதுகாக்கப்பட்ட இடங்களும் கோயில்களே ஆகும்.

## மடங்கள்

இவை உண்டியும் உறையுளும் அளித்து மாணவர்கட்குக் கல்வி புகட்டும் கலைக் கூடங்களாகவும், துறவிகளும், கற்றுவல்ல பெரியோர்களும், உண்மை அறிவைத் தேடும் சான்றோரும் உறையும் இடங்களாகவும் இருந்தன. ஏழைகள், திக்கற்றவர் முதலியோர்க்குப் புகலிடங்களாகவும் இருந்தன.

## மடத்து ஆட்சிக் குழுவினர்

காவேரிப்பாக்கத்து வரதராசப் பெருமாள் கோயிலில் நிருபதுங்கன் காலத்துக் கல்வெட்டில் 'மடத்துச் சத்த பெருமக்கள்' என்னும் தொடர் காணப்படுகிறது. இதனால், மடத்தை மேற்பார்க்க 'அறிஞர் எழுவர் இருந்தனர்' என்பது தெளிவாகிறது.

## பௌத்தர் கலை இடங்கள்

பல்லவர் காலத்தில் ஸ்ரீபர்வதம் எனப்படும் நாகார்ச்சுன மலை, வேங்கியை அடுத்த குண்டப்பள்ளி, தான்ய கடகம் முதலிய இடங்களில் பௌத்த விகாரங்களும், பள்ளிகளும் இருந்தன என்பது அங்குள்ள சிதைவுகளாலும் நூல் குறிப்புக்களாலும் தெரிகிறது.

## சமணர் கலை இடங்கள்

பல்லவர் ஆட்சிக் காலத்தில் தென் இந்தியாவில் சிறந்த சமண மடம் பாதிரிப் புலியூரில்தான் (பாடலி புத்திரம்) இருந்தது. கி. பி. ஐந்தாம் நூற்றுண்டில் அந்த மடத்தில் புகழ்பெற்ற சிம்மசூரி, சர்வநந்தி என்னும் திகம்பர சமணப் பேரறிஞர் வடமொழியிலும் பிராகிருதத்திலும் புலவராய் விளங்கினர். கி. பி. ஏழாம் நூற்றுண்டில் மருள்நீக்கியார் (அப்பர்) அம் மடத்தில் தருமசேனர் என்னும் பட்டம் பெற்றுத் திகழ்ந்தார்.

## திருப்பருத்திக்குன்றம்

காஞ்சிபுரத்துக்கு 3 கி. மீ. தொலைவில் வேகவதியாற்றங் கரையில் சமண காஞ்சி எனப்படும் திருப்பருத்திக்குன்றம் உள்ளது. இது பல்லவர் காலத்துப் புகழ்பெற்று விளங்கிய சமணர் கோயிலாகும்.

## தமிழ்க் கல்வி

பல்லவர் ஆட்சியில் தமிழ்க் கல்வியும் நன்கு வளர்க்கப் பெற்றது. நாயன்மார்களும், திருமங்கை ஆழ்வார், திருமழிசை ஆழ்வார் முதலிய வைணவப் பெரியார்களும் வாழ்ந்த காலம் இதுவேயாகும். தமிழ் பல்லவர் நாட்டில் ஆட்சி மொழியாக இருந்தது.

# 20. சமய நிலை

## சமண வீழ்ச்சிக்குக் காரணம்

இடைக்காலப் பல்லவர் தமிழகத்தில் இருந்த திகம்பர சமணத் துறவிகளின் பழக்க வழக்கங்கள் மக்கள் உள்ளத்தில் வெறுப்பை வளர்த்தன. ஆடையின்றித் திரிந்தமை, நீராடாது அழுக்குடலுடன் உலாவியமை, பட்டினி கிடத்தல் முதலிய கடுமையான நோன்புகள், சமயத்தின் பெயரால் தற்கொலை செய்து கொண்டமை முதலிய சமணர் பழக்கங்களை மக்கள் வெறுத்தனர்.

சைவசமயத்தைச் சேர்ந்தவர்களும், வேதங்களிலும் ஆறு அங்கங்களிலும், பிற கலைகளிலும் வல்லவர்களுமான மறையவர்கள் நூற்றுக்கணக்கில் பல்லவர் நாட்டில் குடியேறினர். சைவ சமயத்தில் முன்பிருந்த நிலைமாறி வேத வேள்வியே இல்லாத பழைய சிவன் வடவர் கலப்பால் வேள்விக்குரிய மகாதேவன் ஆயினன்.

பாசுபதர், காபாலிகர், காளாமுகர் என்னும் சைவசமயத்தார் தமிழ்நாட்டில் பரவி வாழ்ந்தனர். பிற்காலப் பல்லவருள் சிம்ம விஷ்ணு, நரசிம்மவர்மன், இரண்டாம் நந்திவர்மன் முதலியோர் சிறந்த வைணவப் பற்று உடையவர். அவர்களாற்றுன் பல்லவப் பெருநாட்டில் பெருமாள் கோயில்கள் பல தோன்றின. சைவத்தைப் பின்பற்றிய பல்லவ வேந்தரும் வைணவத்துக்குப் பல வகைகளில் ஆக்கம் அளித்தனர்.

சமயம் காரணமாகப் பல கொடுமைகளும் பல்லவர் நாட்டில் நடைபெற்றன என்பதை மறுக்க இயலாது. சைவ - வைணவப் போராட்டங்களைவிடச் சைவ - சமணப் போராட்டங்களும், வைணவ - சமணப் போராட்டங்களும் நடைபெற்றன.

★

### பட்டயச் சான்று

"இரண்டாம் நந்திவர்மன் தருமசாத்திர முறைப்படி நடவாத மக்களை அழித்து, இந்த நிலத்தைக் கைப்பற்றி வரியிலியாகப் பிராமணர்க்கு அளித்தான்" என்பது உதயேந்திரப் பட்டயத்திற் காணப்படுகிறது. இக் குறிப்பைப்பற்றி அறிஞர் தாமஸ்போக்ஸ், 'இந்த நிலத்துக்கு உரியவர் சமணர்; அவர்களை அழித்து இந் நிலத்தைப் பிறர்க்குக் கொடுத்தமை என்பது பல்லவ மல்லன் வரலாற்றில் ஒரு களங்கத்தை உண்டுபண்ணிவிட்டது. எனினும், இச் செயல் அக்கால நிலையை ஒட்டியதாகும்' எனக் கூறியிருத்தல் கவனிக்கத்தக்கது.

பௌத்த - சமணப் போராட்டங்கள் பெரும்பாலும் ஏழாம் நூற்றுண்டோடு முடிந்துவிட்டன எனக் கூறலாம்.

## உயிர்ப் பலி இடுதல்

### முன்னுரை

கபாலிகர், பாசுபதர் முதலிய சைவசமயப் பிரிவினர் வைரவர்க்கும், காளிக்கும் செந்நீரையும் கள்ளினையும் படைத்தல் வழக்கம். இவ்விரு கடவுளர்க்கும் உயிர்களைப் பலியிட்டும் வந்தனர். இப் பழக்கம் நெடுங்காலமாகவே இந்தியா முழுவதும் பரவியிருந்தது. இது பல்லவர் காலத்திலும் இருந்தது. ஆயின், பல்லவ மன்னர்கள் இந்த வழிபாட்டில் கலந்துகொண்டனர் என்பதற்குச் சான்று இல்லை. அவர்கள் காலத்தில் துர்க்கை, காளி முதலிய பல வடிவங்களில் பெண் தெய்வங்கள் வழிபடப் பெற்றன. கயிலாச நாதர் கோயிலில் சிற்பங்களில், 'வைரவ மூர்த்தி, பிரம்ம சிரச்சேத மூர்த்தி' ஆகிய தேவரைக் குறிப்பனவும் உள. காஞ்சியிலும் மாமல்லபுரத்திலும் உள்ள துர்க்கை, காளி, (மகிடாசுரமர்த்தனி) வடிவங்களைக் கண்ட டாக்டர் ஒகேல் என்பவர், "ஒவ்வொரு சிற்பமும் காளிக்குத் தலையை அறுத்துக் காணிக்கையாகத் தருதலையே குறிக்கின்றது; இச் செயல் பத்தர்களுடைய மனஉறுதியை நன்கு காட்டுகிறது" எனக் குறித்துள்ளார். தலையை அறுக்கத் துணிந்த பத்தனுக்கு

எதிர்ப்புறத்தே வேறொரு பத்தன் தன் உள்ளத்து உணர்ச்சியால் உயர்ந்த பத்திநிலையிலிருந்து வழிபாடு செய்தலையும் அச் சிற்பங்கள் உணர்த்துகின்றன.

சான்றுகள்

வைரவர்க்கும் காளிக்கும் விலங்கு முதலிய உயிர்களைப் பலியிடுதலும் மனிதரைப் பலியிடுதலும் பண்டை வழக்கமே. இதனை வரலாறு கூறுகிறது. திருப்பருப்பதம் என்னும் ஸ்ரீசைலத்தில் சிவபெருமானுக்குக் கொங்கு வீரர் தம் தலைகளையும் நாக்குகளையும் பலியிட்டமை கல்வெட்டுச் செய்தியாகும்.

இப் பிற்காலக் கல்வெட்டுச் செய்திகளையும், முற்காலச் சிற்பங்களையும் நோக்க, பல்லவர் காலத்தில் உயிர்ப் பலியிடுதலைச் சிலரேனும் வழக்கமாகக் கையாண்டு வந்தனர் என்பது உறுதியாகும்.

# 21. இசையும் நடனமும்

முன்னுரை

நாகரிக நாட்டுக் கலைகளாகப் போற்றப்படும் இசை, நடனம், ஓவியம், சிற்பம், காவியம் என்பவற்றைப் பல்லவ அரசர் போற்றி வளர்த்தனர். அவர்தம் குகைக்கோயில்களாலும், கயிலாச நாதர் கோயில், வைகுந்தப் பெருமாள் கோயில் முதலிய கற்றளிகளில் பல்லவர் காலத்து ஓவியங்களையும் சிற்பங்களையும் கண்டுகளிக்கலாம். மகேந்திரவர்மன் இசைக் கலையில் சிறந்த பயிற்சி பெற்றிருந்தான். பொன் நரம்புகளையுடைய வீணை வாசிப்பதில் அவன் மிக மிகத் தேர்ச்சி பெற்றிருந்தான்.

இராசசிம்மன் என்னும் பல்லவ வேந்தனும் இசைப் புலமையுடையவன். அவன் விருதுப் பெயர்களுள் சில அவன் இசைப் புலமையை விளக்குகின்றன. வீணாநாரதன், ஆதோத்ய தும்புரு (தும்புருவைப்போல ஆதோத்ய வீணை வாசிப்பில் வல்லவன்) வாத்ய வித்தியாதரன் (இசைக் கருவியில் வித்யாதரன்) என்பன அவன் விருதுப் பெயர்கள்.

பல்லவர் காலத்து நாயன்மார்களும் ஆழ்வார்களும் இசைப் புலமையில் சிறந்து விளங்கினார்கள். பாணர்கள் என்னும் ஒருவகையார் யாழ்இசைத்து வாழ்ந்தனர். தேவார காலத்து, யாழ், வீணை, குழல், கின்னரி, கொக்கரி முதலாக இருபது வகை இசைக் கருவிகள் இருந்தன.

மகேந்திரன் காலத்து நடனக் கலையும் சிறந்து விளங்கியது. நன்கு வளர்க்கப்பெற்றது. சிற்பங்களில் செதுக்கப்பெற்றது. பல்லவர் கர்லத்துக் கோயிலில் அடிகள்மார், மாணிக்கத்தார், கணிகையர் என்னும் மூவகை யினத்துப் பெண்கள் இசை, நடனக் கலைகளில் சிறந்து விளங்கினர். சிவபெருமான் ஆடிய நடனக் கலையை மகேந்திரவர்மன் தான் எழுதிய 'மத்தவிலாசம்'

என்னும் நூலில் குறிப்பிடுகிருன். அம் மன்னன் காலத்து மாமல்லபுரத்தில் ஆதிவராகர் கோயிலில் அமைத்த சிற்பங்களும் ஓவியங்களும் கண்டு கண்டு வியக்கத்தக்கனவாக உள்ளன.

## கோயில்கள்

பல்லவர் காலத்துக்கு முன்பே, சங்ககாலத்திலும், அதற்கு முன்னரும் கோயில்கள் இருந்தன. அவை மரம், செங்கல் முதலியவற்ருல் கட்டப்பட்டவை. பின்னரே, குகைக்கோயில் முதலிய கருங்கற் கோயில்கள் தோன்றின. கி. பி. 434 முதல் 458 வரை இருந்த சிம்மவர்மன் சிதம்பரத்தில் உள்ள சிற்றம் பலத்துக்குப் பொன் வேயச் செய்தான். அப்பர் காலத்தில் தில்லையில் பொன்னம்பலம் இருந்தது.

கி. பி. 200 முதல் 250 வரை ஆட்சிபுரிந்த கோச்செங்கட் சோழன் எழுபது கோயில்களைக் கட்டியதாகத் திருமங்கையாழ்வார் கூறியுள்ளார். அவருக்கு முன்னரே சம்பந்தரும், அப்பரும் இச் செய்தியைக் கூறியுள்ளனர். தமிழகத்தில் பண்டைக்காலம் முதல் இன்றுவரை கோயில் கட்டும்முறை வளர்ச்சியுற்று வந்துள்ளது.

## முடிவுரை

பல்லவ மன்னர்கட்கு நீண்ட காலமாகவே காஞ்சிபுரம் தலைநகரமாகவும் மாமல்லபுரம் கடற்கரைப் பட்டினமாகவும் இருந்தன. அங்குக் காலந்தோறும் பல வேறு சமயத்தைச் சேர்ந்த மக்களும் மன்னர்களும் இருந்தனர். இயூன் - சங் காலத்தில் காஞ்சி நகரத்தின் சுற்றளவு ஏறத்தாழப் பத்து கி. மீ. இருந்தது. இன்று அஃது எட்டு கி. மீ. அளவில் உள்ளது. இந்த நகர அமைப்புப்பற்றி நகர அமைப்புத் திட்ட வல்லுநரான திரு. கெட்டிஸ் துரை அவர்கள் கருத்து கச்சி நகராண்மைக் கழக அறிக்கையில் (1914 - 15இல்) சிறந்த முறையில் குறிக்கப் பெற்றுள்ளது. அதில் ஒரு பகுதி ஈண்டுக் காண்க :

"காஞ்சி நகரம் எண்ணிறந்த கோயில்கட்கு மட்டுமே பெயர் பெற்றதன்று ; மிக்க தேர்ச்சியுடனும், கூர்ந்த அறிவுடனும்

அமைக்கப்பட்ட நகர அமைப்புக்கும் இந் நகரம் பெயர் பெற்ற தாகும். இந்த நகர அமைப்புத் திட்டத்துக்கு இணையான ஒன்று இந்தியாவில் உள்ள வேறு எந்த நகரத்திலும் இல்லை; வீடுகள் தெருமட்டத்துக்குப் பல அடிகள் உயர்த்திக் கட்டப் பட்டிருத்தல் பாராட்டத்தக்கது. மேனாட்டு உயர்ந்த பெரிய நகரங்களில் காணப்படும் இருட்டுச் சந்துகளும், பலவகை அழுக்குகளும் காஞ்சியிற் காண்டல் அருமை. ஏகாம்பர நாதர் கோயிலைச் சேர்ந்த தேரோடும் வீதிகளும், காமாட்சியம்மன் கோயிலைச் சேர்ந்த தேரோடும் வீதிகளும் ஒன்றுக்கொன்று இடர்ப்படாமல் அமைத்துள்ள முறை வியந்து பாராட்டத்தக்க தாகும்"—இவ்வாறு கெட்டிஸ் துரை கூறியுள்ளார்.

இத்தகைய கோநகரத்தைத் தலைநகராகக்கொண்டு பல்லவ நாட்டையும் இடையிடையே வேற்று நாட்டுப் பகுதிகளையும் ஆண்ட பல்லவருடைய ஆட்சி சிறப்பும் பெருமையும் உடைய தாகும்.

---

# 22. ஓவியங்களும் சிற்பங்களும்

## சித்தன்னவாசல்

சித்தன்னவாசல் என்பது துறவிகள் இருப்பிடம் எனப் பொருள்படும். இது புதுக்கோட்டைக்கு அருகில் நாரத்தாமலைப் புகைவண்டி நிலையத்திலிருந்து 3·2 கி. மீ. தொலைவில் உள்ளது.

இந்தச் சிறிய மலையின்மீது ஏறிச் சென்றால், அழகிய ஓவியங்கள் தீட்டப்பட்ட குகைக்கோயிலைக் காணலாம். இங்குக் காணத்தக்கவை நான்கு ஆகும். அவை : உருவச் சிலைகள் ; நடன மாதர் ஓவியங்கள் ; அரசன் அரசி ஓவியங்கள் ; கூரையிலும் தூண்களிலும் உள்ள ஓவியங்கள் என்பன.

## ஓவியம் எழுதும் முறை

கற்பாறைகளின்மேல் இந்த அழகிய ஓவியங்கள் எவ்வாறு தீட்டப்பெற்றன வெனில், சுவர்ப்புறம் மேடுபள்ளம் இல்லாமல் சமமாக இருப்பதற்குச் சுவர்மீது ஒருநெல் அளவுக்குச் சுண்ணும்புச் சாந்து பூசுவார்கள். சலித்து எடுத்த பூமணல், வைக்கோல், கடுக்காய் ஆகிய மூன்றையும் வெல்லநீர் அல்லது பனஞ்சாறு கலந்து அரைத்து அந்தச் சாந்தினைச் சுவர் அல்லது கூரைமீது பூசுவார்கள். அந்தச் சாந்து உறுதியாகப் பற்றிக்கொள்ளும். ஈரம் காயும்முன்பு மஞ்சட் கிழங்கைக்கொண்டு ஓவியர் இரேகைகளை வரைந்து கொள்வர். சுண்ணும்புடன் கலந்த மஞ்சள் நிறம்மாறிச் சிவப்பாகத் தோன்றுவதுடன் அஃது அழியாமலும் இருக்கும். பிறகு இந்தப் புனையா ஓவியத்தில் நிறங்களைத் தீட்டுவார்கள். சிவப்பு, மஞ்சள் வெள்ளை, நீலம், பச்சை, கறுப்பு ஆகிய நிறங்களைத் தரும் பச்சிலை நிறங்களையே பயன்படுத்துவார்கள். ஈரம் சிறிது குறைந்து, சுவர் நன்றாய் உலர்வதற்கு முன் கூழாங் கற்களைக்கொண்டு சுவர்களை வழவழப்பாக்கி மெழுகிடுவார்கள். இங்ஙனம் தீட்டப்பட்ட ஓவியம் அழியாது நெடுங்காலம் நிலைத் திருக்கும்.

# 23. பல்லவர் காலத்துக் கோயில்கள்

## கோயில் பற்றிய கல்வெட்டு

"செங்கல், சுண்ணும்பு, மரம், உ[illegible]ாமல் மும்மூர்த்திகட்கு விசித்திரசித்தன் (ம[illegible]மத்த கோயில் இது" என்னும் கல்வெட்டு ம[illegible]ப்பட்ட[illegible]ாணப் படுகிறது. இக் கல்வெட்டின் காலம் கி.[illegible] ஆகும். மண்டபப்பட்டுக் கல்வெட்டினுல், அறியத்தக[illegible]திகள் சில உண்டு :

(1) மகேந்திரன் காலத்துக்கு முன்னர்க் கற்கோயில்கள் இல்லை. இருந்த கோயில்கள் செங்கல், சுண்ணும்பு, மரம், உலோகம் ஆகிய இவற்ருல் ஆனவை.

(2) மகேந்திரனுக்கு முன்னரே தமிழ்மக்கள் கோயில் கட்டத் தெரிந்திருந்தனர். ஆனுல், அவை நாளடைவில் அழிந்துவிடத் தக்கவை என்பன.

## பல்லவர் கால இலக்கியங்கள்

பல்லவர் காலம் ஏறத்தாழக் கி. பி. 250 முதல் 900 வரை உள்ள காலம் என்பர். இந்தக் காலத்துக்குப் பிறகு சோழப் பேரரசர்கள் தலையெடுத்தனர். சங்ககாலத் தமிழில் இல்லாத அளவுக்கு வடமொழிக் கலப்பு பிற்காலத் தமிழ் நூல்களில் காணப்படுகின்றன.

யாப்பருங்கல விருத்தி, யாப்பருங்கலக்காரிகை, வீரசோழியம் முதலிய இலக்கண நூல்களாலும் பெரியபுராணம், கம்பராமாயணம், கலிங்கத்துப்பரணி, ஒட்டக்கூத்தர் பாடிய தக்கயாகப் பரணி முதலிய இலக்கிய நூல்கள் கொண்டும் பிற்கால வடமொழிக் கலப்பினை நன்குணரலாம்.

சைவத் திருமுறைகள் நந்திக்கலம்பகம், பாரத வெண்பா, திருமங்கையாழ்வார் பாடல்கள் முதலியன பல்லவர் கால இலக்கியங்களேயாகும்.

முற்றிற்று.

தலைமை நிலையம் :

79, பிரகாசம் சாலை, சென்னை-1.

கிளை நிலையங்கள் :

திருநெல்வேலி-6.

மதுரை-1. கோயமுத்தூர்-1.

கும்பகோணம்-1. திருச்சிராப்பள்ளி-2.

மேலுறை அச்சிட்டவர்:

திருவரங்கனார் அச்சகம், சென்னை-13.